# ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் அஷ்டலக்ஷ்மி விரதம் வேண்டுதலை வாரி வழங்கிடும் வரலக்ஷ்மி விரதம்



வரலட்சுமி விரதம் என அழைக்கப்படும் இவ்விரதத்தை விவாகமாகி சுமங்கலியாக வாழும் சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் மகாவிஷ்ணுவின் தேவியான இலட்சுமி தேவியைக் குறித்துச் அனுஷ்டிக்கும் மிகச் சிறப்பான விரதமாகும். ஆடி மாத பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமையில் வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்விரதம் வரும் 28.08.2015 வெள்ளிக்கிழமை வருகிறது இவ் விரதம் இந்த வருடம் ஆடி மாத வெள்ளிக்கிழமை அமைவதால் அம்பிகையின் அருள் நிறைந்த நாளாக அரங்கேறுகின்றது.

சகல சௌபாக்கியங்களையும் தரும் அஷ்டலக்ஷ்மியை வணங்குவதால் வரலக்ஷ்மி விரதம்—வரம் தரும் இலக்ஷ்மி விரதம் என்றழைக்கப்பெறுகின்றது. மிகவும் பக்தி சிரத்தையோடும், அஹிம்ஸை, சுத்தம், அழகு, இனிமை, ஒரு முகப்பட்ட மனது எல்லாம் கலந்து இந்நாளில் நோன்பிருந்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் பெற்று சுமங்கலியாக வாழலாம் என்பது ஐதீகம். இவ்விரதத்தை நியம விதிப்படி வீட்டினில் அனுஷ்டிப்பதனால் இலக்குமிதேவி வீட்டினுள் வாசம்செய்வாள். இயலாதவர்கள் ஆலயங்களிலும் இவ் விரதத்தை அனுஷ்டிக்கலாம்.

**வரலட்சுமி விரதம் பற்றி புராணங்கள் கூறும் கதைகளை சற்று நோக்குவோம்.**

பத்ரச்ரவா என்னும் சவுராட்டிர மன்னனின் மனைவி கசந்திரிகா. மன்னன் எப்பொழுதும் மங்கலச் சொற்களையே பேசுபவன், கேட்பவன். குணம், கல்வி, தர்மம், கற்பு ஆகிய நற்பண்புகள் கொண்ட கசந்திரிகா நிலவைப் பழிக்கும் அழகு கொண்டவள்; சினத்தை ஒழித்து எப்பொழுதும் குளிர்ந்த சாந்தமான முகத்தை உடையவள். இவர்களுக்கு 7 ஆண் மகன்களும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. பெண் குழந்தையை சியாமா எனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர். கசந்திரிகாவின் நற்குணங்களும், நற்செயல்களும் கண்டு மகாலட்சுமி அவளிடம் கருணை கொண்டாள். ஒரு வெள்ளிக்கிழமை துவாதசி திதியன்று மகாலட்சுமி ஒரு பழுத்த சுமங்கிலி உருவெடுத்து அந்தப்புறத்தில் நுழைந்தாள். வயிறார உண்டு வாய்நிறையத் தாம்பூலம் தரித்து அமர்ந்திருந்த அரசி, “தாயே! சுமங்கிலியே! தாங்கள் யார்? எதற்க்காக வந்தீர்கள்?” என் வினவினாள். அவளை நோக்கி மகாலட்சுமி,”கசந்திரிகா! நீ நல்லவள். உத்தமி. ஆனால், இலட்சுமி தேவியின் அவதார தினமான இன்று வயிறார உண்டு தாம்பூலம் தரித்துக் கொண்டுள்ளாயே! இது நியாயமா?” எனக் கேட்டாள். செய்த தவறைச் சுட்டிக் காட்டியவுடன் கோபமே கொள்ளாத கசந்திரிகாவுக்கு சினம் கொப்பளித்து வந்தது. உடனே மகாலட்சுமியின் கன்னத்தில் அறைந்து, ”இங்கிருந்து போய்விடு” என்றாள். கண்கள் கலங்கி கண்ணீர் தளும்பிய முகத்துடன் வெளியேறிய மகாலட்சுமியைக் குழந்தை சியாமா கண்டு, ”அம்மா! ஏன் அழுகிறீர்கள்? என்ன வேண்டும்?” என்றாள். கண்களைத் துடைத்துக்கொண்டு மகாலட்சுமி, ”பெண்ணே! உன் தாயாருக்கு நல்லது சொன்னேன். அதற்காக என்னை அடித்து அவமானப்படுத்தித் துரத்தி விட்டாள். அதனால்தான் திரும்பிப் போகிறேன்” என்றாள். உடனே சியாமா மகாலட்சுமியை உபசரித்து, அமரவைத்து, “அந்த நல்லதை எனக்குச் சொல்லிக்கொடுங்களேன்” என்றாள். மனம் குளிர்ந்த மகாலட்சுமி, சியாமாவுக்கு வரலட்சுமி விரதம் கொண்டாடவேண்டிய வழிமுறைகளை உபதேசித்தாள்.

அன்று முதல் சியாமா, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது வரலட்சுமி விரதத்தைக் கடைப்பிடித்தாள். இலட்சுமிதேவியை அவமதித்ததால் பத்ரச்ரவா மன்னனிடமிருந்த செல்வங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கின. மனம் நொந்த மன்னன் இராஜ்யம் கையைவிட்டுப் போவதற்குள் மகளுக்குத் திருமணம் செய்ய எண்ணி மாலாதரன் என்ற மன்னனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். புகுந்த வீடு சென்றபின்னும் சியாமா விரதத்தைத் தொடர்ந்தாள். மாலாதரனுக்கு செல்வம் குவிந்தது. பத்ரச்ரவாவும் கசந்திரிகாவும் பகைவர்களால் விரட்டப்பட்டு காட்டுக்கு ஓடி உணவுக்கு வழியற்று ஊர் ஊராகத் திரிந்தனர். செய்வதியறிந்த சியாமா வருந்தி, அவர்களைத் தன் நாட்டிலேயே தங்கவைத்துத் தன் சேவகன் மூலம் உணவளித்துக் காத்து வந்தாள். நாட்கள் கழிந்தன. ஒருநாள், நிறையத் தங்க நாணயங்களை ஒரு பாத்திரத்தில் போட்டு மூடிக் கொடுத்து, “இதை வைத்துக்கொண்டு எங்காவதுபோய்ப் பிழைத்துக் கொள்ளுங்கள்” என்றாள். சியாமா அவ்விடத்தை விட்டு அகன்றதும், மூடிய பாத்திரத்தைத் திறந்து பார்த்த பத்ரச்ரவா, பொன்னுக்குப் பதில் கரித்துண்டுகளைக் கண்டு அதிர்ந்து போனான். இதை சியாமாவுக்குத் தெரியப்படுத்தினர். உடனே, சியாமாவுக்குத் தன் தாய் மகாலட்சுமியை அவமதித்தது



உ

இராமாநந்தம் குருநாதா சரணம்

ஆன்மிகம் தழைத்தோங்கும் ஆல விருட்சம்

# திருவருள் சக்தி

(ஆன்மிகம் - ஜோதிடம் - மருத்துவ மாத இதழ்)

**ஆகஸ்ட் – 2015**

ஸ்ரீ சக்தி : 10 அருள் : 4



**ஆசிரியர் குழுமம்**

ஆசிரியர், வெளியிடுபவர்

சித்தர் அடிமை **ஸ்ரீ சி. இராஜு**

கௌரவ ஆசிரியர்

பண்டிட். **காழியூர் நாராயணன்**

இணை ஆசிரியர்கள்

T.V.**கிருஷ்ணமூர்த்தி**

**சித்தர் ஞானகுரு**

துணை ஆசிரியர்கள்

ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்

P.D. **ஜெகதீஸ்வரன்**

**தெய்வீகன் மாரிமுத்து**

சிறப்பு ஆசிரியர்கள்

**பா. சுசீந்திரநாத்**

**சி. சிதம்பரம்**

தலைமை நிர்வாகி

M.S. **கிருஷ்ணா**

★ ★ ★

அலுவலக நிர்வாகம்

**வனிதா வெங்கட்**

இந்த இதழில் வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும், கட்டுரையாளர்களின் கருத்துகளாகும், கட்டுரைகளைத் திருத்த, சுருக்க, தள்ளுபடி செய்ய ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு



அனைத்துத் தொடர்புகளுக்கும்

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**

நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Ph. : **044 2811 6770**

E mail : apsarapublications@gmail.com



இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு **திருவருள் சக்தி** நிர்வாகம் பொறுப்பல்ல.



**Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014 and Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014.**

**Editor : Siddhar Adimai Sri C. Raaju**


**அட்டையில் சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன்**



நினைவுக்கு வந்தது. தன் அம்மாவை அழைத்து நடந்தவைகளை நினைவுபடுத்தி, அவள் செய்த தவறைச் சுட்டிக்காட்டி, விரதமிருக்கும் வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்தாள். அவ்வாறே கசந்திரிகா வரலட்சுமி விரதமிருந்து வர நாளுக்கு நாள் நல்லவைகள் நடந்தன. பத்ரச்ரவாவுக்கும் மனதில் தைரிய இலட்சுமி குடியேறியதால், தன் ஆதரவாளர்களைத் திரட்டிப் படையெடுத்து வந்து தன் நாட்டை மீட்டான். பெற்றோர் நல்ல நிலையை அடைந்ததைக் கண்ட சியாமா மகிழ்ந்தாள்.

சித்திரநேமி என்ற தேவகுலப் பெண் நீதிபதியாக இருந்தாள். அவள் தேவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு நடுவராக இருந்து தீர்ப்பு வழங்குவாள். ஒருமுறை அவள் பாரபட்சமாக நடந்துக்கொண்டதால் அன்னை பார்வதி அவளை குஷ்டரோகியாகும்படி சாபம் கொடுத்தாள். சித்திரநேமி சாபவிமோசனம் கேட்டு பார்வதியின் காலில் விழுந்தாள். வரலட்சுமி விரதத்தை கடைபிடித்தால் நோய் நீங்கும் என பார்வதி அருள் செய்தாள். அவள் பூலோகம் வந்து, ஒரு குளக்கரையில் அமர்ந்து வரலட்சுமி பூஜை செய்து சாபம் நீங்கப்பெற்றாள். புண்ணிய நதிகளில் தீர்த்தமாடுவது, வரலட்சுமி விரதம் இருந்ததற்கு ஒப்பானதாகும். குறிப்பாக கங்கை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவிரி, தாமிரபரணி ஆகிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடினால் காலம் முழுவதும் வரலட்சுமி விரதம் இருந்த பலன் கிடைக்கும். பெண்கள் புண்ணிய நதிகளில் தீர்த்தமாடியும் வரலாம்.மாமனார் மற்றும் மாமியாருக்கு பணிவிடை செய்யும் மருமகள்களுக்கும், வரலட்சுமி விரதம் அனுஷ்டித்த பலன் கிடைக்கும். மகத நாட்டில் வசித்த சாருமதி என்ற பெண் தனது கணவன், மாமனார், மாமியார் மற்றும் உறவினர்களை கடவுளின் வடிவமாக கருதி அவர்களுக்கு பணிவிடை செய்ததால் வரலட்சுமி விரதம் இருந்ததின் பலன் முழுவதும் கிடைத்து கணவனுடன் நீண்டநாள் வாழ்ந்தாள்.

பத்ரசிவன் என்ற மன்னன் சிறந்த விஷ்ணு பக்தன். அவன் மனைவி கரசந்திரிகா. இவர்களது ஒரே மகள் சியாமபாலா. அவளைத் திருமணம் செய்து கொடுத்தபின் தாய் துயருற்றாள். அவளது கவலையைத் தீர்த்து அவளுக்கு ஓர் ஆண் மகன் பிறக்க அருள் செய்ய எண்ணினாள் மகாலட்சுமி. அதனால் வரலட்சுமி விரதம் பற்றி எடுத்துக்கூற வயதான சுமங்கலி வடிவில் அவளிடம் சென்றாள். ஆனால் வந்திருப்பது இலட்சுமிதேவி என்று அறியாத கரசந்திரிகா அவளை அவமானப்படுத்தி அனுப்பி விட்டாள். அங்கிருந்து சியாமபாலாவிடம் சென்ற மகாலட்சுமி நடந்தவற்றைக் கூறி, தான் போனால் எல்லா யோகங்களும் அரண்மனையை விட்டுப் போய்விடும் என்று கூறினாள். தன் தாயின் தவறுக்காக வருந்தி மன்னிப்புக் கோரிய சியாமபாலா, வரலட்சுமி விரதத்தைப் பற்றிக் கேட்டறிந்து சிரத்தையுடன் அதைக் கடைப் பிடித்து வரத் தொடங்கினாள். அதன் பிறகு அவளுக்குச் சுபிட்சம் பொங்கிய அதே நேரத்தில் அவளது பெற்றோர் அனைத்து செல்வங்களையும் இழந்தனர்.

தன் பெற்றோரது வறுமையை அறிந்த சியாமபாலா ஒரு குடம் நிறைய பொற்காசுகளை அவர்களுக்கு அனுப்பி வைத்தாள். அக்குடத்தில் கரசந்திரிகா கை வைத்ததும் பொற்காசுகள் கரியாகி விட்டன. இதையறிந்த மகள் அந்த ஆண்டு தன் தாயுடன் வரலட்சுமி விரதம் மேற்கொண்டாள். விரதத்தின் மகிமையால் கர சந்திரிகா தன் முந்தையை சுபிட்ச நிலையை எய்தியதோடு ஆண் வாரிசும் பெற்றாள். வரலட்சுமி விரதம் இருக்கும் பெண்கள் அஷ்ட போக பாக்கியங்களைப் பெறுவார்கள் என்பதை இவ்வரலாறு வரையறுத்து கூறுகிறது.

இந்த வரலட்சுமி விரதம், பெரும்பாலும் எல்லா அம்பிகை

ஆலயங்களிலும், இலக்குமி தேவியை பரிவார தெய்வங்களாகக் கொண்ட மற்றைய ஆலயங்களிலும் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அனேகமாக எல்லோரும் ஆலயங்களில் இவ் விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். அங்கே குத்துவிளக்கேற்றி இலக்குமியை ஆவாகணம் செய்து பூஜித்து வழிபட்ட பின்னர் அதனை அணையாது வீட்டிற்கு எடுத்துச் சென்று சுவாமி அறையில் வைத்து வழிபடுகின்றனர். இலக்குமி தேவியை ஆலயத்தில் இருந்து வீட்டிற்கு அழைத்து வருவதாக ஐதீகம்

உள்ளத் தூய்மையுடனும் உடல் தூய்மையுடனும் ஆசாரசீலர்களாக அஷ்ட இலக்குமியாக விளங்கும் அம்பிகையை வழிபட்டால்; அம்பிகையின் அருள் கிடைத்து மகிழ்ச்சியான வாழ்க்கை அமைந்துவிடும். இந்த விரதத்தை அனுஷ்டிப்பதனால், இல்லத்தில் செல்வம் கொழித்துக் களித்தோங்கும். கணவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வதால் மனைவியர் தீர்க்க சுமங்கலியாக வாழும் பாக்கியம் கிடைக்கப் பெறுகின்றனர். அத்துடன் பிள்ளைப் பேறு இல்லாதவர்கள் "பாக்கிய இலட்சுமியின்" அருளினால் மக்கள்பேறு பெறுகின்றனர். அதனால் இந்த விரதத்தை சுமங்கலிப் பெண்கள் எல்லோரும் விரும்பிப் அனுஷ்டிக்கின்றனர். கன்னிப் பெண்கள் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் செல்வச் சிறப்போடு வாழும் சிறந்த கணவன் கிடைக்கப் பெற்று சிறப்பான குடும்ப வாழ்க்கை அமையப் பெறுவர் என ஆகமங்கள் அறிவுறுத்தி கூறுகின்றன.

மகாலட்சுமியை தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி என அஷ்டலட்சுமிகளாகப் பிரித்துள்ளனர். இலட்சுமிதேவி எட்டு வகை செல்வங்களை வாரி வழங்குபவள் என்றும், பொறுமை மிக்கவள் என்றும். அவள் அனைவருக்கும் நன்மையே செய்வாள் என அதர்வண வேதத்தில் அறுதியிட்டு கூறப்பட்டுள்ளது. குறிப்பாக பெண்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் அவளால் பொறுத்துக் கொள்ள முடியாது. அவள் நித்திய சுமங்கலி. மஞ்சள் பட்டு உடுத்தி காட்சி தருபவள். கணவரான திருமாலின் மார்பில் குடியிருப்பவள். பெண்களுக்கே உரித்தான கருணை உள்ளம், அழகு, வெட்கம், அன்பு, புத்தி ஆகியவற்றிற்கு அதிபதியும் அவளே. வரலட்சுமி விரதம் இருந்து அவளைப் பூஜித்தால் அனைத்துப் பலன்களும் கிடைக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன.

**விரத அனுஷ்டிக்கும் முறை:** இந்த விரதம் அனுஷ்ட்டிப்பதற்கு வீடு அல்லது கோயில்களில் தென்கிழக்கு மூலையில் ஒரு சிறு மண்டபம் எழுப்ப வேண்டும். அதில் சந்தனத்தால் செய்யப்பட்ட வரலட்சுமியின் முகத்தை வைக்க வேண்டும். வசதி மிக்கவர்கள் வெள்ளி சிலை வைக்கலாம். சிலையை தாழம்பூவால் அலங்கரித்து அதை ஒரு பலகையில் வைக்க வேண்டும். சிலை முன் வாழை இலை போட்டு அதில் ஒரு படி பச்சரிசியைப் பரப்ப வேண்டும். அரிசியின் மீது தேங்காய், மாவிலை, எலுமிச்சை, பொன், பழங்கள் ஆகியவற்றை வைத்து சிலைக்கு மஞ்சள் ஆடை அணிவிக்க வேண்டும். ஒரு கும்பத்தை எடுத்து அதில் புனித நீர் நிறைத்து, சந்தனம் குங்குமம் வைத்து, மாவிலையுடன் தேங்காய் வைத்து அரிசியின் நடுவில் வைக்க வேண்டும்.பின் ஐந்து வகையான ஆரத்தி தட்டுகளால் பூஜை செய்ய வேண்டும்.

அஷ்டலட்சுமிகளுக்கும் விருப்பமான அருகம்புல்லை சிலையின் மீது தூவி பூஜை செய்வது நல்லது. பூஜையின்போது அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம், கனகதாரா ஸ்தோத்திரம், மகாலட்சுமி ஸ்தோத்திரம் ஆகியவற்றை படிக்கலாம். வீட்டிற்கு வந்திருக்கும் பெண்களுக்கு தேங்காய், மஞ்சள் கயிறு, குங்குமம் கொடுக்க வேண்டும்.நைவேத்யமாக கொழுக்கட்டை படைக்கலாம். பின் கலசத்தை அரிசி பானையில் வைத்துவிட வேண்டும். இதனால் அன்னபூரணியின் அருள் கிடைக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. சந்தனத்தில் செய்யப்பட்ட இலட்சுமி வடிவங்களை மறுநாள் நீர்நிலையில் கரைத்துவிட வேண்டும்.இந்த விரதம் இருப்பதால் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கும். செல்வ வளம் சேரும். மங்கள வாழ்க்கை அமையும். கன்னிப் பெண்களுக்கு திருமணம் நிச்சயமாகும்.

சுமங்கலிப் பெண்கள் இந்த விரதத்தின்போது தாலிக் கயிற்றை வைத்து பூஜை செய்து, அதனை அணிந்துக் கொள்வார்கள். இதனால் அவர்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பார்கள். இந்த வரலட்சுமி விரதத்தை கடைபிடிக்கும் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு உயர்ந்த ஞானம் கிட்டும். சுமங்கலிப் பெண்களுக்கு மங்கள வாழ்க்கை அமையும். மாங்கல்ய பாக்கியம் நிலைத்து நீடிக்கும். குடும்பத்திற்கு எட்டுவித ஐஸ்வரியங்கள் உண்டாகும். இந்த விரதம் மேற்கொள்வோர் விரும்பிய நலன்கள் எல்லாம் கிட்டும். தனியாக வீட்டில் விரதம் அனுஷ்டிக்க இயலாதவர்கள் அருகில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் வரலக்ஷ்மி பூஜைகளில் கலந்தும் விரதம் அனுஷ்ட்டிக்கலாம். பெரும்பாலான இந்தியநாட்டவர்கள் வீட்டில் கும்பம் வைத்து வழிபடுகின்றனர். ஆனால் இலங்கையில் அனேகமானோர் அம்பிகை ஆலயங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் விசேஷச பூஜைகளில் பங்குபெற்று தம் விரதத்தை நிறைவேற்றுகின்றனர். உள்ளத்தூய்மையுடனும் உடல் தூய்மையுடனும் ஆசாரசீலர்களாக அஷ்ட இலக்குமியாக விளங்கும் அம்பிகையை வழிபட்டால் அம்பிகையின் அருள் கிடைத்து மகிழ்ச்சியான வாழ்க்கை அமைந்துவிடும்.

விரத தினத்தன்று இலட்சுமி துதி, இலட்சுமி வரலாறு போன்றவற்றைச் சொல்லி தங்களை முழுமையாக வழிபாட்டில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அன்று மாலை சுமங்கலிப் பெண்களை வீட்டிற்கு அழைத்து, பூஜை முடிந்ததும் மங்கலப் பொருட்களுடன் தட்சணையும் வைத்துக் கொடுத்து அனுப்ப வேண்டும். அனைத்து வளங்களையும் வாரி வழங்கும் வரலட்சுமியை வழிபட்டு நலம் பல பெறுவோமாக

**சித்தர் அடிமை ஸ்ரீ சி.இராஜ்**
**Cell : 97104 21880**

# காலத்தை வென்று காரிய சித்தி புரிய அருள்புரியும் காலபைரவர் வழிபாடு



ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"
**கடகம் இராமசாமி**
**செல் : 94431 67046**

சிவன் கோவிலில் வடகிழக்கு மூலையில் பைரவர் எழுந்தருளியிருப்பார். இது சிவபெருமான் எடுத்த 64 வகையான திருக்கோலங்களில் ஒன்றாகும். சிவபெருமான் வீரச்செயல்களை செய்ய நேரும் காலங்களில் ஏற்ற திருவுருவங்களைப் பைரவர் திருக்கோலம் என்று சொல்வார்கள்.

பிருஹத் ஜாதகம் எனும் ஜோதிடநூல் காலபைரவர் என்னும் பெயர் ஏற்படக் காரணம் என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது. பைரவர் காலத்தை உருவமாகக் கொண்ட காலபுருஷன் பன்னிரண்டு இராசிகளும் அவருடைய உருவப் பகுதிகளாகும்.

மேஷம் — சிரசு ரிஷபம் — வாய், மிதுனம் — கைகள், கடகம் — மார்பு, சிம்மம் — வயிறு, கன்னி — இடை, துலாம் — புட்டம், விருச்சிகம் — லிங்கம், தனுசு — தொடை, மகரம் — முழந்தாள், கும்பம் — காலின் கீழ்ப்பகுதி மீனம் — அடித்தளங்கள் என்கிறது பிருஹத் ஜாதகம் என்ற நூல். ஆதியில் பைரவர் வழிபாடே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வந்துள்ளது.

காலமே உருவமாக அமைந்தவன் பரம்பொருள். அந்தப் பரம் பொருளை வழிபடுபவர்களுக்கு காலச் சக்கரத்தால் தோஷம் எதுவும் வராது என்பது நம்பிக்கை.



உரிய காலத்தில் உயிர்களை கவர்பவன், அதனால் தான் எமனைக் காலன் என்கிறார்கள். சிவபெருமான் காலனக்கே காலனாக இருந்தவர். தன் அடியவர் உயிர் கவர வந்த எமனை இடது காலால் உதைத்த கால சம்ஹாரர். காலகாலர். ஆகையால் காலனை அச்சுறுத்தியவர். காலபைரவர் என்பதும் உண்டு.,

திருநெல்வேலி மாவட்டம் சேரன் மாதேவியில் உள்ள வைத்திய நாதசாமி கோவிலில் 8 புஜங்களுடன் ஜடா மண்டல கால பைரவர் திருவுருவம் உள்ளது

திருவண்ணாலையில் மேற்கு நோக்கிய சன்னிதியுடன் 8 தோள்களுடன் 7 அடி உயரமுள்ள காலபைரவர் காணப்படுகிறார்.

பைரவரை முறைப்படி வழிபட்டால் திருமண தடைகள் அகலும் வழக்குகளில் வெற்றி கிட்டும். எதிரிகள் அழிவர் பில்லி, சூனியம், அகலும் குளிகை காலத்தில் பைரவர் வழிபாடு நலம் தரும். கிடைத்தற்கரிய பைரவ மந்திரம் கீழ்வருமாறு.

**ஓம் நமோ பகவதே கால பைரவாய**
**ப்ரயாந்தகாய மஹாபைரவாய**
**ஸர்வ விக்னநிவாரணாய சக்திதராய**
**சக்ர பாணயே வடமூல சன்னிஷண்ணாய**
**அகில கணநாயகாய ஆபதுத்தாரணாய**
**ஹஸ்த புஜ பாதரோக ஆபிசாராதி**
**ஸர்வ ரோக நிவாரணாய**
**ஓம் ஸ்ரீ கால பைரவாய நம**

தினசரி 27, 54, 108 எண்ணிக்கையில் சொல்லி வரலாம். ஜோதிடர்கள் தினசரி சொல்லிவர சகல நன்மையும் உண்டாகும். வாக்கு பலம் கூடும். இரவு நேரத்தில் பைரவர் வழிபாடு சிறப்பு தரும். ஆயுள் நீடிக்கும். விபத்துக்களால் மரணம் நேராது. இம்மந்திரத்தை ஜலத்தில் மந்திரித்து கடுமையான வியாதியஸ்தர்களுக்கு கொடுத்து வியாதி குறையும்.

வில்வ குச்சியினால் ஓமம் செய்ய ஏராளமான செல்வங்கள் சேரும். கடுகால் ஜபம் செய்தால் எதிரிகளை வெல்லலாம்.

ஒருவர் பிறந்த ஜன்ம நட்சத்திர தினத்தன்று பால் பாயாசம், இனிப்பு பதார்த்தங்கள் செய்து 1008 ஆஹூதி ஓமம் செய்தால் ஆயுள் நீடிக்கும் செல்வங்கள் வந்து சேரும்.

அவரவர் பிறந்த நட்சத்திரம் வரும் நாளில் ஜபம் செய்தால் விசேஷமான பலனைத் தரும். மற்றவர்கள் நலனுக்காகவும் பிரார்த்தித்து ஜபங்கள் செய்யலாம்.

(ஆல்ஃபா மைண்ட் பவர் தியான வழி)

தேய்பிறை / வளர்பிறை அஷ்டமி காலங்களில் பைரவர் சன்னதியில் இம்மந்திரத்தை ஜபித்து பயன்பெறலாம். தேன் நிவேதனம் சிறப்பு தரும். ஏழரைச் சனி, அஷ்டமச்சனி கண்டச் சனி தோஷங்களும் விலகும். பூசணிக்காய் இலுப்பை எண்ணை தீபம் கிரகதோஷம் போக்கும். ■

மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com




No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ், லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில், 4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம், P. 54 விஷாகா அபார்ட்மெண்ட், 6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.

Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**


**"அரிது அரிது ஜோதிடராய் ஆவது அரிது - அதனிலும் அறிது நல்ல குரு அமைவது அரிது"**
**"வாருங்கள் குரு-சிஷ்யர் உன்னத பந்தந்திற்கு"**

## ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

இக்கலையை திரிகால சக்தியை முற்றிலும் உணர்ந்த ஞானிகள், யோகிகள், மகான்கள் போன்றவர்கள் கிரகித்து வைத்திருக்கும் அபூர்வ சக்தி யட்சினி சக்தி. அப்படிப்பட்ட யட்சினி சக்தியானது பிரபஞ்ச சித்தரின் சித்தியாலும், சூட்சும ப்ரயோக முறைகளாலும் சைவ முறை பூஜை மேற்கொண்டு இந்த ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். பல ஜோதிடர்கள், நாம் சென்று உட்கார்ந்த உடன் எதற்காக வந்திருக்கின்றோம் என மிக துல்லியமாக கூறுவது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். நமக்கு ஏற்படும் எதிர்கால நிகழ்வுகளை நாமே அறிந்து கொள்ளவும் உங்களால் முடியும். நடக்க போவதை முன்கூட்டியே அறியவும், ஒருவர் செய்திருக்கும் மாந்ரீக கோளாறுகளை நாமே அறியவும் பயன்படும் ஒரு அரிய கலை. பொதுவாக இச்சக்தியை வாக்கு கூறுவதற்கும், ஜோதிடர்கள் ஜோதிட துறைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான கலை. எந்தவித பயமும் இல்லாமல், குடும்பத்தில் இருந்து கொண்டு கற்றிடும் ஒரு அபூர்வ கலை ஆகும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இறை சக்தியை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

வாருங்கள், வித்தியாசமான அனுபவத்தை தீட்சையில் பெற்றிட, அபூர்வமான சக்தியை நீங்கள் பெற்றிட...

இன்னும் என்ன யோசனை? வாழ்வில் முன்னேறுவதற்கு?

பல ஜோதிடர்களை மாந்த்ரீகர்களை உருவாக்கிய பயிற்சி

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 22.08.2015 சனிக்கிழமை |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 7700/- |

இதுவரை யாரும் அறிந்திடாத...

## சூட்சும உயர் சக்திகள்

ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...

இக்கலையை தாங்கள் கற்பதன் மூலம் உங்களை கண்ட எதிரிகளும் விலகி ஓடுவர். வெளிநாடு செல்ல முயற்சி செய்தும் பலமுறை தோல்வி கண்டவர்கள், வெளிநாடு செல்லும் கனவை நனவாக்கும் பயிற்சி முறை. வாழ்வில் எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லையா? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பணத்தினால் வாழ்வில் ஏற்படும் பலவித இன்னல்களை போக்கி, இழந்த பொருட்களை மீண்டும் பெறுவதற்கும், வாழ்வில் பல சறுக்கல்களை கண்ட நீங்கள் மற்றவர்கள் முன் தலைநிமிர்ந்து நின்றிடவும், ஜாதகத்தில் ஏற்படும் சகல தோஷங்களை பரிகாரம் இல்லாமல் உயர் சக்திகள் மூலம் தீர்த்திடவும், படிப்பில் மந்தமான நிலை, ஞாபக சக்தி குறைவான நிலை, தேர்வில் தோல்வி மேல் தோல்வி என இருப்பவர்களை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிடும் ஒரு கலை. திருமண தடை விலகி ஓடிடும். மாந்ரீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், வாஸ்து கோளாறினால் ஏற்பட்ட பாதிப்புகள், இப்படி நீங்கள் வாழ்வில் முன்னேற எது தடையாக உள்ளதோ அதனை தவிடுபொடியாக்கி வாழ்வில் உயர இப்பயிற்சி வழிவகுக்கும்.

இனிப்பு என்றால் சுவை தெரியாது, சுவைத்து பார்த்தால் மட்டுமே சுவை தெரியும். பார்த்துக்கொண்டே இருந்தால் பலன் தெரியாது. கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்களே பரிகாரம் சொல்வீர்கள் மற்றவர்களுக்கு.

வாருங்கள்...
இன்னும் நிறைய கற்பதற்கு

ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 5700/- |

Card Accepted
MasterCard VISA

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்களுக்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

சென்னையில் பயிற்சி : நாள் : 12.08.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
கோவையில் பயிற்சி : நாள் : 19.08.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
பெங்களூரில் பயிற்சி : நாள் : 26.08.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி

**தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.**

**தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.**

பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16. மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)

வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...
நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்
தோல்விக்கு சவால் விடு, முடிந்தால் என்னை தோற்கடி...! - குருஜி ஐயா.



புலிப்பாணி **மு.இளங்கோ**

செல்: 98943 85933

**24**

## சூரிய வழிபாடு கொடுத்திடும் ருது தோஷ நிவர்த்தி

இந்த உலகில் தோன்றிய எல்லா உயிர்களும் சமம் என்று பேசினாலும், சகல ஜீவ ராசிகளிலும் ஆண், பெண் என்ற வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. அதிலும் மனித இனத்தில் ஆணுக்கு எல்லா வகையிலும் பெண் இணையானவள் என்று பேசினாலும் ஆணுக்கு என்று சில இயல்பான தனித்தன்மைகள் இருக்கின்றன. அது போல பெண்களுக்கு இயல்பான சில தனிதன்மைகள் இருக்கின்றன. இதில் முக்கியமானது ஒரு பெண் தன் வாழ்நாளில் தாய்மை அடைந்து கருவுற்று குழந்தையை பெற்று எடுப்பதுதான் மிகவும் பெருமை வாய்ந்ததாகும். இதற்கு அடிப்படையான தகுதியாக கருதப்படும் விஷயம் தான் ஒரு பெண் குழந்தை பூப்பெய்துதல் என்ற சடங்கு ஆகும்.

ஒரு சிறுமி குறைந்தபட்சம் 12 வயதிற்கு மேல் 15 வயதிற்குள்ளாக குழந்தை தன்மையில் இருந்து மாறுபட்டு பூப்பெய்துதல் என்ற பருவமாற்றத்தான் கன்னி பெண் தன்மை அடைகிறார். இதனை பெண்கள் வாழ்க்கையில் மிக முக்கிய விசேஷமாக கருதி பூப்புனித நீராட்டு விழாவாக சடங்கு நடத்துவது நம்முடைய தமிழர் கலாச்சாரத்தில் மரபு ஆகும். இந்த பூப்பெய்துதல் என்ற நிகழ்வு பெண்களுக்கு மாதம் தோறும் 27 நாட்களுக்கு ஒருமுறையாக 12 வயதில் ஆரம்பித்து குறைந்தபட்சம் 47 வயது வரையில் மாதவிலக்கு என்ற பெயரில் நடைபெறும் நிகழ்ச்சி ஆகும்.



இப்படி ருதுவாகும் பெண்களின் நேரத்தை வைத்து ஜாதகம் கணித்து பலன் சொல்லும் வழக்கம் நம்முடைய கிராமப்புறங்களில் இன்றும் நடைமுறையில் உள்ளது. அதிலும் அதிகாலையிலும், மாலையிலும் தான் பூப்பெய்துதல் என்பது நடைபெறும் என்று ஜாதகத்தை கணித்து பலன் சொல்லி வருகின்றனர். உண்மையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் பிறந்த ஜாதகம் தான் உண்டு. பெண்களுக்கு ருது ஜாதகம் என்பது ஏமாற்று வேலை ஆகும். ஒரு பெண் பிறந்த பொழுதே அவளின் பூப்பெய்துதல் என்ற காலமும் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. நல்லதும் கெட்டதும் அவரவர் பிறப்பு ஜாதகத்தை வைத்து தான் அறிய வேண்டும். பிறப்பு ஜாதகத்தை வைத்துதான் உண்மையில் அறியப் படவும் முடியும்.

பூப்பெய்துதல் தொடர்பான சில உண்மைகளை பற்றி என்னுடைய குருநாதர் மிஸ்டிக் செல்வம் ஐயா மற்றும் தென்காசி வராஹி சுப்பிரமணியபிள்ளையிடமும் கலந்து உரையாடிய பொழுது சில இரகசிய சூட்சமங்களை எனக்கு சொல்லி கொடுத்து தெளிவு ஏற்படுத்தினார்கள். இதனை வாசகர்களாகிய உங்களிடம் பகிர்ந்துக் கொள்வதில் சந்தோஷம் கொள்கிறேன்.

**சூட்சமங்கள்: (ருது தோஷம்)**

1. எந்த ஒரு பெண்ணும் தான் பூப்பெய்தியதை தானே பார்க்கக்கூடாது.

2. ஒரு பெண் பூப்பெய்தியதை அப்பெண்ணின் தாய் முதலில் பார்க்கக் கூடாது

3. ஒரு பெண்ணின் பிறந்த இராசிக்கு ருதுவான இராசியானது 6,8,12வது இராசியாக வரக்கூடாது.

4. ஒரு பெண்ணின் பிறந்த ஜென்ம நட்சத்திரத்திற்கு தாராபலம் இல்லாத நட்சத்திரங்களில் ருதுவாகக் கூடாது மேலே கூறியுள்ள நான்கு விஷயங்கள் மூலம் ருது தோஷம் ஏற்பட்டு அப்பெண்ணிகு ஒழுக்கக் குறைவு உடல் நலம் பாதித்தல், கர்ப்பபை கோளாறு மற்றும் திருமணத்திற்கு பின்பு குழந்தை பேறு கிடைப்பதில் தாமதக ஏற்படுகிறது.

மேலே கூறியுள்ள விஷயங்களை கடந்த பத்து ஆண்டுகளில் ஆயிரம் கணக்கான ஜாதகங்களில் ஆராய்ந்து பார்த்ததில் 90% விழுக்காடு உண்மையாக உள்ளன. இப்படிப்பட்ட தோஷங்களை மாற்றுவதிற்காக இரண்டு வகையான பரிகார வழி முறைகளை குருநாதர்கள் எனக்கு கற்றுத் கொடுத்தார்கள்

1. பஞ்ச பட்சி சாஸ்திரம் வழியாக பயன்படுத்துதல். இது 100% தலைவிதியை மாற்றி அமைக்கும்

2. சூரிய வழிபாடு மூலம் தோஷத்தை நீக்குதல் என்பதாகும்.

**சூரிய வழிபாடும் தோஷ நிவர்த்தியும்**

1. இதனை தொடர்ந்து 90 நாள் செய்ய வேண்டும்.

2. ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளியில் இரவு தண்ணீர் நிரம்பி 10 கிராம் சிவப்பு சந்தனத் தூள் கலந்து 10 கிராம் வெண்கடுகு சேர்த்து தண்ணீரில் கலந்து வைத்து விட வேண்டும்.

3. தினசரி காலையில் 6 மணி முதல் 7 மணிக்குள் இந்த தண்ணீரில் குளிக்க வேண்டும். மேற்கொண்டு உடலுக்கு கஸ்தூரி மஞ்சள் பொடி தேய்த்து குளிக்கலாம் 90 நாள் சோப்பு போடக் கூடாது.

4. குளித்து முடித்த பின்பு சூரியனை நோக்கி நின்று 27 முறை சூரிய நமஸ்கார மந்திரம் கொண்டு ஜெபம் செய்ய வேண்டும். சூரிய வழிபாட்டு மந்திரம் கீழ்வருமாறு

**ஓம் மித்ர ரவி ஸீர்ய பானு கக பூஷ**

**ஹிரண்ய கர்ப்ப மரீச்யாதித்ய ஸவித்ரார்க்க**

**பாஸ்கரேப்யோ நமஹ** *(27 தடவை)*

5. 90 நாள் முடிந்த பின்பு சிவன் கோயிலில் பைரவர்க்கு அவரவர் ஜென்ம நட்சத்திர அதிபதியின் எண்ணிக்கையில் இலுப்பை எண்ணெய்யில் தீபம் ஏற்றி 5 நபர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும் ருது தோஷங்கள் நிவர்த்தியாகும்.


மகா குரு சரணம்

மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ், விட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில், 4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம், P. 54 விஷாகா அபார்ட்மெண்ட், 6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.



Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, S. ராஜகுமார்

| என்ன வேண்டும் உங்களுக்கு... | Remedy for Life Problem |
|---|---|
| பொருளாதாரம் | Finance |
| கடன் தொல்லை | Debit Problem |
| மாந்ரீக தொல்லை | Black Magic |
| வஸ்யம் | Vashyam |
| திருமண தடை | Marriage Delay |
| எதிரிகள் தொல்லை | Enemies Control |
| குடும்ப பிரச்சனை | Family Problems |
| தொழில் முன்னேற்றம் | Business Problems |
| வாஸ்து பிரச்சனை | Vasthu Problems |
| அனைத்திற்கும் ஒரே தீர்வு | Solution at one Platform |

அவசியம் முன் அனுமதி தேவை / For Appointment

Cell : 98427-10545, 93677-10545

Card Accepted MasterCard VISA

நம்பிக்கையுடன் வாருங்கள், நல்லது நடக்கும்.

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள்.

தனிப்பட்ட முறையில் VIP களுக்கு ஆலோசனை அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று சந்திக்கலாம்.

தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.

பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16

பிரதி மாதம் கோவை : 10, 20. மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)

நூல் மதிப்புரை

# இறப்பின் இரகசிய புண்ணியச் சக்கரம்

மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் வாழ்வில், நித்தமும், நிகழும் நிகழ்வுகளை உள்ளடக்கியது தான் இராசி சக்கரம் என்னும் ஜாதக கட்டமாகும். உடலைவிட்டு உயிர் பிரிந்த நேரம், நாள், நட்சத்திரம், திதி, ஊரை வைத்து, உயிர் பிரிந்த முன்னும், பிரிந்த பின்னும் ஆன்மாவின் நிலையை அறிந்திட உதவுவது தான் "இறப்பின் இரகசிய புண்ணிய சக்கரமாகும்". இது ஸ்ரீஸ்கந்த உபாசகர் "ஜீவநாடி கலையரசு" "திரு.P.D.ஜெகதீஸ்வரன்" அவர்களின் முத்தான மற்றுமொரு வித்தான அரிய படைப்பு.


T.G.பாலசந்திரன்,
வேத ஜோதிடர்
செல்: 94445 41239.




எல்லோரும் மரணத்திற்கு பின் உள்ள இரகசியங்களை தெரிந்துக் கொள்வது அவசியமாகும். மரணங்கள் பல இரகம். ஆனால் மரணத்திற்கு பின் ஆன்மாவானது சாந்தி பெற்று மேலுலகம் சென்றதா என்பதை தெரிந்துக் கொள்வது சூட்சுமமாகும். கண்ணுக்கு புலப்படும் ஸ்தூல சரிரத்தை விட ஒருவர் இறப்பிற்கு பின் எடுக்கும் சூட்சும வடிவத்திற்கு ஆகர்ஷண ஆற்றல் அதிகம். இன்று மனிதர்கள் காணும் எல்லாவிதமான பிரச்சனைகள், தடைகள், வறுமை, பிணி, சண்டை சச்சரவு, பூர்வீக சொத்து வில்லங்கம், குடும்பப் பிரிவு, விபத்து அகால மரணம் என அனைத்திற்கும் காரணம் பித்ரு தோஷமே ஆகும். இது எளிதில் தீர்க்கமுடியாத ஒரு தோஷமாகும். தங்களோடு வாழும் காலத்தில் பெற்றவர்களை சரிவர கவனிக்காமல் கொஞ்சமும் மதிக்காமல், சுய நலத்தோடு அவர்கள் மனம் புண்படச் செய்வதால் அந்திம காலத்தில், உயிர்பிரியும் நேரத்தில், நிர்கதி நிலையில், விரக்தியின் விளிம்பில், உயிர் காணும் ஏக்கங்கள், தீராத மனவலி, மாறாத வேதனைகளுடன், சாதாரண ஆசைகள் கூட நிராசையாய் போக அந்த ஆன்மாவானது சாந்தி இன்றி சாபமாய், தோஷமாய், பாபமாய், அடுத்து வரும் சந்ததியை பித்ரு தோஷமாய், கடுமையாய் பாதிப்படையச் செய்கிறது.

அப்படிப்பட்ட பித்ரு தோஷத்தை முழுவதுமாய் நீக்கவல்ல அற்புத பரிகார பொக்கிஷ நூல் தான் "புண்ணிய சக்கரம்" ஆகும். இதில் ஒருவர் இறந்த பின் அடையும் நிலையை அறிந்து அதற்குரிய பரிகாரங்கள் மூலம் அறவே போக்கும் சூட்சுமங்கள் ஏராளம் தாராளமாய் தரப்பட்டுள்ளது.

இறந்தவரின் நேரத்தை வைத்து புண்ணிய சக்கரம் மூலம், ஒருவரின் மரணம் இயல்பாய் அமைதியாய் தன்னிலை அறியாமலே சுபமாய் நிகழ்ந்ததா அல்லது தாங்க முடியாத வலிகளோடு, தீர்க்க முடியாத பிணியோடு போராடி தோற்று, படுத்த படுக்கையாய், அவதியில், அல்லல் உற்று, நிம்மதியின்றி பிரிந்ததா அல்லது அற்ப ஆயுளுடன் நிறைவேறா ஆசைகளுடன், திடீர் விபத்து மற்றும் தீயோரின் வஞ்சத்தால், துரோகத்தால், கொலை, தற்கொலையால், உயிர் பிரிந்ததா என்பதை சில நிமிடங்களில் அறிந்திடலாம். சில நேரங்களில் செய்வினை மற்றும் அபிசார பிரயோகத்தில் மரணம் அடைந்த ஆன்மாவின் கோபத்திற்கு யாவரும் ஆளாக நேரும். ஆகவே ஆன்மாவின் நிலையை அறிந்து உணர்ந்து அதற்குரிய முறையான பரிகாரம் செய்வதால் ஆன்மாவானது சாந்தி பெறும்.

குறிப்பிட்ட சில நாள் நட்சத்திரம் திதி சேர்வதை தனிஷ்டா பஞ்சமி என்பர். இந்நாளில் இறப்பவர் குடும்பம் மிக பெரிய தோஷத்திற்கு ஆட்படும். இதனால் ஏற்படும் தீட்டானது (அடைப்பு) சில நேரங்களில் மீண்டும், மீண்டும், திடீர் மரணங்கள், அடுக்கடுக்கான அமங்கல நிகழ்வுகள் மற்றும் வாஸ்து தோஷமாகவும், விபத்து, நோய் நொடி என காரணம் கண்டுபிடிக்க முடியாத வண்ணம் மீளா துயரத்திற்கு அந்த ஆன்மாவானது ஏற்படுத்தும். அப்படி இறந்தோரை சாந்தி படுத்தும் விதி முறைகளும் இரகசியங்களும் விளக்கமாய் எடுத்துரைத்துள்ளார் திரு.P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள்.




புண்ணிய சக்கர நூலைக் கொண்டு ஒருவர் இறக்கும் போது அவரது நிலையையும், இறப்பின் இரகசியத்தையும், இறுதியில் ஆன்மாவின் தற்போது நிலையையும் அறியலாம். இதனால் உயிரோடு இருக்கும் தலைமுறைகள் வாழ்க்கையை வளப்படுத்த சில பரிகார முறைகள் மூலம் வழி காணலாம். இந்நூலில் பல உதாரண ஜாதகங்கள் தரப்பட்டுள்ளன. அதிலும் பல மகான்களின் புண்ணிய சக்கரம் அவர்களது ஆன்மாவின் இரகசியத்தை சாதாரண மக்களும் அறிந்து கொள்ள பெரிதும் உதவுகிறது.

புண்ணிய சக்கரமும், ஆவிகளும் என்ற தலைப்பின் கீழ் ஆவி உலக ஆராய்ச்சிகள் அழகாய் தொகுத்து தரப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் ஆவிகளுடன் பேசுவதும், ஆவிகளின் கோரிக்கையை அறிந்து உரைப்பதும் தொடர்ந்து வருகிறது. ஆயினும் புண்ணிய சக்கர நூல் ஒன்று மட்டும் இருந்தால் போதும். ஆவிகளை பற்றிய அத்தனை இரகசியங்களும் எளிமையாய் புரியும். ஆவிகளைப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்வோருக்கு இந்நூல் பெரிதும் உதவும். இதில் உயிர் பிரியும் விதங்களை அழகாய் ஜீவநாடி கலையரசு வெளிப்படுத்தியுள்ளார். முக்கியமாக கபால வழியில் உயிர் பிரிவது மகான்களுக்கு என்றும் ஆசன வழியில் விலகுவது பாவிகளுக்கு என்றும் உயிர் பிரியும் வழிகளை தொகுத்துள்ளார்.

முன்னொரு காலத்தில் தங்கள் குலம் தழைக்க உயிர் நீத்தோரின் ஆவியை தான் குல தெய்வமாக வழங்கப் பெற்று வணங்குகிறார்கள் எனும் சூட்சுமத்தை காரண காரிய ஒப்பீட்டுடன் விளக்கியுள்ளார். திரு.P.D.ஜெதீஸ்வரன். புண்ணிய சக்கரம் நூலில் பல பல பரிகாரங்கள் உண்டு. அதில் ஆலய பரிகாரங்களும் ஒன்று. இதில் பித்ரு தோஷம் நீக்கும். திருத்தலங்களை ஜீவநாடி கலையரசு

# வாழ்த்துரை வழங்கிய வள்ளல்கள்

எனது சீடன் ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் P.D.ஜெகதீஸ்வரன் MCA.,M.Phil., அவர்கள் இறப்பின் இரகசிய புண்ணியச் சக்கரம் எனும் தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி வெளியிடுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு மனிதன் இறந்த பின்பு அந்த ஆத்மா அடைகின்ற நிலைகளை தகுந்த ஆதாரங்களுடன் பல மேற்கோள்கள் காட்டி கிரக ரீதியில் ஆய்வு செய்து பலருக்கும் பயன்படும்படி இந்த புத்தகத்தை எழுதி இருக்கிறார். இது நிச்சயம் அனைவருக்கும் பயனுள்ள நூலாக இருக்கும் என நினைக்கிறேன்.



**Dr. W. ஜோதி அக்பர் சாமி**

ஜெகதீஸ்வரன் அவர்கள் எழுதி வருகின்ற கட்டுரைகளை வாசித்தேன், மிகச் சிறப்பான விஷய ஞானமும், ஆழமான ஆய்வுகளும் அதில் இருப்பது கண்டு உளம் மகிழ்ந்து வரும் வேளையில் இறப்பின் இரகசிய புண்ணியச் சக்கரம் எனும் புத்தகத்தை அவர் எழுதியது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த புத்தகத்தை எனது கரங்களால் வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறேன். புண்ணியச் சக்கரம் பல வாசகர்களால் விருப்பிப் படிக்கப் பட்ட ஆதாரப் பூர்வமான ஜோதிட ஆய்வுத் தொடர் அது இப்போது புத்தக வடிவில் உங்கள் கைகளில் இருக்கிறது. யாருடைய புண்ணியச் சக்கரத்தில் இலக்கினத்தில் குரு இருக்கிறதோ அவர்கள் ஆத்மா நிச்சயமாக நல்ல உலகை அடையும்



**பண்டித காழியூர் நாராயணன்**

புத்தகத்தை நான் வாசித்த பின் எனது கருத்தாக, இப்புத்தகங்களை எழுத வைத்ததே அந்த இறைசக்திதான் என்பதை முன் வைக்கிறேன். ஒரு மனிதனுக்கு புத பகவான் அருளாசி ஜாதகத்தில் இருந்தால் நல்ல எழுத்தாளனாய் மிளிரலாம். குருபகவானின் அருளாசி இருந்தால் ஆன்மிக விஷயங்கள் உலகிற்குத் தரலாம். கேது பகவானின் அருளாசி, புதன் மற்றும் குருபகவானின் அருளாசியுடன் சேர்ந்தால்தான் இவரைப் போன்று அரும்பெரும் விஷயங்களை வித்தையொத்த விபரங்கள் அழகான நடையில், விரும்பத்தக்க எளிய முறையில், சரியான எழுத்தோட்டத்தோடு, வாசிப்போர் ஆக்கியோன் மீது வாஞ்சை கொள்ளும் விதத்தில், எழுதுதல் இயலும். அப்பனுக்கே பாடம் சொன்ன குருவான அந்த ஞானஸ்கந்தமூர்த்தியின் நேரடி அருள்பார்வை இவர் மீது தீர்க்கமாய் விழுந்ததனால், கேது பகவானின் அருளும் கிட்டியது. இதன்பலன் தான் இவர் வியக்கும்படியான ஆன்மிகத் தொண்டுகள் பல செய்து, தன் எழுத்தாற்றல் வாயிலாக சமுதாயப்பணியில் செய்து வருகிறார். ஜோதிட அறிவோடு, ஆன்மிகப்பற்றுடன், பிராப்தம் உள்ளோர் மட்டும்தான் இவரது புத்தகங்களை வாங்கி, அவரது எழுத்தாற்றலையும், புதிய விஷயங்களையும் சுவைக்க முடியும்.



**குருவருள் நடராஜன்**

உங்கள் கைகளில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் ''இறப்பின் இரகசிய புண்ணியச் சக்கரம்'' இப்புத்தகத்தை உருவாக்கி கொடுத்து உள்ளவர் ''ஸ்ரீஸ்கந்த உபாசகர்'' ''ஜீவநாடி கலையரசு'' P.D. ஜெகதீஸ்வரன் அவர்கள் பழகுவதற்கு இனியவர். பண்பில் சிறந்தவர். தன்னடக்கத்துடன் ''திருவருள் சக்தி'' ''குருவருள் ஜோதிடம்'' வாசகர்களின் தேவையை தன்னலம் இன்றி பொது நலன் ஒன்றே புனிதத்தைக் கொடுக்கும் என்ற கோட்பாட்டையே கொள்கையாகக் கடைபிடித்து வருபவர். பொருளுக்கு ஆசைப்படாமல் இறைவன் அருளுக்கு அடிபணிபவர். ஆசை வார்த்தைக்கு ஆட்படாமல் அன்புக்கு தன்னை அர்ப்பணிப்பவர். வயது குறைந்தவர் ஆனாலும் கீர்த்தியில் உயர்ந்து ஓங்குபவர். படித்து பயன் பெறுங்கள் வாழ்வில் நன்மைகள் அனைத்தும் பெற்று நீங்கள் நலமுடன் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம். துன்பங்கள் யாவும் நீங்கி இன்முகம் காட்டிடும் அன்புடன் ஆண்டவனை ஆராதிக்கின்றோம்.



**சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜ்**


வரிசைப்படுத்தி பரிகாரங்களாக தந்துள்ளார். அவற்றை முறைப்படி கடைபிடித்து வந்தாலே வாழ்க்கை வசப்படும் வருங்காலம் சுகப்படும்.

ஜோதிட கடலில் கிடைகரிதான அரியதொரு வலம்புரி முத்துதான் "புண்ணிய சக்கரம்" எனும் நூல். இந்நூலில் தரப்பட்டுள்ள பரிகாரங்களை அறிந்து, புரிந்து, தெளிந்து எல்லோரும் கடைபிடித்தால் பித்ரு தோஷ நிவாரணம் நிச்சயம். நிம்மதியின்றி அலையும் ஆன்மாக்கள் பித்ரு லோகம் அடைவது கச்சிதம். ஜோதிடர்கள் இப்படி அரிதாக வெளிவரும் நூலை வாங்கி அதன் பயனை அறிந்து பலனை பிறர்க்கும் கிடைக்கச் செய்தால் புண்ணியங்கள் புடைசூழ கைராசி ஜோதிடர் எனும் பாராட்டையும் பெறலாம். புண்ணிய சக்கரம் நூல் ஆன்மாவை அறிய முற்படுவோரும் மறுஜென்மத்தை ஆராயத் துடிப்போரும், ஆவி உலக ஆராய்ச்சியாளர்களும் நிச்சயம் வாங்கி படிக்க வேண்டிய ஒரு பொக்கிஷம். இதன் மூலம் பல காலம் அறியாமையால் பித்ரு கடன் செய்ய தவறியோர்கள் இறந்தவர் ஆன்மாவுக்கு தர்ப்பணம் சீரார்த்தங்களை முறைப்படி செய்து தங்கள் விதியை மாற்றி பித்ரு தோஷ நிவர்த்தி பெற்று இன்புற்று வாழ இந்நூல் பெரிது உதவுகிறது

**நூலின் விலை ரூ.250/–**

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**

நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு,
புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 044– 2811 6770, செல்: செல்: 72999 21880



# திருநங்கை வாசமே திருமகள் வாசம்



இராஜ தர்ஷினி
செல்: 94447 96305

நீங்கள் நல்ல ஆத்மாக்களை தேடி தொடர்பு கொள்ளுங்கள். அப்படி தொடர்பு கொள்ளும்போது நல்ல எண்ணங்கள் உருவாகின்றன. நல்ல எண்ணங்களினால் ஆசைகள் அழிகின்றன. ஆசைகள் அழிவதால் மனம் அலைபாயாமல் அமைதியாகின்றது. மனம் ஒரு நிலைப்படுவதால் ஜீவன் முக்தியடைகின்றது.

மனிதர்களிடையே ஆண், பெண் என்பது போல் அலி என்ற ஆணையும் பெண்ணையும் கலந்த வர்க்கம் உள்ளது. கிரகங்களிடையே, சனியும் புதனும் அலி கிரகங்களாகும். கிரகங்களிடையே பீடையை, கஷ்டங்களை, உருவாக்குவதில் சனிகிரகம் முதன்மை வகிக்கின்றது. இந்த கிரகம் இரண்டரை வருடங்கள் ஒரே இராசியினில் தங்குவதால் பிரச்சனைகளின் கஷ்டங்களின் கால அளவு மிகப்பெரியதாக அமைந்துள்ளது. அதபோன்று கிரகங்களிடையே சகல சௌபாக்கியங்களையும் தடுகின்ற ஒரே கிரகம் புதன் கிரகமாகும். இவைகளுக்கிடையே உண்டான சாந்தி மற்றும் வளர்ச்சி திருநங்கைகளிடையே அமைந்துள்ளது.

திருநங்கைளை நாம் ஏளனமாக பேச முடியாது. அவர்கள் மூலம் நம் நம்முடைய பிரச்சனைகளை பரிகாரங்கள் மூலமாக தீர்த்துக் கொள்ளலாம். திருநங்கைகளுக்கு அலிகிரகமான சனிபகவானின் நாளான சனிக்கிழமைகளிலும், மற்றும் சனியின் நட்சத்திரங்களான, பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரங்களின் நாட்களிலும், வஸ்திர தானம், அன்னதானம் செய்வதன் மூலம் நம்முடைய பிரச்சனைகளுக்கு முழுமையான நிவாரணம் கிடைக்கின்றது. ஏழரைச் சனி, ஜென்மசனி காலங்களில் செய்யப்படும் இந்த தானங்கள் மிகப்பெரிய அளவில் உதவி புரிகின்றது. மற்றும் இவர்களின் கை ஸ்பரிசம் சிரசின் மீது படுவதால் முழு அளவு பலன் கிடைக்கின்றது. தீராத நோயினால் கஷ்டப்படுபவர்களுக்கு இவர்கள் கை ஸ்பரிசம் சிரசனின்மேல் படுவதால் முழு நிவாரணம் கிடைக்கின்றது.

புதன்கிழமையன்று இவர்களுக்கு அன்னதானம், வஸ்திரதானம் அளிப்பதால் முழு அளவில் சகல சௌபாக்கியங்கள் நம்மை தேடி வருகின்றது. அவர்களுக்கு இயன்ற அளவு நாம் பொருளுதவி புரிந்து அவர்களிடமிருந்து ஐந்து ரூபாய் காசுகள் வாங்கி நாம் பூஜையறையினில் வைத்தால் நம் வீட்டுக்கு மகாலஷ்மி தேடி வருவாள். இந்தியாவின் பல தேசங்களில் வசதி படைத்தவாக்ள் அலிகளினிடையே தானங்கள் செய்து அவர்களிடமிருந்து காசுகள் வாங்கி அதனை பண அறையிலும், பூஜையறையிலிலிலும் வைத்து வழிபடுகின்றனர். அலிகளினிடமிருந்து பெறப்படும் காசுகள் மற்றும் கை ஸ்பரிசம். சிரசின் மீதுபடுவதால் நிரந்தர மகாலஷ்மியை அழைத்து வாசம் புரிய வைக்கின்றது.

அலிகளுக்கு அதிபதி மகாவிஷ்ணு ஆவார். அவர் புதன், சனி இரண்டு கிரகங்களினால் ஏற்படும் கஷ்டங்களை நீக்கி சகல சௌபாக்கியங்களை அருளுவார். மகாவிஷ்ணுவின் மார்பில் நிரந்தர வாசம் செய்யும் மகாலஷ்மியானவள் நிரந்தர செல்வ சுகத்தை அலிகளுக்கு உதவி புரிபவர்களுக்கு அருள் பாலிக்கின்றாள். அவர்களிடமிருந்து புதன்கிழமையன்று பெறப்படும் காசுகள், நாணயங்கள் பூஜைகளில் பூஜிக்கப்படும்போது சகல சௌபாக்கியங்களும் வீடு தேடி வருகின்றது. உங்களின் பணக்கஷ்டம் விரைவில் தீர்கின்றது.

சுக்கிர பவான் இலஷ்மியின் அம்சம் பெற்றவர். புதன், சனியின் நெருங்கிய நட்பு கொண்டவர். ஆதலால் வெள்ளிக்கிழமையன்று அலிகளுக்கு பொருள் உதவி செய்து அவர்களிடமிருந்து நாணயங்கள் பெற்று பூஜிப்பது, பணப்பெட்டியினில் வைப்பது விருத்தியை கொடுகின்றது. இதனை வட இந்தியாவில் நிறையப்பேர் செய்து பொருளாதார பிரச்சினையினின்று விடுபடுகின்றனர். இதனை செய்துப் பாருங்கள். வளம் பெற்று வாழ்வதை உணருவீர்கள்.

■

ஸ்ரீ வரசித்தி விநாயகர் துணை                ஸ்ரீ லட்சுமி வெங்கடேசபிரசன்ன

# முன்னோர்கள் கூறிய ஜோதிடத்தில் திருமணப்பொருத்தங்கள் சூட்சுமங்கள் பயிற்சி வகுப்பு

இறைவனிடம் அவர்கள் கேட்டுவந்த வரத்தைப் பொருத்து. தசப் பொருத்தம், ஜாதகப் பொருத்தும் மூலம் நல்ல தம்பதிகளை உருவாக்கும் சிறப்பான பயிற்சி வகுப்பு.

**பயிற்சி: 1** ஒவ்வொரு நட்சத்திரமும் கூறும் 360 பொருத்தங்களை காணும் முறைகள். 9 கிரகங்கள், 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள் கூறும் 12960 பொருத்தங்களை காணும் முறைகள்

## பயிற்சி: 2 தசப்பொருத்தங்கள் என்னும் பத்து பொருத்தங்களை பார்கும் போது கவனிக்கப்பட வேண்டியவைகள்

1. தினப் பொருத்த சூட்சுமங்கள்
2. கண சூட்சுமங்கள்
3. மகேந்திர சூட்சுமங்கள்
4. ஸ்ரீதீர்க்க சூட்சுமங்கள்
5. யோனி சூட்சுமங்கள்
6. இராசி சூட்சுமங்கள்
7. இராசி அதிபதி சூட்சுமங்கள்
8. வசிய சூட்சுமங்கள்
9. ரச்சு சூட்சுமங்கள்
10 வேதை சூட்சுமங்கள்
11. மத்திம துவித் ராசிகள்
12. அதம துவித் ராசிகள்
13. சுப பஞ்சக ராசிகள்
14. மத்திம பஞ்சக ராசிகள்
15. சுப சஷ்டக ராசிகள்
16. அசுப சஷ்டக ராசிகள்
17. சுப அஷ்டக ராசிகள்
18. அசுப அஷ்டக ராசிகள்
19. சுப நவ ராசிகள்
20. மத்திம நவ ராசிகள்
21. சுப துவாதச ராசிகள்
22. மத்திம துவாதச ராசிகள்

## பயிற்சி: 3 ஜாதகப் பொருத்தம் பார்க்கும்போது கவனிக்கக்கபட வேண்டியவைகள்

1. தோஷமில்லாத செவ்வாயும்
2. தோஷமுள்ள செவ்வாயும்
3. தோஷமில்லாத மூலா நட்சத்திரமும்
4. தோஷமுள்ள மூலா நட்சத்திரமும்
5. தோஷமில்லாத ஆயில்ய நட்சத்திரமும்
6. தோஷமுள்ள ஆயில்ய நட்சத்திரமும்
7. தோஷமில்லாத விசாக நட்சத்திரமும்
8. தோஷமுள்ள விசாக நட்சத்திரமும்
9. தோஷமில்லாத கேட்டை நட்சத்திரமும்
10. தோஷமுள்ள கேட்டை நட்சத்திரமும்
11. தோஷமில்லாத ராகுவும்
12. தோஷமுள்ள ராகுவும்
13. தோஷமில்லாத கேதுவும்
14. தோஷமுள்ள கேதுவும்
15. களத்திர தோஷ அமைப்பும்
16. புத்திர தோஷ அமைப்பும்
17. தசா சந்தி விபரமும்
18. ஏக தசை விபரமும்
19. லக்கின அமைப்புகளும்
20. ஆயுள் அமைப்புகளும்
21. வதை நட்சத்தர தோஷங்களும்
22. வைநாசிக நட்சத்திர தோஷங்களும்

## காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

| திருச்சியில் | பொள்ளாச்சியில் | சேலத்தில் | சென்னையில் |
|---|---|---|---|
| (93வது வகுப்பு)<br>நாள்: **08.08.2015**<br>சனிக்கிழமை<br>**ரவி மினிஹால்**, கலைஞர் அறிவாலயம் அருகில், சத்திரம் பஸ் நிலையம், திருச்சி - 620 002.<br>**செல்: 96297 17671** | (94வது வகுப்பு)<br>நாள்: **09.08.2015**<br>ஞாயிற்றுக்கிழமை<br>**ஸ்ரீ பாலமுருகன் ஹால்,** 47-ஏ, கோவை ரோடு, பொள்ளாச்சி-2<br>**செல்: 96297 17671** | (95வது வகுப்பு)<br>நாள்: **15.08.2015**<br>சனிக்கிழமை<br>**ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்** சுகவனேஸ்வரன் கோவில் அருகில், சேலம் - 636 001<br>**செல்: 96297 17671** | (96வது வகுப்பு)<br>நாள்: **16.08.2015**<br>ஞாயிற்றுக்கிழமை<br>**ஆஷா நிவாஷ் ரூட்லேண்டு கேட்,** 5வது வீதி, தாஜ்ஹோட்டல் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை 600 006,<br>**செல்: 96297 17671** |



**சேவை கட்டணம் ரூ. 1500/- மட்டுமே**

குறிப்பேடு, காலை, மாலை, தேனீர், மதிய உணவு உள்பட

நடைமுறை "சூட்சும" ஜோதிடர்

**Dr.G.பட்டாபிராமன்.Ph.d.,**

**தொடர்புக்கு: 96297 17671**

**கண்டிப்பாக தொலைபேசியில் முன்பதிவு அவசியம்**

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் 'திருமண தசப் பொருத்த சூட்சுமங்கள்' பாடபுத்தகம் இலவசமாக வழங்கப்படும்

# குலம் காக்கும் ஸ்ரீ குருபகவான்



ஜோதிடக் கலையரசி
**வசந்தா சுரேஷ் குமார்**
**போன்: 044–2498 0898**

**குருவின் அருளாலே குற்றமெல்லாம் போகும்**
**மருள் நீங்கி மாட்சியே ஓங்கும் சுரகுருவே**
**உம்மைப் பணிந்தேன் இனியோர் பாவமும்**
**சூழாது எம்மைக் காப்பாய் நீயே.**

இம்மானுட வாழ்வில் கல்வி, செல்வம், வீரம் என அனைத்தும் தேவையாய் உள்ளது. இம்மூன்றும் நமக்கு கிடைக்க குருவருள் வேண்டும். குருவின் பார்வை கோடி நன்மைகள் தரும். இவரின் வரவோ குபேர யோகம் உண்டாக்கித் தரும். இதனால்தான் குருவருள் இன்றேல் திருவருள் இல்லை என்பர். அத்துடன் மாதா,பிதா, "குரு" தெய்வம் என இவர் சிறப்பித்துக் கூறப்படுகின்றார். இவருக்கு பலவித பட்டப்பெயர்கள் உண்டு.

பிரகஸ்பதி, தனகாரகன், புத்திரகாரகன், லோகபூஜ்யர், வாகீசர், பீதாம்பரம், பொன்னன் பல பெயர்களால் சிறப்பித்துக் கூறப்படுகின்ற இப்பிரபு நம் அனைவரின் வாழ்விலும் பின்னிப்பிணைந்து நிற்கும் அதிக பலம் பெற்றவராவார். இப்பெருமான் தேவர்களின் குருவாகவும், அறிவின் முழுமையும், சகலசாஸ்திரங்களையும் அறிந்தவராய், மற்ற எட்டு கிரகங்களை விட பெரிய சக்திவாய்ந்த கிரகமான குருபகவான் எப்படி தோன்றினார் என்பதை நீங்கள் அறிவீர்களா? தோன்றிய அவரின் வரலாற்றைத் தொடருவோம் வாருங்கள்.

தேவலோகத்தில் இந்திரன், தேவர்கள் மட்டுமின்றி, வித்யாதர்களும் கின்னரர், கிம்புருடர்களும் அடிக்கடி அசுரர்களின் இன்னலுக்கு ஆளாக நேர்ந்தது. தேவர்களின் சிறந்த தவ வலிமையும், மந்திரசக்திகளும், அஸ்திர பாணங்கள் தங்கள் வசம் இருப்பினும் அசுரர்களைத் தங்களால் வெற்றிக் கொள்ள இயலாமல் தவித்து, அவர்களின் பிடியிலும் சிக்கித் துன்புற்றனர். இதனால் தேவர்கள் என்ன செய்வது என யோசித்தனர். பின்பு தேவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து படைப்பின் கர்த்தாவாகிய பிரம்மதேவரைப் பணிந்தனர். தங்களின் இன்னல்களை எடுத்துக் கூறினார்கள்.

அசுரர்களை பணிய வைக்கவும், அவர்களை வெல்லும் தந்திரங்களையும் கூறி அருள்வீர்களாக எனப் பணிந்து வேண்டி நின்றனர். உடன் நான்முகங்கள் தோன்றி உங்களிடம் எத்தனை சக்திகள் இருப்பினும் ஒரு குரு (ஆச்சர்யன்) வழி காட்டுதல் இன்றி உங்களால் அசுரர்களை வெல்ல முடியாது. எனவே நீங்கள் ஓர் ஆச்சார்யனை துணை கொள்ளுங்கள். உங்களின் துயரம் ஒரு முடிவுக்கு வரும் என அறிவுரை கூறி அனுப்பிவைத்தார். அவ்வாறே இந்திரனும், தேவர்களும் மும்மூர்த்திகளை வேண்டி நின்று கடுந்தவம் புரிந்தனர். இவர்களின் தவத்திற்கு இரங்கி மும்மூர்த்திகளும் பிரதட்சணமாகி உங்களுக்காக இப்பிரகஸ்ப்தி அதிக பலம் கொண்ட குருவாய் அளிக்கிறோம் வருந்த வேண்டாம் என்றனர்.

கடுந்தவத்தின் பயனாய் தோன்றிய ஸ்ரீகுருபகவான் தன்திரிகால ஞான சக்தியினாலும், ஆன்ம சக்தியினாலும் அசுரர்களை வெற்றி கொள்ளும் தந்திரங்களை கூறி தேவர்களின் இன்னல்களைத் துடைத்து இன்புற வைத்தார். இவரின் புகழைக் கூறிக்கொண்டே போகலாம். ஆம்! ஒரு குழந்தை ஜெனனமானதும் தீர்க்காயுளுடன் வாழும் என்பதில் ஐயமில்லை.

அடுத்த கட்டம் பள்ளிக்கு கல்வி கற்கச் சென்ற அங்கும் குருவின் அருள்தான் (ஆசிரியர்) தேவை. வாக்குஸ்தானம் வலுப்பெறின் அதாவது குரு நின்றாலும், பார்வை ஏற்படினும் கல்வியில் முன்னிற்பர். அதன்பின்பு உத்யோகம் எனப்படும் ஜீவன காரகன் குருபகவான்தான் அலுவலகத்தில் சொகுசாக பணிபுரிய குருவருள் வேண்டும். அவரருள் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். பாபகிரகங்கள் இருப்பின் குருவின் பார்வை பட உத்யோகத்தில் கடினமான நிலைமாறும்.

ஆண் (அ) பெண் என இருபாலருக்கும்



உ

Govt Reg No. 571/2007

# திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளை

**அனைவரும் சாப்பிட வாருங்கள்**

**சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு தரிசனம் செய்யவரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் இலவச அன்னதானம்**

## ஆடி அமாவாசை சிறப்பு அன்னதானம் செய்திடுவீர்!

நிகழும் மன்த வருடம், ஆடி மாதம் 29-ந் தேதி ( 14-08-2015 ), வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசையை முன்னிட்டு பித்ருக்கள் ஆசி வேண்டி தோஷ பரிகாரம் செய்து சிறப்பு அன்னதானம் செய்திடுவீர். இதற்கு 80G நகல் காப்பியும், PAN CARD நகல் காப்பியும், முறையான ரசீதும் பெற்றுக் கொள்ளவும். உடன் முன்பதிவு செய்யவும்.

**மாதா பிதா செய்யும் தர்மம் மக்களை காக்கும் - தானத்தில் சிறந்தது அன்னதானம் - உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே - மக்கள் சேவையே மகேசன் சேவை - வாய் வாழ்த்தாவிட்டாலும் வயிறு வாழ்த்தும் - தர்மம் தலை காக்கும் - பசித்தோர் முகம் பார் பரமன் அதில் தெரிவார் - இயன்றதை செய்வோம் இல்லாதவர்க்கே!**

Bank: SBI Chidambaram Branch,
Current A/C No: 30263863248,
IFSC Code: SBIN 0000823
Website:thiruchitrambalam.org
Email ID: santhanasubramani1969@yahoo.com
Twitter: navathandavam

Email ID:anandhancdm2015@gmail.com



உடன் தொடர்புக்கு:
**சி.நவதாண்டவ தீக்ஷிதர்**
22/10 கீழ சன்னதி . சிதம்பரம்.
செல்: 93455 12976


திருமணம் என்றவுடனையே ஜோதிடரிடம் பெற்றோர்கள் கேட்கும் முதல் கேள்வியே ஐயா! என் மகள் (அ) மகனுக்கு குருபலம் வந்துவிட்டதா என்பது தான். அடுத்துவருவது புத்திரபாக்யமா? புத்திரகாரகனே ஸ்ரீகுரு பகவான் தான் நம் ஐயம் அவரின் நிலை என்ன? என்பது தான். மோட்சஸ்தானம் என்னும் 12இல் குருபகவான் இருப்பின் மறுபிறவி இல்லை என்பர்.

நவகிரகங்களில் அளவிடற்கரிய ஒளிவீசி பிரகாசிக்கும் தன்மை கொண்ட குருபகவான் தன் சுப பார்வையினால் ஜாதகத்தில் அனைத்து தோஷங்களையும் போக்கும் வல்லமை உடையவர்கள் என புகழ்ந்து போற்றப்படுகின்றார். பிரம்மஞானத்தை உணர்ந்த ஞானிகளையும், பக்தர்களையும், ஒளி படைத்த மேதைகளையும், சேமிக்கும் வழக்கத்தையும், முக்கரணங்களின் தூய்மைக்கும் இவரே மூலகர்த்தா ஆவார். பலம் மிகுந்த இவரின் திசை இளமையில் வந்தால் பள்ளியில் முதல் மாணவன் என போற்றும் படியாய் செய்யும் அற்புத ஆற்றல் கொண்டவர் ஸ்ரீகுரு பகவான் ஆவார்.

நடுத்தர வயதில் இவரின் திசை வருவாமாயின் சகல பாக்கியமும் கிட்டும். இறுதிப் பகுதியில் வந்தால் சந்ததிகளால் மனமகிழ்வு ஏற்படும். அந்தணர்கள், பசுக்கள் இவர்கட்கு ஆதிமூலவர் இவரே. ரதங்கள், அஸ்வங்கள் (குதிரை) மத்கஜங்கள் (யானை) இவற்றைச் சித்தரிப்பவர் இவரே. மாபெரும் சாதனைகளைச் செய்ய வைத்து எவருக்குமே தலை வணங்காத தலைமைப் பதவியைத் தந்து மனிதர் குல மாணிக்கமாய் திகழ வைப்பார். மென்மைக்கும், தன்மைக்கும் வித்தான இவர் புதுப்புது யுக்திகளைக் கையாண்டு நாட்டை ஆளவைப்பார். நல்ல நண்பர்களுடன் சேர வைப்பார்.

சிம்மக் குரலைத் தந்து பலரையும் பணிய வைக்கும் ஆற்றலைத் தரவல்லவர். வித்தைகளில் சிறந்து விளங்கவும், விவேகத்தை அளிப்பவரும் அந்தஸ்தையும், ஆற்றலையும், பெரும் புகழையும் வாரி வழங்கும் அருட்கொடைவள்ளல் இவரே எனப் போற்றப்படுகின்றான். சாத்வீகமான குணமும், மந்தகாசமான முகமும், மஞ்சள் நிறமும் கொண்டவரான குரு இனிப்புப் பிரியர் ஆவார். மனித உடலில் சதை இவர். நோயில் பித்தம், வாதம், கபம் இவற்றிக்குரியவர். பொன் நகை இவரின் உலோகமாகும்.

நாட்டின் கஜானாவை (வங்கி) விளங்கவைப்பவர் இவரே. ஆண் கிரகமான குரு, பஞ்சபூதங்களில் ஆகாயம் இவர் எனப்படுகிறார். செல்வ வளம் கொண்ட வடகிழக்கு திசையின் சொந்தகாரராய் மிக, மிக மேலான சுபக்கிரகம் எனப் போற்றப்படுகின்றார். பலம் மிகுந்த தன் சுபப்பார்வையினால் பகலில் இதர கிரகங்களுக்கும் பலம் அளிப்பார். சொந்த வீடு தனுசு, மீனமாகும். இருப்பதைக் காட்டிலும் பார்வைக்கு பலம் அதிகம் உண்டென்பர். 5,7,9 என பார்வை செய்கின்றார். 5,9 உம் விசேஷப் பார்வையாகும்.



சூரியன், சந்திரன், செவ்வாய், நண்பர்கள், புதன், சுக்கிரன் பகை. புனர்வசு, விசாகம், பூரட்டாதி மூன்று நட்சத்திரத்தின் காரகராகின்றார். பொன்நிறமும், உயரமான தோற்றமும் உடையவர். பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். மனித உடலில் மிக முக்கியமான ஹிருதயம் இவரின் இடமாகும். தெலுங்கு, கன்னடம் கிரக பாஷையாகும். புஷ்பராகம் இரத்தின ஆபரணமாகும். பொன்னிற, மஞ்சள் நிற வஸ்திரமும் தூப தீபங்களில் ஆம்பல் தூபம் விரும்புவார். யானை வாகனத்தோன். அரசு சமித்துக்குரியர். பஞ்ச பூதங்களில் தேயு கிரகமாவார்.

ஈசான்யம் இவரின் திசையாகும். அதிதேவதை பிரம்மா, தட்சிணாமூர்த்தி ஆவார். ஒவ்வொரு இராசியிலும் சுமார் ஒரு ஆண்டு சஞ்சரிப்பார். உபய கிரகமான குரு சாத்வீக குணம் கொண்டவர். ரிஷபம், கன்னி, மிதுனம் நட்பு வீடுகள், மேஷம், விருச்சிகம், பகை வீடாகும். பிரதட்சணமாய கிரக மார்க்கத்தில் வலம் வருபவர். இப்படிப்பட்ட அரிய பெருமைகளைக் கொண்டவர் குருபகவான்.

இவரின் தாய் சிரத்தா தேவி, தந்தை ஆங்கிரஸ முனிவர் என்பர். தன் தந்தையிடம் கல்வி பயின்றார். தேவலோகத்தில் இந்திரனின் சபையில் தேவர்களின் குரு ஆவார். தாரா, சங்கினி இரு மனைவியர் உண்டு. கசன், எமகண்டன் என இரு புதல்வர்கள் உண்டு. ஜெப மாலை, கமண்டலம், யோகதண்டம், அபயகரம் என நான்கு கரங்களுடன் நவக்கிரகங்களுடன் வீற்றிருப்பார்.

முல்லை மலருடன் எலுமிச்சம் பழமும், சர்க்கரைப் பொங்கலையும் விரும்புவார். பலன் தரும் வருடம் 16 ஆண்டுகளாகும். ஓர் இராசியிலிருந்து அடுத்த இராசிக்கு பிரவேசிக்க ஓர் ஆண்டாகும். இவரின் திசை மத்தியில் பலன் கொடுப்பவர். தன்தாள் பணிந்து வணங்குபவர்கட்கு மிகவும் நற்பலன்களைக் கொடுக்கத் துடிப்பவர். தனித்து நின்று பலன் அளிப்பதைவிட சில கிரகங்களுடன் சேரும்போது மிகப்பெரும் யோகம் கூடும்.

சந்திரனுக்கு 1,4,7,10இல் குரு நிற்க கேசரி யோகம் (அ) கெஜ கேசரி யோகம் எனப்படும். ஜாதகத்தில் ஏதேனும் தோஷங்கள் இருப்பினும் மாற்றும் சக்தி ஏற்படும். அதுபோன்று சந்திரன், குரு சேர்ந்திருப்பின் குருச் சந்திர யோகம் பேரும், புகழும் தேடி வரும். செவ்வாயும், குருவும் இணைந்து நிற்க குரு மங்கள யோகமாகும். நிலபுலன்கள், வண்டி, வாகன சேர்க்கை ஏற்படும்.

குருபகவான் ஆட்சி (அ) உச்சம் பெற்று இலக்கினம் (அ) சந்திரன் 1,4,10இல் நிற்பின் செல்வச் சீமானாய் திகழ்வார். சகல சிறப்பும் கிட்டும். இராகுபகவான் 6இல் நின்ற குருகேந்திரத்தில் நிற்க அஷ்டலட்சுமி யோகம் உண்டாகும். எல்லாவிதமான சுகங்களும், சௌகர்யங்களும், சந்தோஷமும் உண்டு. ஒருவரின் ஜாதகத்தில் குருபகவான் ஆட்சி (அ) உச்சம் பெற்று, பாபர்களின் பார்வையின்றி அமைந்திருப்பின் பெருமையுடன் வாழும் பாக்யம் கிட்டும்.

இப்படிப்பட்ட பல பெருமைகளைக் கொண்ட குருபகவான் சிலரின் ஜாதகத்தில் பகை (அ) நீச்சம் பெறும் 3,6,8,12இல் மறைந்தும் பாபகிரக சேர்க்கையுடனும், சுபர்கள் சேராமலும் நிற்பது என குருவின் பலம் குறைந்து அமைந்த ஜாதகர்கள் வருந்த வேண்டாம். தகுந்த பரிகாரங்களின் மூலம் தாக்கம் ஏற்படாது குறைத்து குருபகவான் நற்பலன்களைத் தருவார். எனவே யாரும் வருந்த வேண்டா. பூரண நம்பிக்கையுடன் பரிகாரம் செய்தால் நற்பலன் உண்டு.

பரிகாரம்: 1.நவக்கிரக க்ஷேத்ரங்களில் முதலாவதாய் விளங்கும் ஆலங்குடி வியாழன் தரிசிப்பது நன்று.

2. திருவலிதாயம் என்கிற (பாடி) அம்பத்தூர் அருகில்

3. அரக்கோணம் — பேரம்பாக்கம் வழி தக்கோலம் ஸ்ரீதட்சிணாமூர்த்தி தரிசிப்பதும் நலமளிக்கும்.

பிரதி வியாழன்தோறும் குருவார விரதம் அனுஷ்டிப்பது மிகவும் சாலச்சிறந்தது. அவ்வாறு சென்று தரிசிக்க இயலாதவர்கள் வியாழன் அன்று 5 நெய் தீபம் ஏற்றி, மஞ்சள் நிற வஸ்திரம் சாற்றி, முல்லை (அ) சாமந்தி கொண்டு அர்ச்சிப்பதும், கொண்டைக்கடலை மாவை சாற்றி வழிபாடு செய்துவர நவக்கிரகத்திலிருக்கும் ஸ்ரீகுருபகவான் அனைத்தும் நலமாகும். குருவின் அருட்பார்வை பட அவரின் பாதகமலங்களைப் பற்றுவோம். நலனடைவோம். ■

நோய் வரும்முன் உணவே மருந்து ! நோய் வந்தபின் மருந்தே உணவு !

எல்லா உயிர்களும் இன்புற்றுஇருக்கவே யாம்ஒன்றும் அறியேன் பராபரமே !

உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப் பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே.

# M.S. ஹெர்பல்ஸ்

1 / 31, மாரியம்மன் கோவில் தெரு, கல்பகனூர் – 636 109, ஆத்தூர் Tk., சேலம் Dt. தமிழ்நாடு.

உலகிலேயே முதன்மையான மற்றும் தலைச்சிறந்த மருத்துவம் நமது சித்த மருத்துவம். சித்த மருத்துவத்தில் தலைச்சிறந்த பெரும் மருந்துகளான, **காலாந்தக கௌரி, லோகநாத பதங்கம், நவலோக செந்தூரம், நீலகண்டவாலை, பரிபூரணம், பஞ்சகல்ப செந்தூரம், மார்கண்டேய மெழுகு, இரசகந்தக பஸ்பம், கனகலிங்க கற்பூரமெழுகு** மற்றும் **முப்பு, குரு மருந்துகள்** மேலும் மூலிகைகளின் சத்துகளாகிய உப்புகளை எடுத்து அதை **கட்டு மருந்துகளாக்கி** நோய்களின் தன்மைக்கு ஏற்றவாறு சில நாட்கள், சில வாரங்களில் முழுமையாக குணப்படுத்தப்படும்.

**எமது நிறுவனத்தின் சிறப்பு**

- நாள்பட்ட தோல் நோய்
- சரவங்கிவாதம், மூட்டு, தண்டுவடம்,
- இடுப்பு, கழுத்து வலிகள்
- குழந்தையின்மை, மகளிர் நோய்கள்
- அனைத்து ஆண்மை குறைபாடுகள்
- தீராத ஆஸ்துமா, சைனஸ், அடுக்குதும்மல்
- குடல்புண், சிறுநீரக கோளாறுகள்
- யூரியா, கிரேட்டின் அதிகரிப்பு
- யூரிக்ஆசிட் அதிகரிப்பு
- கண் குறைபாடுகள்
- ஹெப்பாடிடிஸ் B,C,வைரஸ்
- இரத்தக்கொதிப்பு
- வெள்ளைபடுதல், 9 வகையான மூலம்
- வெண்குஷ்டம், வெள்ளை தழும்புகள்
- அனைத்து வகையான புற்றுநோய்
- கொடிய வெட்டையான பாலியல் நோய்
- கருப்பை நீர்கட்டி, சதை கட்டி
- தலைமுடி பிரச்சனைகள்

**மற்றும் உள்ள அனைத்து நோய்களுக்கும் குரு பரம்பரை மூலமாக வரும் 100க்கு 100 குணமளிக்கக்கூடிய ஏந்தவித பக்கவிளைவுகள் இல்லாத பெரு மருந்துகளை கொண்டு சில நாட்கள், சில வாரங்களில் குணம் காணலாம்.**

**100க்கு 100 குணமளிக்கக்கூடிய குருபரம்பரை மூலமாக பல நூறு ஆண்டுகளாக கையாளப்பட்டு வந்த இம்மருத்துவ முறைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் நோக்கில், நேரடி செய்முறை பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவர்கள் தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவும்.**

## சித்த மருத்துவத்தின் இரகசியம்

**பாகம் – 1**

புத்தகம் – கலர் படங்களுடன்,
ஆய்வக சான்றிதழ்களின் எடுத்துகாட்டுடன்,
வீடியோ சிடியுடன் வெளிவர உள்ளது.
மருத்துவர்கள் தொடர்புகொள்ளவும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க :**

சித்தாந்த ரத்தினம்
சன்மார்க்கி, குருபரம்பரை மருத்துவர்

**M. சுகவனேஸ்வரன்,** RAMP., SMP., B.A., D.Y.Ed., D.A.,

**Cell : 94438 53756** email : msherbalcare@gmail.com

# பணம் புழக்கத்துக்கு நல்ல பாதை வகுத்திடும் சூட்சும இரகசியங்கள்



ஜோதிட ரத்னா
**எஸ்.தனபாலன்** MA.,D.Co.OPDA
செல்: 95003 93813
86954 58950

வாஸ்து என்பது மிகவும் அற்புதமான ஒரு சாஸ்திரம். இதை சரியான முறையில் பின்பற்றினால் நீங்கள் வாழ்வில் உயர்ந்துக் கொண்டே போகலாம். ஆனால் அதில் தவறு ஏற்பட்டால், பாதிப்பு ஏற்படும்.

உங்கள் கையில் அடிக்கடி பணம் வந்துக் கொண்டிருக்க வேண்டுமானால் நீங்கள் தூங்கும் மேற்குப் பக்கம் தலைவைத்துப் படுக்க வேண்டும். எவ்வளவு தான் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் அதற்கு ஏற்ற விதத்தில் பணம் கிடைக்காமல் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த முறை நிறைவான பயன் தரும்.

பணம் அதிகமாக கைமாறும் காரியம் ஒன்றில் நீங்கள் கலந்துக் கொள்ளச் செல்லும்போது சிகப்பு அல்லது இளம்சாம்பல் நிற உடைகளை அணிந்துச் செல்லுங்கள். இந்த நிறங்களில் உடைகள் இல்லையென்றாலும் கைக்குட்டை ஒன்றையாவது இந்த நிறத்தில் எடுத்துச்செல்லுங்கள். இதனால், சில அதிசயங்களும் நடப்பதற்கு வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

உங்கள் வீட்டில் உள்ள குழாய்களில் அடிக்கடி தண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்கிறதா? என்பதில் கவனமாக இருங்கள். இப்படி நடக்கும் வீடுகளில் செலவு அதிகமாகவே இருக்கும். இதேபோல் வீட்டினுள் எந்தப் பகுதியிலும் பூஷணம் பிடிக்காமல் வைத்திருப்பதிலும் கவனமாக இருங்கள்.

எக்காரணம் கொண்டும் வடக்குப் பக்கம் தலைவைத்துப் படுக்காதீர்கள். இப்படி செய்வதன் மூலம் நீங்கள் சோம்பேறிகளாகி விடுவீர்கள். அதேபோல், பணம் சம்பாதிக்கும் ஆர்வமும் குறைந்து விடும். உங்கள் வீட்டில் உள்ள கிழக்குப் பகுதியில், எந்த இடத்திலாவது, சில்லறை காசுகள் போட பானை ஒன்றை வையுங்கள். இதற்காக, சிறுவர்கள் கூட்டாஞ்சோறு ஆக்கும் பானை ஒன்றை நீங்கள் பயன்படுத்துவதான் சிறப்பு. இந்த பானையில் நிறைய சில்லரைக் காசுக்களைப் போட்டு அதன் வாயை மூடாமல் கிழக்கு பக்கத்தின் ஒரு பகுதியில் வையுங்கள். முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால், இப்படி ஒரு பானை அந்தப் பகுதியில் இருப்பது எவருக்கும் தெரியக்கூடாது. அது யாருடைய பார்வையிலும் படாத ஓர் இடத்தில் தான் இந்தப் பானையை வைக்க வேண்டும். சாதாரண அறைகளில் குடியிருப்பவர்கள் கிழக்கு பக்கத்தில் உள்ள ஓர் இடத்தில் இந்தப் பானையை வைக்கலாம். இப்படி செய்வதன் மூலம் உங்களுக்கு அதிகமாக பணம் வந்து சேருவதை நீங்கள் அனுபவரீதியாக அறிந்துக் கொள்ளலாம்.

உங்களது சாப்பாட்டு அறையில் பிரேம் போட்ட வட்ட வடிவமான கண்ணாடி ஒன்றை மாட்டி வையுங்கள். சாப்பாட்டு அறை சுவற்றில் மாட்டப்படும் அந்தக் கண்ணாடியில் மேஜை மீதுள்ள உணவு வகைகள் தெரிய வேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பணம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

உங்கள் வீட்டுக்குள் தென்கிழக்கு பகுதியில் ஒன்பது மீன்கள் கொண்ட மீன் தொட்டி ஒன்றை வையுங்கள். தொட்டியில் இருக்கும் மீன்களின் எண்ணிக்கை ஒன்பதாக இருக்க வேண்டும். அதில் எட்டு மீன்கள் "கோல்டு பிஷ்" — என்று சொல்லப்படும் மீன்களும் (சிவப்பு அல்லது பொன்நிறம்) ஒரு மீன் கருப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம், பணமும், அதிர்ஷ்டமும் உங்களை நோக்கி பாசக்கரம் நீட்டும். ■

# கிரக பாதிப்பும் பரிகாரமும் 7

# துலா இலக்கினம்




**கிருஷ்ணன் இராஜகோபாலன்,**
B.A., M.F.M.
**பாரம்பரிய ஜோதிடர்**
**ஆன்மீக ஜோதிட ஆய்வாளர்**
**செல்: 98404 53792**


துலா நாயகர் சுக்கிரனை உயிர் நாதனாகக் கொண்ட ஜீவனுக்குரிய இலக்கினம் இவரது பிறவி ஜாதகத்தில் பாதிக்கப்பட்டிருப்பின் இலக்கினம் தொடாந்த முதல் நான்கு வீடுகளும் தொடர்பை இழந்து செயலற்றுவிடும் நிலைக்கு தள்ளப்படுவார். இத்தன்மையால் இவருக்கு நித்தம் நித்தம் உயிருக்கு கண்டம். பிரச்சினைகள் நோய் நொடி தாக்குதல் இந்நிலையில் பிறப்பெடுத்த ஒரு ஜீவன் அதிக பட்சம் பதினைந்து ஆண்டுகள் பால அரிஷ்டத்தில் பாதிப்புக்குள்ளாவார். பெண்களானால் ஆண்வர்க்கத்திற்கும் ஆண்களானால் பெண் வர்க்கத்திற்கும் பகை படுதல் மற்றும் கரோதம் பொறாமை போன்ற இந்திரியங்களின் சேஷ்டைக்கு ஆட்பட்டு கஷ்டங்களை அனைத்துக் கொண்டு வாக்கையை கடத்துவார். இதனைக் கண்டறிந்து ஜாதகரீதியாய் உரிய பரிகாரங்களைச் செய்து நிவர்த்தி பெறுதல் மிகவும் நலம் பயக்கும்.

**பரிகாரங்கள்:** ஆன்மகாரகர் சூரியனுக்கும் ஆயுள்காரகர் வெய்யோனின் மைந்தனான சனிக்கும் மற்றும் தரும கரும காரகர் புதனுக்கும் உரிய நவக்கிரஹ சாந்தி ஹோமங்களை வேதியர்களை வைத்து நடத்துவதும் கோபூஜை செய்வதும் சுமங்கிலி (சுபாஷினி) பூஜை செய்வதும் இராதாகிருஷ்ன திருமண வைபவ நிகழ்ச்சிகளை பக்தர்களை சிறப்பிக்கவும் இக்குறை நீங்கப் பெற்று வெகு சீக்கிரத்திலயே சுபிட்ஷத்தை அடையப் பெறுவீர்கள்.

அன்றாடம் துளசி மாடத்தில் விளக்கேற்றி பூஜை புனஸ்காரங்களை வீட்டுப் பெண்டிர் அனுஷ்டிக்க வேண்டும். காலையில் எழ வேண்டும். பசுஞ் சாணியை கோமியத்தில் கலந்து சூரியோதயமுன் வீட்டு வாசலில் தெளிக்க வேண்டும். அடுக்குடிமாடி குடியிருப்பு எனின் வீட்டு வாசற்காலில் கோமியத்தைத் தெளித்து பசுஞ்சாணியால் மெழுகி கோலமிட வேண்டும். இப்படிச் செய்த வர நாளடைவில் வீட்டிலுள்ள துரபிட்ஷங்கள் விலகி ஓடிடும். லக்ஷ்மி குடி புகுவாள், நித்ய வாசமும் செய்திடுவாள். மங்கலங்கள் பெருகும். தனம் பெருகும். சௌபாக்கியங்கள் நிறைந்திருக்கும். குடும்பத்தில் இனிமை கலந்து மக்கள் ஒற்றுமை பேணுவார்கள். வீட்டில் கலகலப்பு சிரிப்பொலியும் பூர்ணமாய் திகழும். என்கிற நிலை உருவாவதால் இங்கு எமனுக்கும் எமதூதுவர்களுக்கும் வாஸ்து புருஷனுக்கும் வேலையில்லை. ஒன்றும் கூறாமல் மெதுவாய் நகர்ந்து சென்றுவிடுவார்கள்.

பூர்வபுண்ணியம் என்ற அறிவுத்தான் குலதெய்வ 5ஆம் வீடு நசித்து போனால் ஜாதகருக்கு இந்த பூவுலகே ஒரு நிரந்தர காராகிரஹமாகிவிடும். மீளாத்துயரில் நித்யவாசம் செய்திடுவார் எதனைச் செய்தாலும் தோல்வியும் ஏமாற்றமும்தான் இறுதியில் மிஞ்சும். இவருடைய வேதனை மற்றும் புலம்பலை இவருக்கு அனுகூலமாக உடன் இருந்து செயல்படுபவர்களும் பதில் ஏதும் கூறாமல் வெளியேறிவிடுவார்கள். அநாதையாய் தனித்து விடப்படுவார் ஜாதகர். பிரச்சனைகள் வலிய வந்து கட்டி அணைத்து துன்புறுத்தும். மருகினாலும் கூவியழைத்தாலும் கரம் நீட்டுவார் எவருமில்லை. ஜாதகரை பயம் ஆட்கொள்ளும். இறுதியில் இவரை படுக்கையிலும் தள்ளிவிடும். இத்தன்மையால் ஆன்மபலத்துடன் மனோபலமும் பெரிதும் பாதிப்புறும். இக்குறை நீங்க உரிய நிவாரண பரிகாரங்களை மேற்கொள்ள ஜாதகர் செயல்பட தானாகவே பட்ட கஷ்ட நஷ்டங்கள் பயம் பகை நோய் ஏமாற்றங்கள் இவரை விட்டு வெளியேறி நாளடைவில் நிலமை சீர்படும்.


**பரிகாரம்: குலதெய்வ பிரார்த்தனை**

2. இறந்த முன்னோர்களுக்கு திதி பிண்டம் அளிப்பது. இதற்குரிய வேதியர்களைக் கொண்டு இதனை சமுத்திரம் கடல் நதிக்கரை குளக்கரையில் செய்துவிடுவது மிகவும் நலம் பயக்கும். இத்துடன் தான தர்மங்கள் வசதிக்கேற்ப செய்துவிடுவது.

3. முன்னோர்கள் பிறந்த நாள் அல்லது வம்சத்து மூத்தோர் இறையோடு ஒன்றிய நாள் போன்ற தினங்களில் முதியோர் இல்லங்களுக்கு சென்று அல்லது மனவளர்ச்சி குன்றிய இல்லங்களுக்குச் சென்று அல்லது தொண்டு நிருவனங்களின் காப்பகங்களுக்குச் சென்று அல்லது ஆதரவற்ற சிறார் விடுதிக்கோ சென்று அவர்களுக்கு விருந்தோம்பல் அளிப்பதுடன் அவர்களுடன் இனிய சம்பாஷணையை மேற்கொள்வதும் மிக்க நற்பலன்களை கைமேல் தரும் பொக்கிஷமாய் அமைந்திடும். இத்தன்மையால் உங்களுடைய முன்னோர் வழித்தோன்றல்கள் அவர்கள் அறிந்தோ அறியாமலோ அறியாமையால் செய்த கடும் பாபவினைகள் அனைத்துமே நீங்கள் செய்கின்ற இப்புண்ணியத்தால் விடுபட்டு விலகி ஓடும் என்பதில் இறைவனுக்கும் மாற்று கருத்து இல்லை எனலாம்.

4. கைமாறு கருதாமல் இரத்த தானம் அளிப்பது. மற்றும் அகால மரணத்தை தழுவிய உறவினர்களின் உடல் உறுப்புகளை தானம் அளித்திட வழி செய்வது.

5. ஊனமுற்றோர் காப்பகங்களுக்கு சென்று அவர்களின் நலத்திற்காக, மேம்பாட்டிற்காக ஏதேனும் ஒரு வகைகயில் உதவுவது. அவர்களுடன் நட்புடன் இணங்கி இனிய சம்பாஷணையில் சிறிது நேரமாவது ஈடுபடுவதும் அவர்களுக்குரிய உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதும் உங்களை விட்டு விலகிப்போன குலதெய்வம், சாந்தி அடைந்து மனதார வாழ்த்துக்களை அளிக்க முன்வரும்... இத்தன்மையில் உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனையாய் நம்பிக்கை துளிர்க்கும். எதிலும் ஒரு ஈடுபாடும் செயல் திறனும் தெளிந்த சிந்தனையும் அறிவும் பிரகாசிக்கும்.



6. சிறிய சுய தொழில் மற்றும் அன்றாட கூலித் தொழிலாளிக்கு அவர்கள் ஈடுபடும் தொழிலுக்குகந்த எளிய உபகரணங்களை பரிசாக அளித்து அவர்களை மகிழ்வித்து ஊக்குவிப்பது. இந்நிலையில் நாள்கடத்திய எதிர்பார்த்து வெறும் ஏமாற்றத்தை கொடுத்த நிலையில் ஜீவனங்கள் உங்களின் வருகைக்காக காத்திருந்தது போல் நீங்கள் எதிர்பார்த்தது போல நல்ல ஜீவனம் கிடைக்கப் பெறுவதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் பெறக்கூடிய பாக்கியத்தை அடைகிறீர்கள்.

உங்களுடைய ஜாதகப்படி பூர்வ புண்ணிய அதிகாரி சனீஸ்வரர் என்பதால் நீசர்களுக்கே அதிகபட்சமாக முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். மற்றும் சாதிமதம் இனம் பேதம் இவரைப் பொருத்தவரை காட்டவே கூடாது. என்பதால் சமத்துவ அன்னதானம் செய்திடல் நல்லது அன்றாடம் காகங்களுக்கு அன்னபிரசாதம் வைத்திட வேண்டும். ஏதேனும் கோமடத்திற்கு சென்று பசுக்களுக்கு புண்ணாக்கும் அகத்திக்கீரையும் அளித்திட வேண்டும். பழைய துணிகள் காலணிகள் மற்றும் தேவையற்ற பழைய வீட்டு சமையற் பாத்திரங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவற்றை ஏதேனும் காப்பகங்களுக்கு தானம் அளித்திட வேண்டும்.

7. சிவ பிரதோஷ நாட்களிலும் மாத சிவராத்திரி நாட்களிலும் வழிபாடே மிகமிக அவசியமாக கருதப்படுகிறது. அந்நாட்களில் கண்டிப்பாக ஒரு பொழுது விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

8. சித்தர்கள் வழிபட்ட திருத்தலங்களுக்கு குறிப்பாக திருவண்ணாமலை சதுர கிரி சென்னிமலை (கோவை) மகேந்திரகிரி மலை (திருக்குறுங்குடி) சேர்வர்ராயன் மலை பொதிகை மலை (சேர நாடு) மருத மலை (கொங்குநாடு) கழுகு மலை (கோவில்பட்டி அருகில்) சென்று வழிபாடு செய்தல் தோஷங்களை பெருமளவு குறைக்கும். மேலும் ஆவணியாபுரம் சோளிங்கர் காளாஸ்திரி சிம்மாசலம் சேஷாசலம் (திருப்பதி) அகோபிலம் — போன்ற மலைவாச சிவன், பெருமாள் மற்றும் நரசிம்மரையும் வணங்கித் தொழ வேண்டும். மன இறுக்கம் நீங்கி தெளிவு பிறந்து அறிவு பிரகாசிக்கும். நோய்நொடி உபாதைகள் மற்றும் சனி மற்றும் சிவன் பெருமாளுக்கும் அவன் அடியார்களுக்கும் பல்லாண்டு காலமாக இழைத்த கொடிய தோஷங்கள் மற்றும் பிடி சாபங்கள் போன்ற அனைத்து தோஷங்களும் நீங்கிவிடும். புற வாழ்க்கையை விடுத்து அகவாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதுக்கள் சிவனடியார்கள் மற்றும் திருமால் மற்றும் மால்மருகன் அடியார்கள் போன்றோருக்கு அன்னதானம் செய்வித்தும் அவர்களின் ஆசியை பெறுவதும் உங்களை பீடித்த தரித்திரம் நீங்கப் பெறுவதை காண்பீர்கள்.

மற்றும் ஸ்ரீ வானமுட்டிப் பெருமாள் — கோடிஹத்தி (கோழிக்குத்தி) மாயவரம் (மயிலாடுதுறை) அருகில் இக்கோயில் உள்ளது. இங்குதான் பிப்பல மஹரிஷி கடுந்தவம் புரிந்து சனி ஈஸ்வரரின் அருளைப் பெற்றார். இதனால் இவர் எழுதிய சனி காயத்ரியும் சனீஸ்வர ஸ்தோத்திரமும் இத்தல கல்வெட்டு மூலம் அறியலாம். இங்குள்ள பெருமாள் மற்றும் தாயாரை ஸ்ரீ தயாலக்ஷ்மீ ஸமேத பக்தப்பிரியன் — ஸ்ரீ பக்தப்பெருமாள் — என கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. பரிகாரத்திற்குப் பின் பூர்வ புண்ணியம் பலம் பெற்று தோஷமனைத்தும் நீங்கப் பெற்று உங்கள் வாழ்க்கையில் நம்பிக்கை

நட்சத்திரம் பிறந்து மனோபலம் வாக்கு பலம் புஜ பலம் தைரியம் தேஜஸ் போன்றவைகளை நீங்கள் அடையப் பெற்று துவண்டு போன நீங்கள் இனி நிமிர்ந்து நடை போடுவீர்கள். என்பதாய் அமைந்திடும். இது தொடர்பாக உங்கள் ஜாதகப்படி 4ஆம் மற்றும் 5ஆம் வீட்டின் காரகத்திற்கு பொருப்பேற்ற சனி தன் அருள் கரத்தை உங்களுக்கு நீட்டுவார். மேலும் தொடர் அற்றிருந்த அடுத்தடுத்த காரகங்களுக்குரிய 6,7,8ஆம் வீடுகள் இனிய தொடர்பையும் நல்லிணக்கமும் பெற்று குருவும் மங்களனும் தத்தமக்குரிய பங்கினை அளித்து உங்களை குளிர்வித்திடுவார்.

இனி பாக்கியம் என்கிற தருமஸ்தானம் பாதிப்புறின், ஜாதகருக்கு எவ்வளவு வரவுகள் வந்திடினும் அவையனைத்தும் கரைந்து பிறர் கையை எதிர்பார்க்கும் நிலை உருவாகிடும். இதற்கு காரணம் என்னவெனில் புதன் பெரும்பாலோர் ஜாதகத்தில் இலாபத்தானிதிபதி சூரியனோடு இணைந்தே விளங்குவார். இந்த புதனுக்கு விரயத்தானமும் ஒரு காரகம் ஆகும் என்ற நிலையில் ஜாதகருக்கு சுப விரயத்தை கொடுத்து செலவினங்களை இழுத்து விடுவார். இத்தன்மையால் ஜாதகரும் ஏதாவது நல்ல விருந்தோம்பலில் கலந்துக் கொள்ள வேண்டியிருக்கும். கையிருப்பும் கரையும், நண்பர்கள் உறவினர்கள் குழாம் புடைசூழ ஜாதகர் தடபுடல் வாழ்க்கையில் ஈடுபடுவார். இதனால் செலவை இவராகவே இழுத்து விட்டுக் கொள்வார். இதுவே இவருக்கு அகலக்காலாகி வரவு பற்றாகுறையாகிவிடும். தருமஸ்தானம் பாதிப்புறின் ஜீவன கருமத்தானமும் பாதிப்புறும். இத்தன்மையால் ஜீவனத்தில் பிரச்சினைகளும் அதன் வரவுகளும் சந்தேகத்திற்கு இடமாகும். மேலும் இதனைத் தொடர்ந்து கருமச் செலவுகளும் தண்டச் செலவுகளும் இடம்பிடிக்கும். இச்சங்கிலி தொடர்பால் ஆதாயத்தானமும் சிக்கலுக்குள்ளாகும். வரவேண்டிய வரவுகள் தேங்கி நிற்கும், குலதெய்வம் உறக்கத்தில் ஆழ்ந்துவிடும். இறந்த முன்னோர்களின் ஆத்மா கலக்கமுறும்., வேதனையும் ஆதாயம் இல்லாத விரயஸ்தானமோ அநாவசிய செலவுகளை கூட்டிவிடும். இத்தன்மையால் இருக்கும் கையிருப்பும் கரைந்து ஜாதகரை படுக்கையில் கிடத்திவிடும்.

**பரிகாரங்கள்:** கொள்ளிடக்கரையில் உள்ள உத்தமர் கோவில். வடசென்னை — கவரப்பேட்டை அரியத்துறையில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை வரமூர்த்தீஸ்வரர் தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில், நாகர்கோவில் — இசக்கி அம்மன் கோவில், பெரிய பாளையம் பாளையத்தம்மன், படவேடு ரேணுகாபரமேஸ்வரி, உத்திரமேரூர் புலிவலம் சிம்மகுரு. கலவை மற்றும் மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி உறையூர் வெக்காளியம்மன் மற்றும் மதுர காளி, விஜயவாடா கனகதுர்கா மைசூர் சாமுண்டேஸ்வரி, கன்னியாகுமரி பகவதியம்மன், கொடுங்கநல்லூர் மற்றும் சோடானிக்காரா மற்றும் குத்துமாகண்டி பகவதியம்மன் ஸர்ப தோஷத்தால் பீடிக்கப்பட்ட பாக்கியாதிபதி என்கிற தருமாதிபதி மற்றும் அவர்க்குரிய வீடும் தோஷம் நீங்கிட மேற்குறிப்பிட்டுள்ள — காளி மற்றும் கரு கோவிலுக்கு ஏதேனும் ஒன்றுக்காவது பயணித்து அங்கு முறைப்படி படையல் மாவிளக்கு அபிஷேக ஆராதனை செய்து இறைவியை குளிரவைத்து பின்னர் பக்தகோடிகளுக்கு அன்னதானம் போன்றவைகளை நேர்த்தியுடன் அந்தந்த தலகோவில் பூசாரி பரிகாரங்களை செய்து பாப தோஷ வினைகளைப் போக்கிக் கொள்ளுதல் நலம் பயக்கும். சரீரத்திற்குரிய பாபவினைகளை — கடினமான தோஷங்களை நாம் போக்கிக்கொள்ள வேண்டும். இவ்விதம் செயல்படுவதன் மூலம் தெய்வத்திற்கும் ஜீவன்களாகிய நமக்கும் உள்ள உறவு மேன்மேலும் பலப்படுகிறது. என்பதை சிந்தனையில் கொள்ளுங்கள். தாயின் அருளுக்கு என்றும் பாத்திரமாவோம்.

குருவிற்கு மேற்குறிப்பிட்டுள்ள தலங்களைத் தவிர மேலும் ஒன்றை இங்கு குறிப்பிடுகிறேன். செங்கல்பட்டை கடந்து படாளம் கூட்டு ரோடில் இறங்கி மாத்தூர் — சூணாம்பேடு சாலையில் உள்ள புலிபர் கிராமத்திற்கு பேருந்து (அ) ஷேர் ஆட்டோ மூலம் சென்று அங்கு குடிகொண்டிருக்கும் அருள்மிகு அபித குஜாம்பாள் உடனுறை வியாக்கிரபுரீஸ்வரரை தரிசிப்பதும் மிகவும் நன்று. இக்கோவிலில் வியாக்கிரபுரி சித்தரும் புலிப்பாணி சித்தரும் ஒழுகி தொழுது நின்ற ஈஸ்வரரோ சுயம்புலிங்கேஸ்வரர். இதற்கு வெகு அருகாமையில்தான் உத்திரமேரூர் வந்தவாசி சாலையிலிருந்து காஞ்சீபுரம் செல்லும் பாதையில் புலிவல கிராமத்தில் சிம்ம குரு எழுந்தருளியுள்ளார். என்பதையும் இங்கு குறிப்பிடுகிறேன். பாதிப்புக்குள்ளான ஆஸ்தீக பெருமக்கள் இங்கு பயணித்து குருவின் திருவருளை பெற்று திளைக்குமாறு பிராத்திக்கிறேன். அனைத்து பாக்கியயினங்களுக்கும் பொதுகாரகத்தை பெற்றவர் தேவகுருவான பிரஹஸ்பதி ஒருவரே என்பதை சர்பங்கள் நன்கு அறியும். இதனைக் கருத்தில் கொண்டே பரிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சரீரங்களுக்கு தோஷக்கறைகள் நீக்கிய பின்னர் குரு ஒருவரே பாக்கியங்களை அளிக்க முடியும் என்பதை கருதி தோஷக்கறையை போக்கிக் கொண்ட நேயர்கள் இதற்கு பின்னர் குரு வழிபாடு செய்து பாக்கியங்களை மீட்டுக் கொள்ளுமாறு பணிந்து கேட்டுக் கொள்கிறேன். இதன் பின்னர் வெகு சீக்கிரத்திலேயே பாக்கியத்தானம் புத்துயிர் பெற்று அதன் பயனால் பிற காரகங்களும் தடை நீங்கப் பெற்றவர்களாய் ஆகி அனைத்து சௌபாக்கிய இனங்களை பெற்று நலமுடன் வாழ்ந்திடுங்கள்.

ஹரி ஓம் தத்சத்

# எளிய தெய்வப் பரிகாரங்கள் 4

கே. துரைராஜ்
செல் : 94431 67376

பசுவின் உடலில் தேவர்களும், மும்மூர்த்திகளும் நவகிரகங்களும் வாசம் செய்வதால், பசுவுக்கு தினமும் உணவு (அகத்திக்கீரை) கொடுத்து வந்தால், நமது பூர்வ ஜென்ம கர்மவினை தோஷங்கள் நீங்கும். பித்ருக்களின் சாபம் விலகும். வெள்ளிக்கிழமை கொடுத்தால் மகாலட்சும கடாட்சம் கிட்டும். சனிக்கிழமை கொடுக்க சனி தோஷப் பாதிப்பு நீங்கும். ஞாயிறு மாலை இராகு காலத்தில் கொடுக்க கோர்ட், கேஸ், வம்பு வழக்குகள் நீங்கும்.

பழைய ஓலைச்சுவடி குறிப்பின்படி குல தெய்வம் சாபம் உள்ளவர்கள் வீட்டில் நொச்சி செடி வைத்துப் பூஜை செய்து வழிபட்டு வரலாம்.

புதிய வீடு கட்டும்போது நிலைவாசல் வைக்கும்போது சங்கு ஸ்தாபனம் செய்து விட்டால், அந்த வீட்டில் வாழ்க்கை குபேர சம்பத்துடன் திகழும்.

அமாவாசையைத் தொடர்ந்து வரும் வளர்பிறை சதுர்த்தி திதி, பௌர்ணமியைத் தொடர்ந்து வரும் தேய்ப்பிறை சதுர்த்தி திதி நாட்களில், விநாயகருக்கு அருகன்புல் மாலை சாற்றி நெய் தீபம் ஏற்றி வழிபட, கடன், துன்பங்கள், கஷ்டங்கள், சங்கடங்கள் நம்மை விட்டு அகலும்.

வீட்டில் மனை தோஷம் உள்ளவர்களும், சொந்த வீடு அமையாதவர்களும் அன்னை புவனேஸ்வரியை வழிபட தோஷம் நீங்கும். சொந்த வீடு அமையும்.

இறந்த முன்னோர்களின் படங்களை வீட்டுப் பூஜை அறையில் வைக்கக்கூடாது. தெற்குத் திசையில் வடக்கு நோக்கிப் பார்ப்பது போல் அமைத்து வழிபட அவர்களின் ஆசி நமக்குக் கிடைக்கும்.

வியாழன் தோறும் காலை ஒரு நேரம் தம்பதியினர் விரதமிருந்து மதியம் தட்சிணாமூர்த்திக்கு இனிப்புப் பொங்கல், கொண்டைக்கடலை (தாளிதம் செய்யாமல்) நைவேத்யம் செய்து வழிபட்டு, பூஜை செய்து மாலையில் சிவன் கோயிலில், தட்சிணாமூர்த்தி, நவகிரகத்தில் குரு பகவான், கால பைரவருக்குப் பூஜை செய்து, புத்திர பாக்கியம் அருளும்படி வேண்ட 192 நாட்களுக்குள் புத்திர பாக்கியம் உண்டாகும்.

ஸ்ரீ பைரவருக்குத் தேய்பிறை அஷ்டமியில் பஞ்சதீபம் (இலுப்பெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், பசு நெய்) ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத கஷ்டங்கள் தீரும். தனித்தனி தீபமாக அகல் விளக்கில் ஏற்றி வழிபட வேண்டும்.

மணி பிளாண்ட் இல்லத்தில் குபேர மூலையில் வளர்த்தால் செல்வச் செழிப்பு மேலோங்கி கடன் சுமை குறையும்.

தரையில் அமர்ந்துள்ள ஆலயங்களில் உள்ள கருவறைகளை விட மலைக்கோயிலில், கடற்கரை ஆலயக் கருவறைகளில் உள்ள தெய்வங்களை வழிபட, செல்வ வளம், நோயற்ற வாழ்வு, வாழ்க்கையின் பிரச்சனைகள் தீர்ந்து பலன் கிடைக்கும். இத்தகைய அமைப்பு உள்ள ஆலயங்கள்: 1) திருப்பதி 2) பழனி 3) சுவாமிமலை 4) திருத்தணி 5) மருத மலை 6) திருச்செந்தூர் 7) இராமேஸ்வரம் 8) கன்னியாகுமரி 9) குற்றாலம்

எதிரியை ஜெயிக்க வேண்டுமானாலும், அரசாங்க வழக்குகளில் சாதகமான தீர்ப்பு பெற வேண்டுமானாலும், ஞாயிறு மாலை இராகு காலத்தில் சரபேஸ்வரரை வழிபடப் பலன் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமை 3 மாலைகள் வாங்கி முருகன் கோயிலுக்குச் சென்று முருகன், வள்ளி, தெய்வானை மூவருக்கும் 3 வாரம் வெள்ளிக்கிழமை சாற்றி அர்ச்சனை செய்து வழிபட விரைவில் திருமணம் நடக்கும்.

சொந்த வீடுகளைச் சரி செய்ய முடியாத நிலையில் இருப்பவர்களும், வாடகை வீட்டில் வேறு வழியில்லாமல் குடியிருப்பவர்களும், வாஸ்து பலம் உள்ள குற்றாலம், பாபநாசம், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சன்னதி, பிள்ளையார்பட்டி அலயங்களில் சிறிது நேரம் அமர்ந்து வாஸ்து தோஷத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.



ஹஸ்தம் நட்சத்திரத்தன்று துர்க்கைக்கு சிகப்புப்

பட்டுத் துணி சாற்றி, 27 எலுமிச்சை கனி மாலை சாற்றி, சிகப்புத் தாமரையைப் பாதத்தில் வைத்து துர்க்கா திரிசகதியினால் குங்கும அர்ச்சனை செய்து அந்த குங்குமத்தை நெற்றியில் வைத்து வர உடன் திருமணம் நடைபெறும்.

ஆலயத்தில் சகல சௌபாக்கியங்களுடன் உள்ள இறைவன் பெயரில் அர்ச்சனை செய்யாமல், நமது பெயர் நட்சத்திரத்திற்கு அர்ச்சனை செய்தால்தான் இறைவனிடம் நமக்கு வேண்டியதைப் பெற முடியும்.



பித்ரு தோஷம் உள்ளவர்கள் தொடர்ந்து அமாவாசை காலத்தில் பெருமாளுக்கு நெய் தீபம் ஏற்றியும், சிவபெருமானுக்கு சந்தன அபிஷேகமும் செய்து வர, பித்ரு தோஷம் நிவர்த்தியாகும்.

தொழில் மந்தமாக உள்ள தொழில் நிறுவனங்களில் செப்புத் தகட்டில் அல்லது வெள்ளித் தகட்டில் வார்க்கப்பட்ட சுதர்ஸன எந்திரத்தைத் தக்க இடத்தில் வைத்து தினமும் வழிபட சக்கரத்தின் மகிமையால் தொழில் மேன்மை உண்டாகும்.

நெல்லி மரத்தில் மகாவிஷ்ணு வாசம் செய்வதாக ஐதீகம். வீட்டில் நெல்லி மரம் வளர்ப்பதால், பூமி, மனை, வீடு, வாஸ்து தோஷங்கள் நிவர்த்தியாகும்.

பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் கரி நாட்களில் பெருமாளைத் தரிசனம் செய்வதும், வியாழக்கிழமை குபேர காலம், சூரியன் அஸ்தமன நேரத்தில் (மாலை 6.00 மணியிலிருந்து 6.30 மணி வரை) தரிசனம் செய்வதும் செய்யும் தொழிலில் இலாபங்களையும், சகலவிதமான ஐஸ்வர்யங்களையும் பெற உதவும்.

ஹோமங்களில் சிறந்தது மிருத்யுஞ்ஜய ஹோமம். ஆயுள் விருத்தியைத்தரக் கூடியது. சிவாலயங்களில் ஈசான்ய பகுதியில் உள்ள கால பைரவரைக் கீழ்கண்ட மிருத்யுஞ்ஜய மந்திரத்தைச் சொல்லி வழிபடுபவரைக் கண்டு யமன் அஞ்சி நிற்பதால், மரண பயம் நீங்கி, நீண்ட ஆயுள் பெறலாம்.

மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்

**த்ரயம்பஹம் யஜாமஹே**

**சுகந்திரம் புஷ்டி வர்த்தனம்**

**ஊர்வாருக மிவ பந்தநாத்**

**ம்ருத்யோர் மூக்ஷிய மாம்ருதாத்.**

திங்கட்கிழமை பௌர்ணமி வந்தாலும், மிருகசீரிட நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி வந்தாலும், இந்நாளில் சிவபெருமானை வில்வ இலைகளால் அர்ச்சனை செய்து வழிபடுவது முக்கோடி மடங்கு பலன் தரும் என நாரதருக்கு உருத்திரம் சொன்னதாக நாரத புராணம் கூறுகிறது.

மாணவர்கள் கல்வியில் சிறந்து அதிக மதிப்பெண்கள் பெற, மாதா, மாதம் வரும் புனர்பூச நட்சத்திரத்தன்று பெருமாள் கோயிலில் நெய் தீபம் ஏற்றி, துளசி சாற்றி அர்ச்சனை செய்து, அங்கு வழங்கும் தீர்த்தம் பருக, ஞாபக சக்தி அதிகரித்து நற்பலன் கிடைக்கும்.

புது வீட்டில் குடி புகுந்த சிலருக்குத் தொடர்ந்து ஏதாவது இடைஞ்சல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தால், ஒரு பசுவை வீட்டிற்குள் கொண்டு வந்து கோ பூஜை செய்தால், இடைஞ்சல்கள் தீரும்.

பொதுவாக கோயில்களில் மேற்கு நோக்கியிருக்கும் கோயிலகள் பரிகாரத் தலங்களாகவும், கிழக்கு நோக்கிய கோயில்கள் அனுகிரக தலங்களாகவும், வடக்கு நோக்கிய அம்மன் கோயில்கள் பெரும்பாலும் சக்தி உக்ரமான தலங்களாகவும் காணப்படுகின்றன.

மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், தங்களது ஜென்ம நட்சத்திரமான மூல நட்சத்திர நாளில் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை வழிபட்டு நற்பலன் பெறலாம்.

மேற்குப் பார்த்த சிவன் கோயிலில் 9 மாதம் அமாவாசை தோறும் நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபட பிதுர் தோஷங்கள் விலகும். மேற்குப் பார்த்த சிவனை வழிபடத் திருமணத் தடை நீங்கும். வேலை வாய்ப்புக் கிடைக்கும். வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும். மேற்குப் பார்த்த சிவன் சன்னதியைத் தரிசித்தால், கிழக்குப் பார்த்த சிவன் சன்னதிகள் ஆயிரத்தைத் தரிசித்த பலன்களை அது தரும். பிரார்த்தனைகள் உடனுக்குடன் நிறைவேறும்.

ஒரே குடும்பத்தில் ஒரே இராசிக்காரர்களாகக் குடும்பத்தில் இருக்கும்பட்சத்தில், ஏழரைச்சனி, அஷ்டமச் சனி, அர்த்தாஷ்டமச் சனி நடக்கும்போது ஆண்டு தோறும் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குச் சென்று வழிபடுவது சிறந்த பரிகாரம் என்று ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன.

நமது வாழ்க்கையில் நாம் அறிந்தோ அறியாமலோ ஏற்படும் திருஷ்டி, ஏவல், பில்லி, சூன்யம், செய்வினைப் பாதிப்பு கடன் தொல்லை, தொழில் நஷ்டம் போன்ற பாதிப்பிலிருந்து விடுபட

சனிக்கிழமைகளில் சக்கரத்தாழ்வார் சன்னதியை 12 முறை வலம் வந்து வழிபட பாதிப்பு நீங்கும்.

சாம்பிராணியின் புகைக்குக் கண் திருஷ்டி, தோஷங்கள், துர் ஆவிகள் போன்றவற்றை விரட்டும் சக்தி உண்டு. ஹோமம் வளர்க்க முடியாதவர்கள், சாம்பிராணி புகையின் மூலம் நம் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால், சாம்பிராணி புகையானது சூரியன் அஸ்தமித்த பிறகு போடுவதால் முழுப் பலன்கள் கிடைக்கின்றன. சாம்பிராணி புகை காட்டும் வீட்டில் நோய்கள் குறையும். ஆயுள் அதிகரிக்கும்.

இராகு பகவான் துர்க்கைக்குக் கட்டுப்பட்டவர். ஞாயிற்றுக்கிழமை இராகு காலத்தில் வியாதி, கடன் தொல்லைகளால் பாதிக்கபட்டவர்களும், செவ்வாய்க்கிழமை இராகு காலத்தில் இராகு தோஷ நிவர்த்தி, மகப்பேறு, வறுமை தீர்ந்து செல்வம் வேண்டுபவர்களும், துர்க்கைக்கு இராகு கால பூஜை செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஊழ்வினை தோஷங்களுக்கு (ஜாதகத்தில் சனி, செவ்வாய் சேர்க்கை பார்வை உள்ளவர்), 9 சனிக்கிழமைகள் ஆஞ்சநேயருக்கு நெய் தீபம் ஏற்றி, 9ஆவது சனிக்கிழமை வடைமாலை சாற்றி, அர்ச்சனை செய்து வழிபட, ஊழ்வினை தோஷம் விலகும். அல்லது சிவாலயத்தில் உள்ள சண்டிகேஸ்வரருக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட தோஷம் விலகும்.

மாதாமாதம் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அவதாரம் எடுத்த சுவாதி நட்சத்திர நாளில் மாலை நேரத்தில் ஸ்ரீ இலட்சுமி நரசிம்மருக்கு நெய்தீபம் ஏற்றி, அர்ச்சனை செய்து தொடர்ந்து வழிபட, கடன் தொல்லை நீங்கி, செல்வச் செழிப்பு ஏற்படும். வியாபாரம், தொழில் விருத்தியாகும் என்று ஜோதிட சாஸ்திரங்கள் கூறுகின்றன.

முற்பிறவியின் தோஷம் (பூர்வ ஜென்ம கர்மவினை தோஷம்) நீங்க, வளர்பிறை ஏகாதசி திதியில், அவல், பொரி பாயாசம் கிருஷ்ணன் கோயிலில் நைவேத்தியம் செய்து பக்தர்களுக்கு விநியோகம் செய்ய பலன் கிட்டும். அல்லது முருகனை ஜென்ம நட்சத்திரம், நாம் பிறந்த கிழமையிலும் வழிபட தோஷம் நீங்கும்.

கலியுகத்தில் காரிய சித்திக்கு துர்க்கை வழிபாடு மிகச் சிறந்தது. பாரதப் போரில் வெற்றி பெற துர்க்கையை வழிபடுமாறு கிருஷ்ணர் அர்ச்சுனருக்கு உபதேசித்தார். போரில் வெற்றி பெற ஸ்ரீ இராம பிரான் துர்க்கையை வழிபட்டுப்போருக்கு சென்றார்.

எந்த நட்சத்திரத்திற்கு ஆலயத்தில் அர்ச்சனை செய்யப்படுகிறதோ, அதற்கான பலன்கள் கோபுர கலசங்களின் மூலம் நட்சத்திர மண்டலங்களை விரைவில் சென்றடைகின்றன. கோபுர கலசங்களை வழிபட தெய்வத்தை வழிபட்ட பலன் உண்டு.

வேலை இன்றி கஷ்டப்படுபவர்கள், சனிக்கிழமை மாலை கால பைரவரை வன்னி மர இலைகளால் அர்ச்சனை செய்து வழிபட வேலை தேடி வரும்.

தொழில் சரியில்லாதவர்கள்,வேலை இல்லாதவர்கள், தன் காரியம் நிறைவேற 21 சனிக்கிழமைகளில் அந்தி சாய்ந்த பின் வெற்றிலை, பாக்கு, செவ்வரளிப் பூக்களால் பைரவரை நெய் தீபம் ஏற்றி, அர்ச்சனை செய்தால், கைமேல் பலன் கிடைக்கும்.

அம்பாள் கோயிலில், கோயில் மூடப்படும்போது தரிசனமும், காலையில் முதன் முதலான தரிசனமும் தொடர்ந்து ஒன்பது நாட்கள் செய்து வந்தால், நமது பிரச்சனைகள் தடைகள் நீங்கும்.

கோயிலில் வளர்க்கப்படும் பசுவிற்கு வாழைப்பழம், அகத்திக்கீரை வாங்கிக் கொடுப்பது மிகச் சிறந்த பரிகாரமாகும்.

கோயிலில் உள்ள ஸ்தல விருட்சத்திற்குத் தண்ணீர் ஊற்றுவதும், ஒரு டம்பளர் பசும் பால் ஊற்றுவதும் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட உதவும். ஸ்தல விருட்சத்தைச் சுற்றினால் ஆலய கர்ப்ப கிரகத்தைச் சுற்றி வந்த பலன் கிடைக்கும்.

திருமோகூர் சக்கரத்தாழ்வார் திரு உருவப் படத்தை வீட்டின் முன் அறையில் வாயிலை நோக்கி மாட்டி வைத்தால், திருஷ்டி தோஷங்கள், தீய சக்திகள் அணுகாது.

கால கிரகங்களைத் தன் வாலில் அடக்கியாளும் ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட எந்தக் காலமும் உகந்ததுதான், எனினும் அமாவாசை திதியிலும், மூல நட்சத்திரம் மற்றும் வியாழன், சனிக்கிழமைகளிலும் வழிபட சிறப்பான பலன்களை அடைவது உறுதி.

ஒரு பொருளைத் தொலைத்து விட்டாலோ, தவறுதலாக எங்கேயாவது வைத்து தேடிக் கொண்டிருந்தாலோ அரைக்காசு அம்மனை மனதில் நினைத்து, வீட்டிலேயே நாம் வழிபட்டால், அந்தப் பொருள் உடனடியாகக் கிடைத்து விடும். பொருள் கிடைத்தவுடன் மறக்காமல் ஒரு தட்டில் கொஞ்சம் வெல்லம் வைத்துப் பூஜை அறையில் நைவேத்யம் செய்ய வேண்டும். அரைக்காசு அம்மன் அருளால் காணாமல் போன விலையுயர்ந்த பொருட்கள் உடனடியாகக் கிடைக்கப்பெறும். புதுக்கோட்டை — திருச்சி சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ள திருக்கோகர்ணம் ஆலய அன்னை பிரகதாம்பாளே அரைக்காக அம்மன் என்று அழைக்கப்படுகிறாள்.

வில்வம் வளரும் வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்வதோடு, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் செல்வத்தை வாரி வழங்குவாள் என்று சுரபாலர் கூறுகிறார். முறையாக வில்வத்தை வளர்த்து வழிபடுவோர்க்கு ஈசனின் அருள் என்றைக்கும் உண்டு.

**தொடரும்...**

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை

# அற்புத வசிய மூலிகைகள்

## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

**அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட்காலம் வரையில் பலன் பயன் அளிக்கக்கூடியது.**

**1. தெய்வீக மூலிகை ரூ.15,000/-** உங்களது குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வம் எது வேண்டுமோ இந்த மூலிகையை சிவப்பு பட்டுத்துணியில் சுற்றி மரப்பலகை மேல் வைத்து தினமும் தெய்வத்தின் யந்திரம் வைத்து அதற்குண்டான மந்திரங்கள் தினமும் காலை, மாலை முழு நம்பிக்கையுடன் ஊதுவத்தி காண்பித்து வந்தால் அந்த தெய்வம் உங்களுக்கு காட்சி தந்து உங்களுடனே இருந்து உங்களது எல்லாக் காரியத்தையும் வெற்றி அடையச் செய்யும்.

**2. வெள்ளை விஷ்ணுகிராந்தி மூலிகை தாயத்து ரூ.10,000/-** சகல ஐஸ்வர்யமும், சகல வசியம், எடுத்த காரியம் அனைத்து ஜெயம் உண்டாக்கி கடைசி காலம் வரையில் சகல செல்வாக்கு, செல்வம் உண்டாக்கும். தொழில் வெற்றி, குடும்பத்தில் ஒற்றுமை.

**3. சகலரும் வசியமாகும் தொட்டாற்வாடி மூலிகை தாயத்து ரூ.5000/-** ஆண், பெண் வசியமாக்கும் மிகச்சிறந்த மூலிகை

**4. பகைவரையும் நண்பனாக்கும் சங்கிலிக்கொடி மூலிகை தாயத்து ரூ.5000/-** உங்களது பகைவர்கள, எதிரிகள், உங்கள் மேல் பாசம் உண்டாக்கி நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள்.

**5. அதிர்ஷ்ட ரக்ஷிணி மூலிகை தாயத்து ரூ.5000/-** திடீர் காரியசித்தி உண்டாக்கும் புத்ரதோஷம், அனைத்து துன்பங்களையும் விரட்டி அடிக்கும் வல்லமை உள்ளது.

**6. செய்வினை, தீயசக்தி குடும்பத்தில் ஒற்றுமை குடும்பத்தில் சந்தோஷம் உண்டாக்கும் மூலிகை பவுடர் ரூ.10,000/-** இந்த மூலிகை பவுடரை பூஜையில் சாம்பிராணி போல் தினமும் 2 வேளை மனமுறுக போடவும்.

**7. கணவன் - மனைவி ஒற்றுமை மூலிகைப் பவுடர் ரூ.10,000/-** கணவன் - மனைவி ஒற்றுமை இல்லாமை, கணவன் - மனைவி பிரிந்து கோர்ட், கேஸ் விவகாரம் முற்றிலும் நீங்கும். இருவரும் சேர்ந்து சந்தோஷமாக இருப்பீர்கள்.

**8. ஏறு சிங்கி ரூ.10,000/-** 21 இன்ச் அளவுள்ளதில் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணி சுற்றி உங்களது பூஜையில் மரப்பலகையின் மேல் வைத்து ஊதுவத்தி காண்பித்து மனதார வேண்டினால் நலிவடைந்த தொழில், வியாபாரம் மீண்டும் செழிக்கும். கடன் பிரச்சனை நீங்கி சகல ஐஸ்வர்யமும் உண்டாகும்.

**9. நினைத்ததை நடத்தும் ஸ்ரீபைரவர் யந்திரம் ரூ.7,500/-** தீயசக்தி, செய்வினைகள், காரியத்தடை, அப குணங்கள், பங்காளிகள் பிரச்சனை, வழக்கு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம், எதிர்பார்த்த உத்யோகம், உத்யோக உயர்வு, வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் லாபம் தரும் மகாசக்தி பைரவர் யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டினால் கையினால் எழுதி உங்களது பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். இத்துடன் பைரவர் வழிபாட்டு முறை வழங்கப்படும்.

**10. தொழில் வியாபாரம், பணவரவு சிறக்கும் ஸ்ரீகாமதேனு யந்திரம் ரூ.7,500/-** தொழில் மந்தம், வியாபாரத் தடை, ஊழியர் பிரச்சனை, கடன் தொல்லை அனைத்தும் விலகி எதிர்பார்த்தபடியே தொழில் சிறப்பாக நடக்கும். வியாபாரம் செழிப்பாக மாறும். எதிர்ப்பார்த்தபடியே தொழிலாளர் பிரச்சனை விலகும். கடன் தொல்லைகள் விலகி எதிர்பார்த்த பணவரவு, ஐஸ்வர்யம் உண்டாக்கும் மகாசக்தி ஸ்ரீ காமதேனு யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டில் கையினால் எழுதி உங்கள் பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். ஸ்ரீகாமதேனு வழிபாட்டுமுறை கட்டுரை வழங்கப்படும்.

**11. வசிய அஞ்சனம் ரூ.5,000/-** உங்களது இருபுருவத்திலும் வைத்து தினமும் 21 தடவை "ஓம் ரீம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வலோக வசியமாக ஸ்வாஹா" சொல்லவும். இதனால் ஆண்/பெண் வியாபாரம் வசியம் ஆகும்.

**12. வசிய மருந்து ரூ.2000/-** இந்த மூலிகை பவுடருடன் உங்களது 5 இடத்து அழுக்கு எடுத்து 4 வேளை சாப்பாடு குழம்பு, வருவலில் கலந்து உங்களது பேச்சை கேட்க வேண்டும் என்பவருக்கு கொடுக்கவும். இதனால் கணவன், மனைவி, பிள்ளைகள் உங்களது பேச்சைக் கேட்பார்கள்.

**13. வசிய எண்ணெய் ரூ.5000/** இந்த எண்ணெயுடன் உங்களது ரத்தம் 2 சொட்டு கலந்து ஒரு வாரம் வைத்து இருந்து விரும்பியவருக்கு உச்சந்தலையில் சிறிது 3 தடவை தடவவும். மேலும் அவர்கள் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் கலந்து விடவும். இந்த எண்ணெய் உபயோகிக்கும் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமியார், நாத்தனார், எதிரிகள், காலம் முழுவதும்ட உங்களுக்கு வசியமாவார்கள்.

**14. மூலிகைக் கட்டு ரூ.3000/-** இதன் மேல் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணியால் பூஜையில் பலகைமேல் வைப்பதால் தீயசக்திகள, வெளியேறி, செல்வச்செழிப்பு, சுபநிகழ்ச்சிகள், சந்தோஷம், பணவரவு, ஐஸ்வர்யம் பெருகும்.

**15. ஞாபக சக்தி படிப்பில் முன்னேற்றம் மூலிகைப் பவுடர் பாக்கெட் ரூ.500/-** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும். இதனால் படிப்பில் பிள்ளைகள் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**16. செய்வினை, கிரகதோஷம், தீயசக்தி, கண்திருஷ்டி, சூன்யம் நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/-** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும்.

17. மூட்டுவலி, மூலிகை தைலம் பாட்டில் ரூ.300/- கை, கால், இடுப்பு, மூட்டுவலி, இரத்தக்கட்டு சுளுக்கு, தொடைவலி, எலும்புமுறிவுக்கு இரவு படுக்கும்போது நன்றாக தேய்த்து உறங்கவும். ஒரே நாளில் பலன் தெரியும்.

**18. ஜன்னி, தலைவலி, சைனஸ், அலர்ஜி நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.1000/-** பவுடரை நல்லெண்ணையுடன் சிறிது கலந்து சூடுபடுத்தி தலைக்கு தேய்த்து குளிக்கவும். தேய்த்து மூழ்கியவுடன் ரசம் சாதம் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் தூங்கவும்.

**19. வாகன விபத்து ஆபத்து நீக்கும் வெள்ளி மோதிரம் ரூ.3500/-** எதிர்பாராதவிதமாக ஏற்படும் வாகன விபத்து, ஆபத்து மனித வாழ்க்கையில் ஏற்படும் ஆபத்துக்கள் தடுக்கும் அபூர்வ வெள்ளி மோதிரம்.

**20. வியாதி, தீயசக்தி விலக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/-** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நெய் கலந்து தினமும் பூஜையில் குறைந்தது 48 நாட்கள் தீபமேற்றவும். வியாதிகள் குணமாகி தீய சக்திகள் வெளியேறும்.

**21. அபூர்வ மூலிகைகள் DVD ரூ.1500/-** இதுவரையில் மூலிகைப் புத்தகத்தில் மூலிகையின் பெயர், புகைப்படம் மட்டும் பார்த்து இருப்பீர்கள். அனைத்து அபூர்வ மூலிகைகள், அற்புத மூலிகைகள், சஞ்சீவி மூலிகைகள் மற்றும் புல்லுருவிகள் அனைத்தும் DVD மூலம் காணும் வாய்ப்பு மூலிகைகளின் பயன் மற்றும் பலன், உபயோகிக்கும் முறை தெளிவாகச் சொல்லப்படும். DVD வீட்டில் இருந்தால் மூலிகையின் நல்ல அதிர்வுகள் மூலம் வீடே சுபிட்ஷமாக இருக்கும்.

**22. குபேர கண்ணாடி ரூ.600/-** தினம் காலையிலும், வெளியே செல்லும்போதும் குபேர கண்ணாடியை பார்த்துச் சென்றால் மேலும் குபேர மந்திரத்தை 21 முறைச் சொல்லவும். காரிய ஜெயம், அதிர்ஷ்டம், செல்வம், செல்வாக்கு, பணவரவு உண்டாகும்.

- வசிய மூலிகைகளின் மேல் நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே போன் செய்து விட்டு நேரில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தேவையான பொருட்களின் விவரம் தெளிவான விலாசத்துடன் செல் நம்பருடன் "ஞான குரு" என்ற பெயருக்கு மணிஆர்டர் அனுப்பவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டி.டி. அனுப்பவும். பொருட்கள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.
- நம்பிக்கை, இல்லாமல், தேவையில்லாத கேள்வி கேட்பதை கண்டிப்பாக தவிர்க்கவும்.
- எப்படிப்பட்ட செய்வினை, ஏவல், தொழில் வியாபாரம், கல்வி, உத்யோகம் கணவன், மனைவி பிரச்சனை, விரும்பியவரை மணக்க மற்றும் அனைத்துப்பிரச்சனைக்கும் சித்தர், முறையில் பரிகாரங்கள் உத்திரவாதத்துடன் செய்யப்படும்.



முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : **95002 19209**

**ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு**

**பியுட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்**

**புரசைவாக்கம், சென்னை - 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )**

ஜெயா டி.வி.யில் காலை மலரில் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியைக் காண எனது WEBSITE பார்க்கவும் www.sidharmiracleherbals.com

# கந்தர் சஷ்டி கவசம் அரங்கேறிய சென்னிமலை


3



அறந்தாங்கி சங்கர்
செல்: 9444 160161

முருகனைப் பெருமானை நாம் மனமுருகி துதிக்கும் கந்த சஷ்டி கவசம் அரங்கேறிய தலம் எது தெரியுமா? ஈரோடு அருகில் உள்ள சென்னிமலை என்னும் திருத்தலத்தில் தான் பாலன் தேவராய சுவாமிகளால் கந்த சஷ்டி கவசம் அரங்கேற்றப்பட்டது. அத்தகைய சிறப்பு மிக்க சென்னிமலை சுப்ரமணிய சுவாமியை தரிசிக்கச் செல்வோமா?

**தல வரலாறு:** நொய்யல் ஆற்றுக்கு அருகில் வாழ்ந்து வந்த ஒருவர் தாம் வளர்க்கும் பசு தினந்தோறும் யாருக்கும் தெரியாமல் சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் பால் சொரிந்தது. இதை ஒருநாள் கவனித்துவிட்ட உரிமையாளர் அந்த குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிப்பார்க்க அங்கு அழகிய முருகப்பெருமான் சிலை இடுப்பு வரை நல்ல வேலைப்பாடுடன் இருக்க இடுப்புக்கு கீழ் பாதம் வரை கரடுமுரடாக இருக்க அதை உளி கொண்டு செதுக்க முயன்றார். அப்போது சிலையில் இருந்து இரத்தம் பீறிட்டது. அதைக் கண்டு எல்லோரும் பயந்து போய் வேலையை நிறுத்தி விட்டு அங்கு வாழ்ந்த சரவண முனிவர் அருளாசிப்படி ஆண்டவர் அப்படியே இருக்கப் பிரியப்படுகிறார் என்று அறிந்து சிலையை அப்படியே சென்னிமலை மீது பிரதிஷ்டை செய்து வழிப்பட்டனர் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். சிலை இடுப்புக்கு கீழ் வேலைப்படற்று இருப்பதை இன்றும் காணலாம். தவிர ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் யுத்தம் ஏற்பட்டபோது ஆதிசேஷனுடைய சிரம் விழுந்த இடம் சென்னிமலை என்று கூறுகின்றனர்.



**தல பெருமை – மாமாங்கத் தீர்த்தம்:** 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வறட்சியான கோடை காலத்தில் சிறிதேனும்கூட மழையில்லாத கொடூரமான நேரத்தில் மலைக்கோயிலுகு தென்புறம் அமைந்துள்ள தீர்த்த விநாயகர் முன்பு திடீரென வழிந்தோடும் மாமாங்கத் தீர்த்தமானது அதிசயம் நிறைந்த தெய்வீகச் சிறப்பாக அமைந்துவிடுகிறது.

இது ஒரு மலைக்கோயில் இதன் உயரம் 1740 அடி படிகள் 1320 அதிசயத்திலும் அதிசயமாக இரட்டை மாட்டு வண்டி 1320 திருப்படிகள் வழியே தங்கு தடையின்றி ஏராளமான செங்குத்தான வளைவுகள் உள்ள பாதை வழியே மலையேறிய அதிசயம் நடந்தது சிறப்பு மிகுந்த சஷ்டி விரதம்: குழந்தை வரம் வேண்டுவோர் முறையாக சஷ்டி விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபட்டால் குழந்தை வரம் கிடைக்கும்.

சிரசுப் பூ உத்திரவு கேட்டல்: திருமணம் வரன்கள், விவசாயம், கிணறு வெட்டுதல், புதிய வியாபாரம் தொடங்கல், வியாதிகள் ஆகியவை குறித்து முடிவு செய்ய ஆண்டவர் முன்னால் அர்ச்சனை செய்து சிரசுப் பூ உத்திரவு கேட்டு நல்ல உத்திரவு கிடைத்தபின்பு காரியத்தை தொடங்குகிறார்கள். சிரசுப்பூ உத்திரவு நல்லபடியாக கிடைக்காவிட்டால் குறிப்பிட்ட செயல்களை பக்தர்கள் தொடங்குவதில்லை.

முருகன் நடுநாயகமாக மூர்த்தியாக, செவ்வாய்கிரகமாக அமைந்து மூலவரைச் சுற்றி எட்டு நவக்கிரகங்கள் உள்ளன. மூலவரை வழிபட்டாலே நவக்கிரகங்களை வழிபட்ட பலன் உண்டு. கந்த சஷ்டி கவசம் அரங்கேற்றம் நடந்த தலம்.

வள்ளி, தெய்வானை சென்னிமலை ஆண்டவரை திருமணம் செய்ய அமிர்த வல்லி, சுந்தரவல்லி என்ற பெயருடன் தவம் செய்தது தனிப்பெருங்கோயிலாக பக்தர்களுக்கு காட்சி தருவது

*சிறப்பு. இவை ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. அருணகிரிநாதருக்கு படிக்காசு வழங்கிய தலம்.*

*முருகன் தன்னைத்தானே பூஜித்த தலம். இடும்பனுக்கு பொதிகை மலை செல்ல வழி காட்டிய தலம். அக்னி ஜாத மூர்த்தி (இரண்டு தலைகள் உள்ள முருகன்) என்ற சுப்பிரமணியர் எங்கும் இல்லை. இவர் மிகவும் விசேஷமானவர். கோயிலுக்கு பின்புறம் பிண்ணாக்கு சித்தர் குகை உள்ளது. தமிழகத்தில் வேறு எந்த தலத்திலும் காணமுடியாத வேங்கை மரத்தேர் இத்தலத்தில் உள்ளது. அடர்ந்த மரங்கள் மலை மீது அமைந்துள்ள மிக அழகான அமைதியான சிறப்பு வாய்ந்த கோயில்.*

**தலசிறப்பு:** *கந்த சஷ்டி கவசம் அரங்கேற்றம் நடந்த தலம். இரட்டை மாட்டு வண்டி மலையேறிய அதிசயம் மலை மீதுள்ள கோயிலுக்கு அடிவாரத்திலிருந்து தினந்தோறும் திருமஞ்சன தீர்த்தம் பொதிகாளைகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இது வேறு எந்த தலத்திலும் காணமுடியாது. மாமாங்கத் தீர்த்தம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வறட்சியான கோடை காலத்தில் சிறிதேனும் கூட மழையில்லாத கொடூரமான நேரத்தில் மலைக் கோயிலுக்கு தென்புறம் அமைந்துள்ள தீர்த்த் விநாயகர் முன்பு திடீரென பொங்கி வழிந்தோடும் மாமாங்கத் தீர்த்தமானது அதிசயம் நிறைந்த தெய்வீகச் சிறப்பாக அமைந்து விடுகிறது. வள்ளி, தெய்வனை சென்னிமலை ஆண்டவரை திருமணம் செய்ய அமிர்த வல்லி, சுந்தரவல்லி என்ற பெயருடன் தவம் செய்து தனிப் பெருங்கோயிலாக பக்தர்களுக்கு காட்சி தருவது சிறப்பு. இவை ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. அருணகிரிநாதருக்கு படிக்காசு வழங்கிய தலம். முருகன் தன்னைத்தானே பூஜித்த தலம். அக்னி ஜாத மூர்த்தி (இரண்டு தலைகள் உள்ள முருகன்) என்ற சுப்பிரமணியர் வேறு எங்கும் இல்லை.*

**சித்தர் சமாதி:** *சத்தியஞானி புண்ணாக்கு சித்தர் மலைமேல் இவர் குகை உள்ளது. அம்மன் சன்னதியிலிருந்து பின்புறம் சென்றால் மலையின் உச்சியில் 18 சித்தர்களில் ஒருவரான பின் நாக்கு சித்தர் (புண்ணாக்கு சித்தர்) கோயில் வேல்கள் நிறைந்து வேல்கோட்டமாக அமைந்துள்ளது. இதன் அருகே சரவணமாமுனிவரின் சமாதிக் கோயிலும் உள்ளது.*

*இங்கு விநாயாகர் திருச்சந்தி விநாயகராகவும், காவல் தெய்வமாக இடும்பன் அருள்பாலிக்கிறார்கள்.*

**பிரார்த்தனை:** *கல்யாணத்தடை நீங்குகிறது. குழந்தை பாக்கியம் கைகூடுகிறது. தவிர செவ்வாய் தோஷம் நீங்குகிறது. இத்தலம் பிரார்த்தனைத் தலங்களில் முக்கியமானது. நோய், நீக்கம், துன்ப நீக்கம், ஆயுள் பலம், கல்வி, அறிவு, செல்வம், விவசாயம் செழிப்பு ஆகியவற்றைப் பெற இத்தலத்தில் முருகனிடம் வேண்டுகிறார்கள். இயற்கை மூலிகை மரங்கள் செடி கொடிகள் நிறைந்த மலையாக இருப்பதால் இங்கு வரும் இரத்தக்கொதிப்பு, ஆஸ்துமா, நெஞ் சுவலி நோய்கள் உடையவர்கள் குணமாகிறார்கள். இத்தலத்துக்கு அடிக்கடி வந்து போகும் பக்தர்கள் அனுபவப்பூர்வமாக கண்ட உண்மை என தெரிவிக்கிறார்கள்.*

*முருகனுக்கு பால், தயிர் அபிஷேகம் செய்யப்படுகிறது. முடிக்காணிக்கை அன்னதானம், காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், முடி இறக்கி காது குத்தல், சஷ்டி விரதம் இருத்தல், தவிர சண்முகார்ச்சனை, முருக வேள்வி ஆகியவை செய்கிறார்கள். கார்த்திகை விரதம் இருத்தல், ஏழைகளுக்கு அன்னதானம் செய்தல், திருப்பணிக்கு பொருளுதவி செய்தல் ஆகியவை இத்தலத்துக்கு வருபவர்கள் முருகனுக்காக செய்யலாம்.*

*அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், சென்னிமலை — 638 051. ஈரோடு மாவட்டம். காலை 6 மணி முதல் 11 வரை, மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். தொலைபேசி: 04294—250223*


## பரிகார மூலிகை இரக்ஷை கிடைக்கும்

வாசகர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு ஏற்றம் பெறும் வகையில், கர்ம பலன்களில் மாற்றம் தரும் நிலையில் விதியை மதியால் வெல்லக்கூடிய இரகசியங்களை "தமிழ் புத்தாண்டில்" வெளியிடப்பட்ட அற்புதமான ஜீவநாடி பரிகார மூலிகை இரக்ஷை இப்போது தயார் நிலையில் உள்ளது. ஒரு மண்டலம் பூஜை செய்யப்பட்டு உருவேற்றி, உயிரோட்டத்துடன் வழங்கப்படுகிறது. "அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்தின் ஆதரவுடன் அனுபவம் வாய்ந்தோரால் வழங்கப்படுவதால் பலனுக்கு 100% உத்தரவாதம் தரப்படுகிறது. நமது ஜீவநாடிப் பரிகாரங்களைக் ஏற்கெனவே கடைபிடித்து பலன் பெற்றோர் ஏராளம். இந்த இரக்ஷை சகலவிதமான பாப, தோஷ, சாபநிவர்த்திக்கும், உடனடி பலனுக்கும், இரக்ஷையுடன் "தமிழ் புத்தாண்டு" மற்றும் "குரு பெயர்ச்சி" யில் வெளிவந்துள்ள ஜீவநாடி ஆலய பரிகாரங்களையும் கண்டிப்பாக தொடர்ந்து கடைபிடித்தால் வாழ்வில் மாற்றம் காண்பது உறுதி. சந்திரன் நின்ற இராசியை உறுதி செய்துக் கொள்வது அவசியமாகும். குறைந்த அளவிலே ஜீவநாடி பரிகார யந்திர இரக்ஷைகள் செய்யப்பட்டுள்ளதால் பாக்கியம் செய்தோர்க்கே கிடைக்கும் பிராப்தம் ஏற்படும். இதுவரை பதிவு செய்தவர்களுக்கு தொடர்ந்து வரிசைப்படி அனுப்பப்பட்டு வருகிறது

**தேவைக்கு தொடர்பு கொள்க - 94445-41239**



# பழமொழிகள் உணர்த்திடும் வாழ்வின் வழிமுறைகள் ①


எல்.என். விஜயசாரதி அய்யங்கார்
செல்: 90035 86186/ 93446 05966


மனிதவாழ்வில் நிகழப்போகும் நிலைகளை முன்கூட்டியே அறிந்துக் கொள்ள நம் முன்னோர்கள் ஆண்டு அனுபவித்ததை பழமொழியாக எளிதில் புரியும் வண்ணம் சொல்லிவைத்துவிட்டு சென்றுள்ளனர். அந்த பழமொழிகள் பழக்க வழக்கத்திற்கு ஏற்ப, கால சூழ்நிலையைப் பொருத்து கருத்துக்கள் சொல் வழக்கில் மாறுபட்டாலும், அதன் மூலப்பொருள் எக்காலத்திற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கும் என்பதை நாம் அனுபவத்தில் உணர்ந்து ஆராதிக்கின்றோம். முன்னோர்களை வணங்குதல், மூத்தவர்களுக்கு மதிப்புக் கொடுத்து, தாய் தந்தையின் சொல்லுக்கு கட்டுப்பட்டு சமுதாயத்தில் சிறந்த மகனாக விளங்குவதற்கு பழமொழிகள் உணர்த்திடும் வழிமுறைகளைக் கடைபிடித்து வாழ்ந்தால் வாழ்வை வளப்படுத்தி, தாழ்வு நிலைக்கு தள்ளப்படாமல் மேன்மை நிலைக்கு உயர்ந்திட வழிவகுக்கும், வாழ்வில் ஏற்றம், இறக்கம், இன்பம், துன்பம் எது நிகழ்ந்தாலும் வாழ்வை சமநிலைப்படுத்தி வாழ்ந்திட வழிவகுக்கும்.

**1. மருத்துவர் கை பிடிப்பார்; ஜோதிடர் கை, கால் ஆகிய இரண்டையும் பிடிப்பார்"**

**பொருள்:** டாக்டரிடம் போனால், நமது கை நரம்பில் அவரின் கையை வைத்து துடிப்பறிந்து வியாதியை கண்டுபிடிப்பார். கைரேகை ஜோதிடரிடம் போனால், நமது கையில் உள்ள ரேகையைப் பார்தது பலன் சொல்லிட நம் கையைப் பிடிப்பார். ஜாதகக் கட்டம் பார்க்கும் ஜோதிடரிடம் போனால், இராசிக்கட்டத்தில் கிரகங்கள் நிற்கும் நட்சத்திரங்களின் கால்களைக் கண்டுபிடித்து அதன்படி பலன்களைச் சொல்வார். நட்சத்திரப் பாதங்களையே, கால்கள் என அழைப்பர். மேற்கண்ட பழமொழியை, "மருத்துவன், கை பார்ப்பான்; சோதிடன் காலைப் பார்ப்பான்" எனவும் சொல்வதுண்டு.

**2. "ஆயிரம் பேரைக் கொன்றவன் – அரை வைத்தியன்"**

பொருள்: மூலிகை (மருந்து)ச் செடிகளில் பெரும்பாலும் வேர்களில்தான் மருந்துப் பொருள் தங்கி இருக்கும். வேருடன் செடியைப் பிடுங்கி வேரைத் தனியே புடம் போட்டு மருந்து தயாரிப்பர். செடிக்கும் உயிர் உண்டு. குறைந்தபட்சம் ஆயிரம் மூலிகைச் செடிகளின் வேரைக் கொன்றவனுக்குத் தான் பாதி அனுபவமாவது உண்டு என்பதை, ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்றனர். "வேரை" என்பது "பேரை" என தவறாக மருவி பரவிவிட்டதால் மருத்துவரின் நிலை தர்மசங்கடமாகிவிட்டது.

**3. இரவில் செய்தாலும், அரவில் செய்யாதே**

**பொருள்:** எந்த ஒரு செயலையும் இரவு நேரத்தில் செய்தால் கூட தவறில்லை. அதாவது நேர தோஷமில்லை. ஆனால், பகலில் செய்தால் மட்டும் இராகு காலத்தில் செய்யாதே. ஏதேனும் ஆபத்தில் போய் முடியும்.

**4. "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது":**

**பொருள்:** தங்கம் கூட எளிதாகக் கிடைக்கும். வாரம் ஒரு முறை வரும் புதன்கிழமையோ பொன்னைவிட மிக உயர்ந்தது. அந்நாளில் துவங்கும் செயல்கள் வெற்றி, புகழ், பொருள் தரும். தினமும் இருமுறை வரும் புதன் ஓரையும் மேற்சொன்னவாறே நல்ல பலன் தரும்.

**5. "மறைந்த புதன் நிறைந்த கல்வி"**

**பொருள்:** உங்களின் ஜாதகக் கட்டத்தில், இராசிச் சக்கரத்தில் இலக்கினம் என குறிப்பிடப்பட்டிருக்கும். அதுவே ஒன்றாகும் அல்லது முதல் வீடு எனப்படும். இலக்கினம் தொடங்கி 3,6,8,12ஆம் வீடுகள் மறைவு வீடுகள் ஆகும். மேற்கண்ட வீடுகளில் புதன் எனும் கிரகமிருப்பின் ஜாதகருக்கு அதிக அளவில் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான புத்தி இயற்கையிலேயே உண்டு.

**6. "ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது திருமணத்தைச் செய்துவை"**

**பொருள்:** *உண்மையான வாக்கியம் என்னவெனில், "ஆயிரம் தடவை (சென்று) போய், எடுத்துச் சொல்லியாவது திருமணத்தை நடத்திவை" என்பதே. இதுவே மருவி, போய் என்பது பொய் என்னும் சொல்லானதால் அறிய வேண்டிய அர்த்தம் அனர்த்தமாகி விட்டது.*

**7. விதி கெட்டால், மதியைப் பார்!**
**மதியும் கெட்டால், கதியைப் பார்!**

**பொருள்:** *ஜாதகத்தில் விதி என்பது இலக்கினம் எனப்படும் முதல் வீட்டைக் குறிக்கும். இதனைக் கொண்டே பலன் சொல்லப்படும். விதி ஸ்தானம் கெட்டிருப்பின்; மதி எனப்படும் சந்திரன் அமர்ந்த வீட்டை இலக்கினமாக — முதல் வீடாக வைத்து பலன் சொல்லப்படும். இதுவும் கெட்டுவிட்டால் (மதியும் கெட்டுவிடின்) கதி எனப்படும் சூரியன் நின்ற வீட்டினை இலக்கினமாக வைத்து பலன் சொல்லப்படும்.*

**8. பருப்புக்கு போகாவிட்டாலும், நெருப்புக்கு போக வேண்டும்".**

**பொருள்:** *பருப்பில்லாமல் திருமணமா! என்பர். ஒருவரின் திருமணத்திற்கு செல்லாவிட்டாலும் அவரின் (நெருப்பில் வேகும் முன்) மரணத்திற்கு போகவேண்டும் என்பதே பொருள்.*

**9. "சித்திரை அப்பன் தெருவிலே"**

**பொருள்:** *சித்திரை மாதத்திலே குழந்தை பிறந்தால் பெற்றெடுத்த தகப்பன் பொருளும், புகழும் இழந்து வீதியிலே நிற்பான் என்பர். இது தவறு. உண்மை என்னவெனில், சித்திரை மாதத்தில், சித்திரை நட்சத்திரம் வரும் பௌர்ணமி திதியில், வெள்ளிக்கிழமையும் கூடிவரும் நாளில் ஆண்பிள்ளை பிறந்தால்தான் பெற்ற தகப்பன் பொருளும், புகழும் இழந்து வீதியில் நிற்பான் என்பதே உண்மை ஆகும்.*

**10. "சனி நீராடு"**

**பொருள்:** *எள்ளானது சனிக்கு உரியது. எள்ளில் இருந்து கிடைப்பது நல்ல எண்ணெய். சனிக்கிழமை நாளில் நல்லெண்ணை தேய்த்து குளித்தால், உடலில் வெப்பம் நீங்கி நலம் பெறுவதுடன், சனியின் அருளும் பெறலாம்.*

**11. "குரு பார்த்திடின் நன்மை; சனி பார்க்க பாழ்"**

**பொருள்:** *உங்களின் ஜாதகத்தில் குரு பகவான் அவர் நிற்கும் இடத்திலிருந்து 5, 7, 9ஆம் வீடுகளைப் பார்ப்பார். இயற்கை சுபகிரகம் என்பதால் அவரின் சுபப்பார்வைபடும் இடங்களும், பார்வை பெறும் கிரகங்களும் ஜாதகருக்கு மாபெரும் நன்மை தரும். சனீஸ்வரர் தான் நிற்குமிடத்திலிருந்து 3,7,10ஆம் வீடுகளைப் பார்ப்பார். இயற்கைப் பாபி அல்லது அசுபர் என்பதால் இவரின் பார்வைபடும் இடங்களும், பார்வை பெறும் கிரகங்களும் பலவீனமாகி, நல்ல பலன்கள் குறைந்து தீயபலன்கள் நடக்கும்.*

**12. "சனி நின்ற இடம் விருத்தி; குரு நின்ற இடம் பாழ்"**

**பொருள்:** *ஜாதகத்தில் எந்த வீட்டில் சனீ— ஸ்வரர் அமர்ந்திருக்கிறாரோ, அவ்வீட்டிற்கான ஆதிபத்ய பலன்களை அதிகப்படுத்தித் தருவார். ஆனால், குரு பகவானோ தான் நிற்கும் வீட்டின் சுபபலனை நாசமாக்குவார்.*

**13. "தனித்த குரு, மெத்த அவதி"**

**பொருள்:** *அந்தணன் எனப்படும் குருபகவான் ஜாதகத்தில், வேறு கிரகச் சேர்கையின்றி தனித்து எவ்வீட்டில் இருக்கிறாரோ, அந்த வீட்டின் பலன்களை அதிக அளவில் நாசம் செய்வார்.*

**14. "பத்தில் பாம்பு இருப்பின்; பணம் பறந்து வரும்"**

**பொருள்:** *ஜாதகத்தில் இலக்கினம் எனும் முதல் வீட்டிலிருந்து எண்ணி, 10ஆம் வீடு எதுவோ, அதிலே இராகு அல்லது கேது எனும் பாம்பு (அரவு) இருப்பின், ஜாதகருக்கு மிக அதிகளவில் பணம் கிடைக்கும். (அரசு வழி தவிர, இதர வழிகளில்)*

**15. "கும்பலிலே (கூட்டத்திலே) யார் தலையில் கல் விழுகிறதோ அவர் சனியனால் பிடிக்கப்பட்டவர்".**

**பொருள்:** *காயம்பட்டவரின் ஜென்மஇராசியில் ஏழரை சனி இருக்கும் காலம் என்பர் இலக்கினத்தில் சனி இருந்து, சனிதசாவில் சனிபுத்தி காலம் என்பர்.*

**16. "சனி பிடித்த நபர் சந்தைக்குப் போனாலும், கந்தையும் கிட்டாது; கட்டிக்க ஆளும் கிடைக்காது"**

**பொருள்:** *ஜாதகப்படி இராசி ரீதியாகவோ, தசாபுத்தி ரீதியாகவோ சனியினால் துன்பப்படுவோர்; வாரம் ஒருமுறை எல்லோரும் கூடும் சந்தைக்குப் போனால்கூட, கட்டிக்க பழைய துணியும் கிடைக்காது. திருமணம் செய்ய ஆணோ/ பெண்ணோ கிடைக்காது.*

**17. "ஆண் மூலம் அரசாளும்; பெண் மூலம் நிர்மூலம்"**

**பொருள்:** *காலவெள்ளத்தில் மாறிப்போன இந்த பழமொழி முற்றிலும் தவறு. எது சரி எனில், "ஆனி மூலம் அரசாளும், புரட்டாசி மூலம் நிர்மூலம்" ஆனி மாதம் பௌர்ணமி நாளில் மூலம் நட்சத்திரம் வரும். அந்நாளில் ஆண் குழந்தை பிறந்தால் இளவரசனாக இராஜவம்சத்தில் தேர்ந்தெடுப்பது வழக்கம். மேலும், அந்நாளில் மிக முக்கியமான சுபகாரியங்களைச் செய்தால் வெற்றியும் கிடைக்கும். அடுத்ததாக, (புரட்டாசி மாதம்) கன்னி இராசியில் சூரியன் இருக்கும் மாதம், மூலம் நட்சத்திர நாளில் அஷ்டமி திதி*

வரும். அன்று பிறக்கும் குழந்தையால் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. மூலம் 1ஆம் பாதம் பாதிப்பு வரும். செய்யும் சுபகாரியம் தோல்வி தரும். ஆனால் மூலம் என்றாலே, வேண்டாம் என்பது மாபெரும் தவறு.

### 18. இராகுவைப் போல கொடுப்பாரில்லை! கேதுவைப் போல கெடுப்பாரில்லை!!

**பொருள்:** சனியைப் போலவே இராகு என்பர். யோகக்காரகன் இராகு தனது திசையிலோ அல்லது புத்தியிலோ செல்வத்தை அள்ளித் தருவதில் நவக்கிரகங்களில் மேலானவர். வரைமுறை இன்றி, சிற்றின்பம் பெற காரணமானவர். செவ்வாயைப் போலவே கேது என்பர். மோட்சக்காரகன் கேது திசையிலோ அல்லது புத்தியிலோ துறவிக்கு நிகரான அளவில் துன்பங்களைத் தருவார். பேரின்பம் தரும் மோட்ச நிலைக்கு ஆசைப்படும்படி ஆக்கிடுவார்.

### 19. "கொடுத்தாலும் சரி; கெடுத்தாலும் சரி; சனிக்கு நிகர் சனியே"

**பொருள்:** நேர்மை, எளிமை, கடுமையான உழைப்பு ஆகிய மூன்றின் வடிவமான சனீஸ்வரரை நீதியரசர் என்பர். ஜாதகத்தில் குறிப்பிட்ட இடத்திலிருந்து இவரைப் போல, வேறு எந்த கிரகமும் நன்மைகளை பெரிதாகத் தரமுடியாது. அதே நேரத்தில் ஜாதகர் நேர்மை தவறி நடந்தால், தண்டிப்பதிலும் இவரை மிஞ்ச முடியாது.

### 20. "அவிட்டத்தில் பிள்ளை பிறந்தால்; தவிட்டுப்பானை எல்லாம் தங்கம்"

**பொருள்:** பிறக்கும்போது இலக்கினத்திற்கு 3,6,11லோ அல்லது 10இல் திக்பலத்திலோஅல்லது சசயோகம் தரும் நிலையில் 1,4,7,10இல் ஆட்சி உச்சத்திலோ, செவ்வாய் பகவான் சுபர் சாரத்தில் இருந்திடல் வேண்டும். அன்றைய நாள் ஆண் எனில் செவ்வாய்கிழமை ஆகவும், பெண் எனில் வெள்ளிக்கிழமை ஆகவும் அமைதல் வேண்டும் அன்று அவிட்டம் நட்சத்திர நாளாக இருப்பின்; குழந்தை பிறந்த வீட்டில் ஏராளமான செல்வம் சேர்ந்து (7 ஆண்டுகள்) தங்க நகைகளாக மாற்றி பானைக்குள் ஒளித்து வைக்கும் யோகம் ஏற்படும்.

### 21. "அகப்பட்டவனுக்கு எட்டிலே சனி; ஓடிப்போனவனுக்கு ஒன்பதிலே குரு"

**பொருள்:** உங்களின் இராசிப்படி, இராசிக்கு 8இல் சனி சஞ்சரிக்கும்போது, கடந்தகால அல்லது நடப்பு கால பிரச்சனைகளில் அகப்பட்டு துன்பப்படுவீர்கள். இராசிக்கு 9இல் குரு எனும் வியாழன் சஞ்சரிக்கும்போது, பிரச்சனைகள் தீர்ந்து வெற்றிகளைப் பெறுவீர்கள்.

### 22. "விழுப்பு இருக்குமிடத்தில் வேப்பிலைக்காரி தங்கமாட்டாள்"

**பொருள்:** தீட்டு எனும் விழுப்பு நான்கு வகை ஆகும். 1. படுக்கைத் தீட்டு, 2. மாதவிலக்குத் தீட்டு, 3. பிரசவத் தீட்டு, 4. சாவுத் தீட்டு. தீட்டானது உங்கள் வீட்டில் இருப்பின், சமயப்புரத்தாளின் அருள் தங்காது. தீயசக்திகளால் துன்பம் உண்டு.

### 23. "எட்டிலே சனி இருப்பின்; ஆயுள் கெட்டி"

**பொருள்:** ஜாதகத்திலே, இலக்கினப்படி இலக்கினத்துக்கு 8இல் சனி நீச்சம் பெறாதிருப்பின், ஜாதகர் நீண்ட ஆயுள் உடையவர். ஆனால், இராசிப்படி 8இல் — 2½ வருடம் கண்டம் தரும்.

### 24. "குரு கொடுப்பின் சனி தடுப்பார்; சனி கொடுப்பின் எவர் தடுப்பார்?"

**பொருள்:** தனது 5,7,9ஆம் பார்வைகளால் குரு தரும் சுப பலன்களை, சனி தனது பார்வை மூலம் தடுக்க முடியும். நின்ற வீட்டைக் கெடுக்கும் குருவுடன், சனி சேர்ந்திடின் அவ்வீடு கெடாது வளரும். ஆனால், சனீஸ்வரர் ஜாதகரின் கர்மவினைக்கு ஏற்ப தரும் சுப மற்றும் அசுப பலன்களை வேறு எந்த கிரகங்களாலும் தடுத்திட முடியாது.

### 25. "பத்திலே குரு வந்தால் பதவி பறிபோகும்; பத்திலே குரு பதவிக்கு இடர்"

**பொருள்:** முதல் வரி உங்களின் இராசிப்படி 10இல் குரு வரும்போது செய்கின்ற வேலைக்கு ஆபத்து வரும். பதவி பறிப்பு, சஸ்பெண்ட் ஆர்டர், டிரான்ஸ்பர், கிரேடு குறைதல், செக்ஷன் மாற்றம், இராஜினாமா செய்தல், சம்பளம் கிடைக்காமல் வேலை செய்தல், தொழிலில் முடக்கம் எனலாம். 2ஆம் இலக்கினத்துக்கு 10இல் குரு ஜாதகத்திலிருப்பின், ஜாதகர் தனது வாழ்நாள் முழுவதும் எங்கும் நிலைத்து வேலை பார்க்க மாட்டார். சுயதொழில் செய்தாலும் நிலைக்காது. (வேறு கிரக சேர்க்கை குருவுக்கு கூடாது)

### 26. "கன்னிச் செவ்வாய், கடலும் வற்றும்"

**பொருள்:** கன்னி இராசியில் செவ்வாய் நிற்கும்போது வக்ரம் பெற்றாலோ, சனி சேர்ந்தாலோ, வக்ரம் பெற்று சனி பார்த்தாலோ பூமியில் பல உயிர்கள் மனிதன் உட்பட அழிவுறும் மற்றும் சூரிய வெப்பம் அதிகமாகி கடல்நீர் வற்றும். இக்காலக்கட்டத்தில் பிறக்கும், குழந்தைகளின் வாழ்விலும் மாங்கல்ய போராட்டம், பூமி, வீடு, மென்சஸ், உடன்பிறப்பு போராட்டமும் உண்டு. விபத்து, துர்மரணம், சதா சண்டையும் உண்டு.

### 27. "மகத்துப் பெண்; பூரத்து புருஷன் (கணவன்)"

**பொருள்:** திருமணம் செய்யும்போது பெண்ணின் நட்சத்திரம் மகம் (சிம்மஇராசி) ஆக இருக்க, ஆணின் நட்சத்திரம் பூரம் (சிம்மஇராசி) எனில் சூப்பர் ஜோடிப் பொருத்தம் ஆக இருக்கும். இருவரும் ஒரே இராசி, ஒரே யோனி என்பதாலும், பெண்ணிற்கு பையன் 2ஆம் நட்சத்திரம் என்பதாலும் வாழ்வு நன்கு இருக்கும்.

**தொடரும்...**

# தானத்திலே சிறந்தது அன்னதானம் – அதுவே கர்ம வினைகளைக் களைந்திடும் ஜீவ தானம்



முற்பிறப்பின் கர்ம வினைகளை தீர்ப்பதற்கே இப்புவியில் ஒவ்வொரு மனிதனும் பிறவி எடுக்கிறான். அப்படி பிறவி எடுத்தவனின் கர்ம வினைகளை களைந்திடும் மூல வழி அன்னதானம் செய்வது ஒன்றே தான். ஏழ்பிறப்பு தீவினைகள் நீங்கி ஏற்றம் காண, ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, அர்தாஷ்டம சனி பாதிப்பில் இருந்து விடுபட, புத்திர பாக்கியத் தடை, தடைப்பட்ட மணவாழ்க்கை நீங்க, தொழில் வழி பிரச்சனைகள் தீர, பித்ரு தோஷம் நீங்கவும், தீராத நோய்கள் தீரவும் அன்னதானம் அளிப்பதை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒருவருக்காவது அன்னதானம் அளிக்க வேண்டும் என்பது சாஸ்த்திர நியதி.

ஒவ்வொருவருடைய பிறந்த நாளின் போதும், திருமண நாளின் போதும், பெரியவர்கள் மறைந்த நாளிலும், சித்தர்களின் ஜென்ம தினத்திலும், குருவின் பிறந்த நாளிலும் அன்னதானம் செய்து வந்தால் எத்தகைய பிரச்சனைகளும் நீங்கி ஏற்றம் காணலாம். பரிகாரங்கள் செய்து தங்களது எல்லாப் பிரச்சனைகளைப் போக்கிக் கொள்ள நினைப்பவர்களுக்கு அன்னதானம் செய்வது ஒன்றே கர்மாவைக் களைந்திடும் சரியான அருமருந்தாகும்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (திருக்குறள்)

உண்ணாமல் நோன்பு இருப்பது மட்டும் தவமாகாது. அப்படி செய்வதால் மட்டும் ஆண்டவனின் அருளை அடைந்து விட முடியாது. உண்ண உணவின்றி வாடும் ஏழையின் பசியை நீக்குவதே அதைவிட மேலான தவமாகிறது. அதுவே ஆண்டவன் குடியிருக்கும் ஆலயமாகிறது.

இத்தகைய அரியதொரு பணியில் ஈடுபட, கடந்த 10 ஆண்டுகளாக ஆன்மிகப் பணியில் அயராது அரும் தெய்வப்பணி ஆற்றிடும் திருவருள் சக்தி தன் வாசகர்கள், பாவங்கள் நீங்கி வளமோடு எல்லா நலமும் பெறும் பொருட்டு, அன்னதானம் அளிக்கும் திட்டத்தில் தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ளது. எமது வாசகர்கள், தனியாக அன்னதானம் செய்ய இயலாதவர்கள், மனம் இருந்தும் மார்க்கம் இல்லாதவர்கள் இந்தக் கூட்டுத் திட்டத்தில் பங்கேற்று தன் பாவங்களைப் போக்கும் பரிகாரம் தேடலாம்.

திருநள்ளாறு, திருவண்ணாமலை, காசி, இராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்கள், வயதான முதியோர் காப்பகங்கள், ஆதரவற்ற அனாதைகள், உடல் ஊனமுற்றோர், கோவில் திருவிழாக்காலங்களில் கலந்துக் கொள்ளும் அடியார்கள் போன்றோர்களுக்கு அன்னதானம் அளித்திட திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த அறக்கட்டளையின் பதிவு செய்யப் பட்டுள்ள 19 விதமான பரோபகார உதவிகளில் குறிப்பிட்ட சில உதவிகள் :-

- ஏழ்மையில் இருப்பவர்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் படிக்கும் பள்ளிக் குழந்தைகளின் படிப்பிற்கு உதவுதல்
- ஏழ்மை குழந்தைகளுக்கு துணிமணிகள், புத்தகங்கள், மருத்துவ உதவி போன்றவைகள் அளித்தல்
- உடல் ஊனமுற்ற உள்ளங்களுக்கு உதவுதல்
- பரோபகார நிறுவனங்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் இருப்போருக்கு மண வாழ்க்கைக்கு மகிமை சேர்த்தல்
- ஆதரவற்ற வயதான முதியோர்களின் வாழ்வாதார நிலைக்கு உதவுதல் போன்ற பல பரோபகார மனித நேய உதவிகள்.

ஆன்மிகத் தொண்டு செய்வதுடன், பாவங்கள் போக்கும் பரிகாரமாக ஏழ்மையில் இருக்கும் ஜீவன்களுக்கு உதவிடும் தாய்மை குணத்தோடு, தன்னலம் பாராது உங்கள் முன் வலம் வருகிறது 'திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்'. நீங்களும் இதில் பங்கு பெற்று இந்த மண்ணில் பிறந்த கர்மாவை தீர்ப்பதற்கு வழி வகுத்துக் கொள்ளலாம். பிறவி இல்லாப் பெருவாழ்வு அடைவதற்கும் இது அடிகோலும். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்ற நிலையில், என்றும் பேர் சொல்லும் பெரும் பயனை பெற்றிட வழி வகுக்கும். வருங்கால நம் சந்ததி களும் நம்மை என்றும் வாழ்த்தும். முடிந்த அளவு உதவி செய்து ஏழ்மையில் வாடும் ஜீவன்களுக்கு ஒரு வேளை உணவையாவது அளித்தோம் என்ற ஆத்ம திருப்தியில் ஆண்டவன் அருளுக்கும் பாத்திரமாகலாம்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (திருக்குறள்)

ஏழைகளின் பசித்துன்பத்தை நீக்கும் தானமே என்றும் மேன்மையை அடைகிறது. அதுவே, சேர்த்த செல்வத்தைச் சிறப்புடன் சேமித்து, அழிவுக்கு ஆட்படாமல் பாதுகாத்து வைக்கும் அரியதொரு பொக்கிஷமாகிறது. வருங்கால நம் சந்ததிக்கும் வளமான வாழ்வுக்கு வழி வகுக்கின்றது. ஏழ் பிறப்புக்கும் ஏற்றத்தைக் கொடுக்கும் கற்பக விருட்சமாகிறது.

- **பிரதி பலன் பாராது தானம் செய்வதே பிரதானம்.**
- **இறைக்கின்ற கிணரே சுரக்கும் – என்றும்!**
  **கொடுக்கின்ற மனமே வாழ்க்கையில் சிறக்கும்!**

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் "THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST" என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க DD/CHEQUE/M.O. மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு உங்களது தெளிவான முகவரியுடன் தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்களுடன், பெயர், பிறந்த நாள், திருமண நாள், இராசி, நட்சத்திரம் ஆகியவைகளைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும். புனிதமான அன்னதான சேவையில் உங்களையும் ஈடுபடுத்தி எங்களுடன் ஒத்துழைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

DD/Cheque/M.O. அனுப்ப வேண்டிய முகவரி : **திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்**

## THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST,

(REGD. PUBLIC CHARITABLE TRUST- **No. 32/2012** ) 18/67, P.V. Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014.
**Phone : 044 - 2811 6770, Cell : 0-97109 21880 Email : tsannadhanam@gmail.com**

பணமாக அளிக்கும் அன்பர்கள் கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.
Mrs. **R. RADHA** - S.B.A/c.: 426681768 - INDIAN BANK (Chennai - Royapettah).

**அன்னதானம் செய்வோம் – கர்ம வினைகளைப் போக்குவோம்.**

**Mrs. R. RADHA, Founder & Managing Trustee**

A/c Details: Thiruvarul Sakthi Annadhana Charitable Trust, A/c No.12820100107660
Federal Bank, Royapettah Branch, Chennai- 600 014. IFSC: FDRL0001282

மேலும் தொடர்புக்கு
**Cell: 72999 21880**

**நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன**

# சொந்த வீடு, வியாபாரம் அமைய வழிபட வேண்டிய வாஸ்து ஸ்தலங்கள்





கோட்டையூர்
என். சிவசுப்பிரமணியம்
செல்: 94431 37989 / 95005 96309

**சிறுவாபுரி:** இராமபிரானின் புதல்வர்களான லவன், குசன் இருவரும் தன் தந்தையோடு போரிட்டு, வெற்றி பெற்றனர். ஸ்ரீராமபிரானின் புனிதத் திருப்பாதங்கள் பட்ட ஸ்தலம். இங்குள்ள ஸ்ரீபாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் 5 நிலை இராஜ கோபுரம் உள்ளது. ஆலயத்துள் நுழைந்ததும், தென் பிரகாரத்தில் சூரிய பகவான் சன்னதிக்கு எதிரில் மரகத விநாயகர் காட்சி தருகிறார். பைரவர் சன்னதியில் வழிபட்டு உள்ளே நுழைந்தால் சிறுவாபுரி முருகனின் சன்னதி, முருகன் ஒரு முகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு நின்ற கோலத்தில் காட்சித் தருகிறார். இரண்டு கரங்களில் கமண்டலமும், ஜெபமாலையும் கொண்டு, முன் கரம் ஒன்று வரதாமாகவும், இடக்கரம் இடுப்பில் வைத்து பிரம்ம சாஸ்தா கோலத்தில் காட்சித் தருகிறார். சொந்த வீடு அமைய விரும்புகிறவர்கள், சொந்தமாக வீடு வாங்க விரும்புவர்கள், செவ்வாய்க் கிழமை பகல் 12 மணி உச்சிகால பூஜையில் பால் அபிஷேகம், அர்ச்சனை செய்து வழிபட விரைவில் சொந்த வீடு அமையும்.

**ஸ்ரீமுஷ்ணம்:** அசுரனால் கவர்ந்து செல்லப்பட்ட பூமியை மீட்க கடலினுள் சென்று வர ஏதுவாக பெருமாள் வராக அவதாரமெடுத்து, கடலினுள் மூழ்கிச் சென்று, ஹிரண்யாட்சனை வதம் செய்து, பூமியை மீட்டுக் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து பூமாதேவியின் வேண்டுகோளின்படி அவர் பூவராகனாக ஸ்ரீமுஷ்ணத்தில் அருள்பாலித்தார். சுயம்புவாகத் தோன்றிய ஸ்தலமாதலால் பல ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தது. இவ்வாலயக் குழந்தை அம்மன் சன்னதியில் ஏழு அம்மன்களான சப்தமாதாக்கள், தயார் அம்புஜவல்லியின் தோழிகளாக வராகர் சன்னதிக்கு அருகே இடம் பெற்றுள்ளார். இத்தல இறைவனை வழிபட்ட பின், வீடு கட்டும் பணியையும், கிணறு வெட்டும் பணியையும் தொடங்கினால், தடங்கலின்றிப் பணி முடியும். பூமி, மனை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் தீரும்.

### வாஸ்து தோச நிவர்த்தி

**திருச்சி – கீழப்புலிவார்டு வீதி:** இங்குள்ள பூலோகநாத சுவாமி கோயிலில் உள்ள பூலோநாத சுவாமி வாஸ்து தோஷங்களைப் போக்க வல்லவர். பூமி, மனை, வீடு தொடர்பான வாஸ்து நாயகராக இவர் திகழ்வதால், வாஸ்து தொடர்பான குறைபாடுகளுக்கு இவரிடம் பிரார்த்தித்துக் கொண்டால், அவை தீரும் என்பது ஐதீகம், பூமி, மனை தொடர்பான நற்காரியங்களுக்கு அதிபதியான வாஸ்து பகவான் பெரும்பாலும் யோக நிலையில் இருப்பார் என்றும் வருடத்தில் சில நாட்கள் மட்டும் விழித்து இருப்பதாகவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு வருடமும் இந்த வாஸ்து நாட்களில் இத்திருக்கோயிலில் சிறப்பு வாஸ்து ஹோமம் நடைபெறுகிறது. புதிதாக வீடு கட்டுபவர்களும், பழைய, புதிய வீட்டில் தோஷம் இருப்பதாகக் கருதுபவர்களும் வாஸ்து நாளில் நடைபெறும் இந்த ஹோமத்தில் கலந்துக் கொண்டால், வாஸ்து தோஷம் நீங்கும் என்பர். பூஜையில் கலந்துக் கொள்பவர்களுக்குப் பூமி, மனை, வீடு வாங்கும் பூலோகநாதராக கிழக்கு நோக்கி அருள் புரிகிறார். அன்னை ஜெகதாம்பாள் தெற்கு நோக்கி அருள் புரிகிறார்.

**திருப்புகளூர்:** திருவாரூரிலிருந்து திருப்புகளூர் அக்னீஸ்வரரைத் தரிசிக்கச் சென்ற சுந்தரர், இரவு வெகு நேரமாகி விட்டதால், ஆலய வெளிப் பிரகாரத்தில் ஒரு செங்கலைத் தலையணையாக வைத்து உறங்க, இறைவன் கனவில் தோன்றி, சுந்தரர் நீ தலையணையாக வைத்துள்ள செங்கல் தங்கமாக மாறும். அதை எடுத்துச் சென்று உனது பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள் எனக் கூறினார். சுந்தரர் விழித்துப் பார்த்தபோது தான் வைத்திருந்த செங்கல் தங்கமாக மாறி இருந்ததைக் கண்டார் எனவே, வீடு கட்டத் தொடங்கும் முன் ஒரு செங்கலை இந்த ஸ்தலத்தில் வைத்து ரூ.101/— காணிக்கை செலுத்தி, ஆகம முறைப்படிப் பூஜை செய்து, அந்த செங்கல்லை பூமி ஸ்தலமான திருவாரூர் தியாகராஜர் ஆலயத்தில் மீண்டும் பூஜை செய்து, அஸ்திவாரம் போட்டு வீடு கட்ட ஆரம்பித்தால், அவ்வீடு எக்காலத்திலும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படாது. கட்டிடங்கள் நீடித்து நிலைத்திருக்கும். ஏற்கனவே கட்டிய கட்டிடங்களில் ஏதேனும் வாஸ்து தோஷங்கள் இருந்தால், இங்கு வந்து அக்னித் தீர்த்தத்தில் நீராடி, இறைவன் இறைவியை அர்ச்சனை செய்து வழிபட, வீட்டிலுள்ள வாஸ்து குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தியாகும்.

### பூமி, மனை, வீடு, ரியல் எஸ்டேட், வாஸ்து தோஷம் தொடர்பான பிரச்சனைகள் தீர

**செவலூர்:** சொந்தமாக வீடு கட்ட முடியாத நிலை,

மனை வாங்கினாலும் வாஸ்து தோஷங்களால் வீட்டைக் கட்டி முடிக்க முடியாத சூழ்நிலை, புதிய நிலம் மனை வாங்க முடியாமை, பூமி விற்பனை ஆகாமல் உள்ள நிலை போன்ற தடை உள்ளவர்கள், வாஸ்து புருஷன் விழித்திருக்கும் நாட்களான வைகாசி 21, ஆடி 11, ஆவணி 6, ஐப்பசி 11, கார்த்திகை 8, தை 12, மாசி 22 ஆகிய நாட்களில் இங்கு நடைபெறும் விசேஷ ஹோம பூஜையில் கலந்துக் கொண்டு, இத்தல பூமிநாதரையும், ஆரணவல்லியையும் வழிபட்டால் வீடு, நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், தடைகள் நீங்கிப் பலன் பெறலாம். வெள்ளி, செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தலம் வந்து பூமீஸ்வரர் முன் கற்களை வைத்து, வாஸ்து அஷ்டோத்திர வழிபாடு செய்தும் பலன் பெறலாம். இங்கு பூமாதேவி தவமிருந்து, தனது கைகளாலேயே 16 பட்டை லிங்க மூர்த்தியை உருவாக்கினார் என்று ஸ்தல வரலாறு கூறுகிறது. இந்த பூமிநாதருக்குச் செய்யப்படும் அபிசேக வழிபாட்டில் சேரும் எல்லா நீரும் பூமிக்குள் சென்று விடுவது சிறப்பு. இங்கு இறைவனுக்குப் பூமிக்குக் கீழ் விளையும் கிழங்கு வகைகளில் செய்யப்பட்ட உணவுப் பொருட்களையே நைவேத்தியமாகப் படைத்து, பக்தர்களுக்குப் பிரசாதமாக விநியோகிக்கிறார்கள். ஆலயத் தீர்த்தம் பிருத்விபுட்கரணி குளம். பூலோகத்திலுள்ள அனைத்து தீர்த்தங்களோடும் தொடர்புடையதாம். இவ்வாலய மண்டபங்களில் சூட்சம தேகத்துடன் 6 கால பூஜைகளைத் தேவர்கள் நடத்தி விட்டுச் செல்வதாகக் கூறப்படுகிறது.

### ஆகாச வாஸ்து பூஜை ஸ்தலம்

**கடுவெளி:** கடுவெளிச் சித்தர் பரவெளியில் எல்லை மண்டலமாம் கடுவெளியில் தவம் புரிய வல்லவர். உருவமும் அருவமுமில்லா பரஞ் சோதியைப் பரவெளியில் காணும் பேறு பெற்றவர். கடுகி விரைந்து எந்த பரவெளி மண்டலத்திற்கும் சென்று வர வல்லவர். அஷ்டமாசித்திகளைச் சித்தர்களுக்கு உணர்த்தும் தலைமைப் பீடச் சித்தர். கடுவெளிச் சித்தர் தம்மை மறந்து, பல்லாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்த ஸ்தலம். பரவெளியில் தான் சுயம்புவாய் கண்ட ஸ்ரீ ஆகாசபுரீஸ்வரரை இத்தலத்தில் கண்டமையால், இதனையும் கடுவெளியாய், பரவெளியாய்க் கண்டு இங்குப் பல்லாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தார். இத்தலம் பஞ்சயோகப் பூதப் பரிவார ஸ்தலங்களில் ஆகாச ஸ்தலமாக அமைந்துள்ளது. இங்கு வாயு மூர்த்தி, கருட மூர்த்தி, ஆகாசபுரீஸ்வரரைத் தினமும் வழிபடுவதாக ஐதீகம், ரியல் எஸ்டேட் தொழில் புரிபவர், உயரமான கட்டிடம் கட்டுபவர், உயரமான கட்டடங்களில் வசிப்பவர், வானில் பயணம் செய்வோர், சொந்தமாக மனை வாங்குவோர், அயல்நாட்டில் வாழ்பவர், புதிதாக வீடு கட்டி, கட்டிடம் ஸ்திரமாக நிலைத்து நிற்க விரும்புவர் இங்கு வருட வாஸ்து நாட்கள், சப்தமி திதி, திங்கள், செவ்வாய், ரோகிணி, பூசம், பூராடம் ஆகிய ஆகாச வாஸ்து பூஜைக்கு ஏற்ற நாட்களில் வந்து வழிபடத் தடையின்றி, நற்பலன்கள் கிடைக்கும்.

### வாஸ்து குறைபாடு நீங்க, அரசியல்வாதிகள் பலன் பெற

**தவசிமேடை திண்டுக்கல்:** சப்த ரிஷிகளில் ஒருவரான பரத்வாஜ முனிவர் யோக சாதகம் அடைந்து முக்தி அடைந்த தலம் என்பதால் ஒடுக்கம் தவசிமேடை என அழைக்கப்படுகிறது. ஸ்ரீ மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில், திண்டுக்கல், நத்தம் சாலையில், சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது விராலிப்பட்டி பிரிவு. இங்கிருந்து தென்திசையில் சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. தவசிமேடை, ஸ்ரீபரத்வாஜ முனிவரின் சமாதி, நுழைவாயிலில் இரண்டு பீடங்களாக உள்ளன. தெற்கே தலையும் வடக்கே கால்களும் கொண்டு சமாதி அடைந்த முனிவரின் மேடை, 16அடி நீள இடைவெளியில் அமைந்துள்ளது. அதாவது, ஸ்ரீ மகாலிங்கேஸ்வரரைத் தரிசிக்க வரும் அன்பர்கள், தன்னைக் கடந்துதான் செல்ல வேண்டும் எனும் நோக்கில் சமாதி அடைந்ததாகச் சொல்கிறது. ஸ்தல புராணம் ஆக முக்தியும் ஞானமும் தரும் ஒப்பற்ற திருத்தலம் இது எனச் சிலாகிக்கின்றனர் பக்தர்கள். இங்கே ஸ்வாமியின் திருநாமம் ஸ்ரீ மகாலிங்கேஸ்வரர், ஸ்ரீ மரகதவல்லி, ஸ்ரீ மாணிக்கவல்லி என இரண்டு தேவியர், வருவோர் அனைவருக்கும், கல்வி ஞானம் அருள்வதுடன், திருமணம் மற்றும் பிள்ளை பாக்கியம் தந்தருள்கின்றனர். தேவியர் இருவரும், மாசி மாதம் பிறந்து விட்டால், அமர்க்களப்படுகிறது இந்த ஆலயம். இங்கே ஸ்ரீ மகாலிங்கேஸ்வரர் சந்நிதிக்கு எதிரில் பைரவர் சந்நிதி அமைந்துள்ளது சிறப்பு என்கின்றனர்.

**மணச்சநல்லூர்:** திருச்சி மாவட்டம், மணச்சநல்லூரில் பூமி நாதர் கோயில் உள்ளது. சுவாமிக்கு பூமிநாதர் என்று பெயர் சூட்டப்பட்டது. சிறப்பு அம்சம்: பூமிநாத சுவாமி சுயம்பு லிங்கமாக உள்ளார். சிவன் கோயிலில் பொதுவாக பைரவர் தெற்கு நோக்கிய நிற்பார். ஆனால், இங்கு மேற்கு முகமாக உள்ளார். வாஸ்து பரிகார பூஜை, வீடு கட்டும் முன்னும், நிலம் வாங்கும் முன்னும் நிலத்தின் வடகிழக்கு மூலையில் இருந்து ஒரு கைப்பிடி மண் எடுத்து மஞ்சள் துணியில் கட்டி வீட்டுப் பூஜை அறையில் வைத்து பூஜித்து வர வேண்டும். புது கட்டடம் கட்டுபவர்கள், வில்வ மரத்தடியில் இருந்த மண் எடுத்து பிரகாரம் வலம் வந்து, மனையின் வடகிழக்கு மூலையில் போடுவதன் மூலமும் பணிகள் தங்கு தடையின்றி நடப்பதாக நம்பிக்கையுள்ளது. வாஸ்து நாள் தவிர, அமாவாசையும், புதன்கிழமையும் சேர்ந்து வரும் நாட்களில் மண் பூஜை நடத்துவதும் விசேஷம்.

ஸ்ரீவாஞ்சியம், திருப்பேஞ்சேலி, நான்கு திசை நோக்கும் கணபதி (நாகை) இதன் ஆலயங்களும் வாஸ்து தோஷத்திற்கு உரிய ஸ்தலங்கள். இங்கு சென்று அர்ச்சனை, அபிஷேகம், தீபம், மாலை, அன்னதானத்துடன் வழிபட்டு வரவும். ■

# வாசகர்களின் கேள்விகளுக்கு

ஜோதிடத் தென்றல் அஷ்ட்ரோ

# தெய்வீகன் மாரிமுத்து பதில்கள்



**செல்: 98425 21669
/ 92446 21669**

*மஞ்சு — பெங்களூர்*

*பிறந்த தேதி 7.2.1988 இரவு மணி 7.42 அஸ்தம் நட்சத்திரம் கன்னி இராசி சிம்மம் இலக்கினம் சந்திரன் திசை 5 வருடம் 9 மாதம் 11 நாள்*

| | | | |
|---|---|---|---|
| சுக் ராகு | குரு | | |
| புத (வ) | ராசி | | |
| சூரி | | | ல |
| சனி | செவ் | மா | சந் கேது |

| | | | |
|---|---|---|---|
| | குரு | சந் சனி | |
| செவ் | அம்சம் | | ராகு |
| கேது | | | சூரி சுக் |
| | | புத (வ) மா | ல |

*கேள்வி:* **எனக்கு திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது நான் கணவரை பிரிந்து வாழ்கிறேன். நான் வாழ்க்கையில் மனம் போன போக்கில் நிறைய தவறுகள் செய்து விட்டேன். எனினும் ஆன்மிக நாட்டம் அதிகம் ஆதலால் பல சாதுக்களை சந்தித்தேன். தவம் செய்யும் முறைகளை கற்றேன். மாதத்தில் பாதிநாள் சாப்பிடாமல் தவம் இருப்பேன். சிவபெருமானை கனவில் கண்டு பரவசம் அடைந்துள்ளேன். இவ்வளவு தவக் கோலம் இருந்தாலும் திடீர் திடீரென என்னுடைய தவம் கலைந்து மனம் தவறான விஷயங்களில் ஈடுபடுகிறது. இதனால் என் எதிர்காலம் என்னவாகும். எனக்கு ஒரு தவயோகியாக மாற வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதற்கு முழு நேர தவத்தில் ஈடுபடலாமா? அல்லது எனக்கு குடும்ப வாழ்க்கை அமையுமா? என் குழந்தையின் எதிர்காலம் எப்படி. உங்கள் பதிலுக்காக காத்திருக்கிறேன்.**

**பதில்:** *அன்பு சகோதரி உங்களுக்கு 27 வயது தான் ஆகிறது அன்பான குழந்தையும் இருக்கிறது. அதனை சிறப்பாக வளருங்கள். தற்போது ஸ்ரீ இராகு பகவான் திசை மனது மனம் போன போக்கில் செல்லும் எல்லாம் மாயை, மாயை உலகம் பிரமாண்டமாக தெரியும். எனினும் கனவு கலைந்தால் மாயை உலகம் இருக்காது. மாயையான வாழ்க்கை தான் இராகு திசை, முடியும் போது மாயையான தவறுகள் திருந்திவிடும். எனினும் நீங்கள் உங்களை சுயபரிசோதனை செய்யுங்கள் பாக்கியஸ்தானத்தில் ஸ்ரீ குருபகவான் அமர்ந்து பஞ்சம ஸ்தானத்தை பார்க்கிறார். எனவே கடவுள் பக்தி அதிகரிக்கும் எனினும் நாம் சிறுவயதில் கடவுளை நித்தம் கும்பிட வேண்டும். மந்திரம் பாராயணம் செய்ய வேண்டும். கோவிலுக்கு செல்ல வேண்டும். ஆனால் தவம் தவத்தால் குடும்ப பொறுப்புகளை உதறி தள்ளுவது மிகவும் தவறு. பல ஞானிகள் குடும்ப பொறுப்புகளை முழுமையாக நிறைவு செய்து பின் தவ வலிமையால் ஞானியாக மாறியிருக்கிறார்கள். உங்கள் தவ வலிமையைக் கண்டு பூரிக்கிறேன். 18.11.2018 முதல் ஸ்ரீ குருபகவான் திசை ஆரம்பம் வாழ்க்கையை எப்படி வாழ்வது என கற்றுக் கொடுக்கும் அன்பான மனிதர் உங்கள் இல்லத் துணைவராக அமைந்து உங்களையும் உங்கள் குழந்தையும் பாதுகாத்து அன்பு பாசத்தை காட்டுபவராக அமைவார். வாழ்க்கை வாழ்வதற்கே. ஸ்ரீ சுக்கிரன் வீட்டில் மாந்தி இருப்பதால் உங்களுக்கு பல சோதனைகள் எனவே*

*மகாவிஷ்ணு மந்திரமான*

**அச்யுதம் கேசவம் விஷ்ணும்**
**ஹரீம் ஸோமம் ஜனார்த்தனம்**
**ஹம் ஹம் நாராயணம் கிருஷ்ணம்**
**ஜபேத் துஸ் ஸ்வப்ன சாந்தயே**

*என்ற மந்திரத்தை தினமும் 108 முறை பாராயணம் செய்யுங்கள் உங்கள் வாழ்க்கை செம்மைபடும்.*

*****

*ஜெயந்தி — சென்னை*

*என் கணவர் ராகவன், சென்னை ஜாதகம்*

*பிறந்த தேதி 7.3.1958 வெள்ளிகிழமை அதிகாலை 2.10 மணி உத்ரம் 4ஆம் பாதம் கன்னி இராசி மகரம் இலக்கினம் ஸ்ரீ சுக்கிரன் பகவான் 0 வருடம் 11 மாதம் 8 நாள்*

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சூரி புத | ராசி | | |
| சுக் மா | | | |
| ல செவ் சனி | | குரு (வ) ராகு | சந் |

| | | | |
|---|---|---|---|
| சந் | சூரி சனி சுக் | புத | ல |
| | அம்சம் | | கேது |
| ராகு மா | | | |
| செவ் குரு (வ) | | | |

*கேள்வி:* **என் கணவர் ராகவன் ஜாதகம் நாங்கள் இருவரும் பல ஆலயங்கள் சற்றுலா மூலம் தரிசனம் செய்து வந்தோம். வரும் வழியில் பஸ் விபத்தில் கணவர் கோமா நிலைக்கு சென்று ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருக்கிறார். அவர் பூரண குணமடைய உங்கள் பிரார்த்தனையையும் திருவருள் சக்தி மூலமாக வேண்டுகிறேன்.**

**பதில்:** *உங்கள் கணவர் ஜாதகத்தில் தற்போது ஸ்ரீ சனிஸ்வர மஹா திசை நடைபெறுகிறது. ஸ்ரீ சனிஸ்வரன் இலக்கினத்தில் ஸ்ரீ செவ்வாய் பகவானுடன் இணைந்ததால் விபத்து ஏற்பட்டது. மேலும் சனிஸ்வரன் நீச பலம் காரணமாக தினமும் விநாயகர் ஆலயம் சென்று வணங்குங்கள். மேலும் ஆயுள் ஸ்தானாதிபதி ஸ்ரீ சந்திரன் பகவான் ஸ்ரீ சூரியன் பகவான் சாரத்தில் இருப்பதால் அவருக்கு ஆத்ம பலம் நிறைவாக இருக்கிறது. கண்டிப்பாக பூரண நலமடைவார்.*

*எனினும் உங்கள் கணவரின் நிலையை பார்த்து பிரசன்ன முறையில் கணித்து பார்த்தேன். பிரசன்னத்தில் சிம்மம் இலக்கினத்தில் ஆயுள் ஸ்தானாதிபதி ஸ்ரீ குரு பகவான் 12இல் உச்சம் பெற்று ஆயுள் ஸ்தானத்தை பார்ப்பதால் நீங்கள் வணங்கிய அனைத்து ஆலய தெய்வமும் உங்களை காப்பாற்றும் பிரசன்னம் பார்த்த அன்று சித்திரை நட்சத்திரம் நட்சத்திர கிரஹம் ஸ்ரீ செவ்வாய் பகவான். ஸ்ரீ செவ்வாய் பகவானின் அதிதேவதை ஸ்ரீ சண்முகர் எனவே*

**ஸ்ரீ சண்முகர் மந்திரம்**
**ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்**
**ஷம் ஷண்முக பதயே நமஹ**

*என்ற மந்திரத்தை தினமும் ஸ்ரீ சுக்கிரன் ஹோரையில் 108 முறை பாராயணம் செய்யுங்கள். அவர் பூரண குணமடைவார். திரு இராகவன் அவர்கள் பூரண குணமடைய இக்கேள்வி பதிலை படிக்கக்கூடிய அனைத்து ஜோதிட பிரம்மாக்களும் வாசகர்களும் தங்கள் இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*****

*எம். சுந்தரம் நாவலூர் சென்னை*

*என் மகள் பெயர்* A.Mani dea *4.1.1991 வெள்ளிகிழமை காலை மணி 8.18 மகம் நட்சத்திரம் சிம்மம் இராசி மகரம் இலக்கினம் கிருஷ்ணபட்சத்து சதுர்த்தி திதி ஸ்ரீ கேது பகவான் திசை இருப்பு 4 வருடம் 4 மாதம் 14 நாள்*

| | | | |
|---|---|---|---|
| | | செவ் | |
| | ராசி | | குரு கேது |
| ல சுக் சனி ராகு மா | | | சந் |
| சூரி | புத | | |

| | | | |
|---|---|---|---|
| ல புத | | சந் | |
| சுக் செவ் ராகு | அம்சம் | | மா |
| சனி | | | கேது |
| குரு | | | சூரி |

*கேள்வி:* **1.6.2015 திருவருள் சக்தி இதழில் என் ஜாதக ரீதியாகவும் என் மகளுக்கு பிரசன்ன ரீதியாகவும் பலன் எழுதியிருந்தீர்கள் பதிலை படித்து மகிழ்ச்சியின் அளவிற்கு எல்லையே இல்லை பழைய நிலையில் இருந்து விடுபட்டு என் மகள் இன்று மகிழ்ச்சியாக பணிக்கு செல்கிறாள் 1. என் மகள வேறு கம்பெனிக்கு முயற்சி செய்கிறாள் புதிய கம்பெனி வேலை கிடைக்குமா? வெளிநாடு செல்லும் யோகம் உள்ளதா?**

**2. மகரத்தில் ஸ்ரீ சனிஸ்வர பகவான் ஸ்ரீ இராகு பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான் ஸ்ரீ மாந்தி பகவான் சேர்க்கை என்ன செய்யும்? சூரிய திசை எப்படி இருக்கும்?**

**3. இரண்டாவது திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளதா?**

**4. வழிபடவேண்டிய கோவில் பரிகாரங்கள் கூறுங்கள்**

**பதில்:** *மகர இலக்கினம் மகம் நட்சத்திரம் சிம்மம் ராசி மகர லக்கினத்தில் ஸ்ரீ சுக்கிரன் பகவான் ஸ்ரீ சனிஸ்வர பகவான் ஸ்ரீ இராகு பகவான், ஸ்ரீ மாந்தி பகவான் சேர்க்கை வாழ்க்கையை புரட்டி போட்டு விட்டது மேலும் 15.5.2015 வரை குட்டி சுக்கிரன் நடைபெற்றது குட்டி சுக்கிரன் காலத்தில் திருமணம் முடிந்தால் குட்டி சுக்கிரன் குடியை கெடுப்பான் என்ற பழமொழிக்கு ஏற்ப வாழ்க்கையில் கஷ்டத்தை கொடுத்து விட்டார்.*

*15.5.2015 முதல் ஸ்ரீ சூரியன் பகவான் திசை தொடங்கிவிட்டது. அஷ்டமதிபதி 12இல் மறைந்தால் கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம் என்பார்கள். சூரியன் பகவான் வெளிநாட்டு வேலை வாய்ப்பையும் கைநிறைய சம்பளத்தையும் உருவாக்கி தருவார் கிருஸ்துவ நாட்டில் கிரின் கார்டு கிடைக்கும் முயற்சி செய்யுங்கள். 7ஆம் இடத்தில் கடகத்தில் ஸ்ரீ குரு பகவான், ஸ்ரீ கேது பகவான் வெளிநாட்டில் கணவருடன் இணைந்து வாழ்ந்து நிறைய சம்பாதித்து கோடீஸ்வர வாழ்க்கை வாழ வேண்டும். ஆகவே வெளிநாட்டில் பணிபுரியும் மணமகனை திருமணம் முடிக்கலாம். பழைய நிலையை மறந்து விடுங்கள். ஸ்ரீ சூரிய பகவானின் அருள் கடாட்சம் கிடைத்து விட்டது. இத்திசையில் ஒரு நல்ல மனிதரை காதலித்து திருமண முடியக் கூடிய நிலையும் உள்ளது ஜுன் இதழில் கொடுத்த ஷண்முகர் மந்திரத்தை வாழ்க்கை முழுவதும் பாராயணம் செய்யுங்கள் உங்கள் பஞ்சம ஸ்தானத்தில் ஸ்ரீ செவ்வாய் பகவான் அமர்ந்துள்ளார். ஸ்ரீ சூரியன் பகவான் திசை நடப்பதால் தினமும் 'ஓம் சூரிய தேவாய நமஹ' என 10 முறை பாராயணம் செய்து சூரிய நமஸ்காரம் செய்யுங்கள் கெட்டியான மாங்கல்ய பலம் இனிமையான புதிய வாழ்க்கை மதிப்பு மரியாதை அந்தஸ்து கிடைக்கும் இலக்கினத்தில் கிரகங்களுடன் யுத்தம் செய்து மாந்தி பலம் பெற்றதால் திருவலாங்காடு சிவன் ஆலயத்தில் சனிக்கிழமை ஸ்ரீ மாந்திஸ்வரருக்கு பரிகாரம் செய்து வாருங்கள்*

*எல்லா நன்மையும் கிடைக்கும் தொடர்ந்து 'திருவருள் சக்தி' படியுங்கள் திருவருளும் குருவருளும் கிட்டும்.*

# ஜோதிட கேள்விகளுக்கு விடை காணும் ஜோதிட முத்துக்கள்



ஜோதிட ரத்னா
**பி.ராஜராஜன்** M.Com., M.A., (Astro)
cell: 94436 02265

26

**795. ஆயில்யம் கேட்டை ரேவதிக்குரிய அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் எவை?**

அசுவனி, மகம், மூலம், கார்த்திகை, உத்திரம், உத்திராடம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி

**796 2ஆம் இடத்திற்கு உரிய பெயர்கள் எவை?**

| | |
|---|---|
| 1. குடும்பஸ்தானம் | 6. பல்லும் ஸ்தானம் |
| 2. வாக்கு ஸ்தானம் | 7. புருவ ஸ்தானம் |
| 3. தன ஸ்தானம் | 8. மூக்கு ஸ்தானம் |
| 4. நீதி ஸ்தானம் | 9. கல்வி ஸ்தானம் |
| 5. நேந்திரஸ்தானம் | 10. காரியஸ்தானம் |

**797. 12 இராசிகளில் சனி நிலையின் கலகம் எவை?**

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | நீச்சம் | துலாம் | உச்சம் |
| ரிஷம் | நட்பு | விருச்சிகம் | பகை |
| மிதுனம் | நட்பு | தனுசு | சமம் |
| கடகம் | பகை | மகரம் | நட்பு ஆட்சி |
| சிம்மம் | பகை | கும்பம் | ஆட்சி |
| கன்னி | நட்பு | மீனம் | உச்சம் |

**798. கீதா சக்கரம் கொண்ட எண் பலம் அறியலாம்?**

| | |
|---|---|
| 1. தனலாபம் | 6 கலகம் |
| 2. நாசம் | 7 தனம் |
| 3. சிநேகம் | 8 மரணம் |
| 4. பீடை | 9 சந்தோஷம் |
| 5. கேஷமம் | |

| | | |
|---|---|---|
| 8 | 3 | 4 |
| 1 | 5 | 9 |
| 6 | 7 | 2 |

இந்த சக்கரத்திலுள்ள எண்ண தொடச் சொல்லி பலன் சொல்லவும்

**799. மனைவியின் யோகம் பற்றி அறிய உதவும் பாவம் எவை? கிரகம் எவை?**

2,7ஆம் பாவம், சுக்கிரன் வலிமை அறிய வேண்டும் பெண் காரகனான் ஆண சந்திரனின் நிலையும், போகக் காரகனான் இராகுவின் நிலை அறியவேண்டும் எல்லாம் வலுத்தரல் மனைவியின் யோகம் மிக உயர்ந்ததாக இருக்கும்.

**800. மூன்று வகை இராசிகளுக்கு பாதகஸ்தானம் எவை?**

சர சராசியை இலக்கினமாக கொண்டவருக்கு 11ஆம் இடமும் அதற்குரியகிரகமும், ஸ்திர ராசியை இலக்கினமாக கொண்டவருக்கு 9ஆம் இடமும் அதற்குரிய கிரகமும் உபய ராசியை இலக்கினமாக கொண்டவருக்கு 7ஆம் இடமும் அதற்குரிய கிரகமும் பாதகஸ்தானம் பாதகாபதிகள் ஆவார்கள்.

**801. மாதங்களில் பிறந்தவர்களின் அதிர்ஷ்ட நிறம் அதிர்ஷ்ட எண்கள் எவை?**

| எண் | பிறந்ததமிழ் மாதம் | அதிர்ஷ்ட நிறம் | அதிர்ஷ்ட எண்கள் |
|---|---|---|---|
| 1 | சித்திரை | சிவப்பு | 9 |
| 2 | வைகாசி | வெண்மை | 6 |
| 3 | ஆனி | பச்சை | 5 |
| 4 | ஆடி | வெண்மை | 2,7 |
| 5 | ஆவணி | சிவப்பு | 1,4 |
| 6 | புரட்டாசி | பச்சை | 5 |
| 7 | ஐப்பசி | வெண்மை | 6 |
| 8 | கார்த்திகை | சிவப்பு | 9 |
| 9 | மார்கழி | மஞ்சள் | 3 |
| 10 | தை | கருநீலம் | 8 |
| 11 | மாசி | கருநீலம் | 8 |
| 12 | பங்குனி | மஞ்சள் | 3 |

**802. 12 மாதங்களில் பிறந்த ஆண்கள் எந்த மாதங்களில் பிறந்த பெண்ணை மணந்தால் நல்லது?**

| ஆண் பிறந்த மாதம் | பெண் பிறந்த மாதம் |
|---|---|
| 1. சித்திரை | ஆவணி, மார்கழி |
| 2. வைகாசி | புரட்டாசி, தை |
| 3. ஆனி | ஐப்பசி, மாசி |
| 4. ஆடி | கார்த்திகை, பங்குனி |
| 5. ஆவணி | மார்கழி, சித்திரை |
| 6. புரட்டாசி | தை, வைகாசி |
| 7. ஐப்பசி | சித்திரை, வைகாசி |
| 8. கார்த்திகை | சித்திரை, வைகாசி, ஆடி, பங்குனி |
| 9. மார்கழி | சித்திரை, ஆனி, ஆடி, பங்குனி |
| 10. தை | வைகாசி, ஆடி, புரட்டாசி, ஐப்பசி |
| 11. மாசி | வைகாசி, ஆடி, புரட்டாசி, ஐப்பசி |
| 12. பங்குனி | ஆடி, பூரட்டாதி, கார்த்திகை, மார்கழி, பங்குனி |

| | |
|---|---|
| | |

## 803. 12 இராசிகளில் பிறந்தவர்களில் முதல் எழுத்துக்கள் எவை?

| பிறந்த இராசி | முதல் நாம எழுத்துக்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மேஷம் | சு | சே | சோ | ல | லீ | லு | லே | லோ | அ | |
| 2. ரிஷபம் | இ | உ | எ | ஞ | வ | வி | வு | வே | வோ | |
| 3. மிதுனம் | கா | கி | கு | க | வு | வ | ச | கே | கோ | |
| 4. கடகம் | ஹி | ஹி | ஷோ | ட | டி | டு | டெ | டொ | | |
| 5. சிம்மம் | ம | மி | மு | மே | மே | மோ | ட | டி | டு | டே |
| 6. கன்னி | டோ | ப | பி | பூ | ஓ | ஹ | ட | பே | போ | |
| 7. துலாம் | ர | ரி | ரு | ரே | ரோ | த | தி | து | தே | |
| 8. விருச்சிகம் | தோ | ந | நி | து | நே | நோ | ய | யி | யு | |
| 9. தனுசு | யே | யோ | ப | பி | பூ | த | ப | ட | பே | |
| 10. மகரம் | போ | ஜ | ஜி | ஜீ | ஜே | கா | க | சீ | | |
| 11. கும்பம் | கு | கெ | கோ | ஸ | ஸீ | ஸே | ஸோ | த | | |
| 12. மீனம் | தீ | து | ஸ்ரீ | ச | தே | தோ | சி | | | |

## 804. 6 வகை காலத்தில் பிறந்தவர்கள் பலன் எவை?

*1. <u>விடியற் காலம்:</u> வெகுமானம் கிடைக்கும் செல்வம் சேரும் பாக்கியசாலி எல்லோரும் பிரியமாக இருப்பார்கள்*

*2. <u>பகல் காலம்:</u> பலரையும் காப்பாற்றுவர் பலரும் அன்பாக இருப்பார்கள்.*

*3. <u>மத்தியான காலம்:</u> அரசு ஆதரவு பெறுவர். பலர் நேசம் உடையவர் செல்வம் இருக்கும் கடன் இல்லை.*

*4. <u>பிற்பகல் காலம்:</u> சம்பாதிக்கக் கூடியவர் உழைப்பால் ஊதியம் பெறக் கூடியவர்.*

*5. <u>மாலைக் காலம்:</u> வறுமையில் வாடுபவர் அவமானம் நேரக்காட்டும்.*

*6. <u>இரவுக் காலம்:</u> அடக்கமானவர் ஆச்சார அனுஷ்டானத்தை கடைப்பிடிக்காதவர்கள் புத்தர பேறு இல்லாதவர்கள்.*

## 805. பிறந்த நேரத்தை சூரியன் லக்கனம் கொண்டு எவ்வாறு அறியலாம்?

| சூரியன் இருக்கும் ஸ்தானம் | காலம் | பிறந்த நேரம் |
|---|---|---|
| இலக்கனம் | விடியல் | 4 மணி முதல் 6 மணிக்குள் |
| 2வது வீடு | இரவு | 12 மணி முதல் 4 மணிக்குள் |
| 3வது வீடு | இரவு | 12 மணி முதல் 2 மணி வரை |
| 4வது வீடு | இரவு | 10 மணி முதல் 12 மணி வரை |
| 5வது வீடு | இரவு | 8 மணி முதல் 10 மணி வரை |
| 6வது வீடு | இரவு | 6 மணி முதல் 8 மணி வரை |
| 7வது வீடு | மாலை | 4 மணி முதல் 6 மணி வரை |
| 8வது வீடு | மாலை | 2 மணி முதல் 4 மணி வரை |
| 9வது வீடு | நண்பகல் | 12 மணி முதல் 2 மணி வரை |
| 10வது வீடு | காலை | 10 மணி முதல் 12 மணி வரை |
| 11வது வீடு | காலை | 8 மணி முதல் 10 மணி வரை |
| 12வது வீடு | காலை | 6 மணி முதல் 8 மணி வரை |

## 806. ஜென ஜாதகத்தை சரிப்பார்க்க விதிகள் யாவை?

*1. இலக்கினம் முதல் நவகிகரங்கள் ஜாதகத்தில் அடைக்கப்பட்டதா என்று பிரிக்கவேண்டும்.*

*2. இராசி இலக்கினத்திலுள்ள சாரம் பெற்றதற்கு ஏற்ப நவாம்சத்தில் இலக்கினம் முதல் நவாம்சம் வரையில் சரியாக உள்ளதா என்பதை காண வேண்டும்.*

*3. புதன், சூரியன் நின்ற பாகைக்கு 29 பாகைக்குள் முன் அல்லது பின் நிற்க வேண்டும்.*

*4. இராகு கேது என்கிற இரண்டு கிரகங்கள் சரியாக 180 பாகையில் நிற்க வேண்டும்.*

*5. இராகு 1வது இராசி எனில் கேது 7வது இராசியில் நிற்க வேண்டும். கேது 1வது இராசி எனில் இராகு 7வது இராசியில் நிற்க வேண்டும்.*

*6. சூரியனிலிருந்து சந்திரன் சேர்ந்து மீண்டும் பிரிந்து 7வது இராசிக்கு வரையிலுள்ள காலம் வளர்பிறை காலம்*

*7. 7வது இராசியிலிருந்து சந்திரன் சூரியனை சென்று அடையும் காலம் தேய்பிறை காலம்*

*8. சூரியன் சந்திரன் சேர்ந்து இருந்தால் அமாவாசை இவரும் நேர்க்கு நேர் நின்றால் 7க்கு 7இல் நின்றால் பௌர்ணமி காலம்.*

*9. சூரியன் அந்த தமிழ் மாதத்திற்கு உரிய ராசியில் உள்ளதா என்பதை காண வேண்டும்.*

*10. சூரியன் ஜாதகத்தில் எந்த பாவகத்தில் உள்ளது என்பதை கொண்டு பிறந்த நேரதை அறியலாம்.*

## 807. சூரியனை கொண்ட ஆராய்ய தக்கவை?

*ஜாதகரின் உடல் ஆரோக்கியம் ஆன்மிக பலம் தந்தையுடன் உறவு இரத்தத்தின் தூய்மை கண் பார்வை, பிறந்த குலம் ஆகியவைகள் துல்லியமாக கணித்துக் கொள்ள முடியும்.*

## 808. வெளி நாட்டவர் எந்த கிரகத்திற்கும் நம் நாட்டில் எந்த கிரகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

*வெளி நாட்டவர் சூரியனுக்கும் நம் நாட்டவர் சந்திரனுக்கு ஜாதகத்தில் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.*

**809. கிரேகக்கான தக்க பலன் எவை?**

சர இராசியில் முதல் திரேகாணம் நன்மைதரும்
சர இராசியில் 2வது திரேகாணம் மத்திம பலன்
சர இராசியில் 3வது திரேகாணம் தீயப்பலன்
ஸ்திர இராசியில் முதுல் திரேகாணம் தீயப்பலன்
ஸ்திர இராசியில் 2வது திரேகாணம் நன்மைதரும்
ஸ்திர இராசியில் 3வது திரேகாணம் மத்திமபலன்
உபய இராசியில் 1வது திரேகாணம் தீயபலன்
உபய இராசியில் 2வது திரேகாணம் மத்திமபலன்
உபய இராசியில் 3வது திரேகாணம் நன்மைதரும்

**810. நவ மணிகள் அணிவதால் ஏற்படும் பலன் எவை?**

1. வைரம் — சகல நன்மை, சந்திரான விருத்தி
2. முத்து — மனச்சாந்தி பெருஞ்செல்வம் தரும்
3. பவளம் — மலடு நீங்கம், பேய், பிசாசு தீண்டாது திருஷ்டி விலகும்.
4. கோமேதகம் — தன தான்யம் இன்பம் பெருகும்.
5. மரகதம் — எல்லா வளங்களும் ஆள் அடிமையுடன் கூடிய அரச யோகம் கிட்டும்.
6. நீலம் — நிரை ஆயுள் செல்வம் புகழ்
7. மாணிக்கம் — வீரம் செல்வாக்கு புகழ் ஏங்கும்.
8. வைடூரியம் — கேது தோஷம் நிவர்த்தி
9. புஷ்பராகம் — மனித்துணிவைத்தரும்.

**811. இலக்கினம் என்பது என்ன?**

ஜெனன மாத இராசி இருப்பிலிருந்த ஒவ்வொர இராசி இருப்பாகத் தாண்டி உதயாகி நாழிகை எந்த இராசி இருப்பு பரிமாணத்தில் வருகின்றதோ அந்த இராசிக் கட்டமே இலக்கினம் ஆகும்.

**812. உதயாதி நாழிகை என்றால் என்ன?**

குழந்தை பிறந்த நேரம் வரைக்கும் உள்ள நேரத்தை ஜோதிட மொழியாகிய நாழிகை வினாடியாக மாற்றிக் கொள்ளுதலே உதயாகி நாழிகை என்பதாகும்.

**813 பல வகை ஆண்டுகள் எவை?**

நட்சத்திர ஆண்டு
பருவ ஆண்டு
கணு வழி ஆண்டு
நிர்வாக ஆண்டு
அன்மை நிலை ஆண்டு.

**814. விதி, மதி, கதி என்பது என்ன?**

விதி என்பது ஜென்ம இலக்கினம்
மதி என்பது சந்திரா இலக்கினம்
கதி என்பது சூரியன் நின்ற இடம்

**815. அவமிருத்யு தோஷம் என்றால் என்ன?**

அகாலாமரணத்தை தரும் அதாவது விபத்து, கொலை செய்யப்படுதல், தற்கொலை செய்துக் கொள்வதே அவமிருத்யு தோஷம் என்பது தாகும்.

**816. பாவங்கள் குறிப்பிடும் உறவு நிலை எவை?**

| | |
|---|---|
| 1. இலக்கினம் | விதகர் பாட்டி மைத்துனர் மைத்துடன் தாய்மாமனின் இறப்பு |
| 2. 2ஆம் பாவம் | மகனின் மாமியார், தந்தையுடன் மூத்த சகோதரிகள் |
| 3. 3ஆம் பாவம் | மமௌனாரி, மாற்றாந்தாய், இளைய சகோதரம் |
| 4. 4ஆம் பாவம் | தந்தையின் ஆயுள், தாய், தந்தை வழிபாட்டி |
| 5. 5ஆம் பாவம் | மருமகனின் தாய்மாமன் சித்தப்பா மகன் மகள், பாட்டனார்., |
| 6. 6ஆம் பாவம் | மாமன் மனைவி, மாமனாருடன் உடன்பிறப்பு தாய்மாமன் வகை |
| 7. 7ஆம் பாவம் | இளைய உடன் பிறப்பின் புதல்வர் மனைவி கணவன் |
| 8. 8ஆம் பாம் | சகோதரியின் மாமியார் |
| 9. 9ஆம் பாவம் | மூத்தோரிகள், தந்தை இளைய சகோதரியின் மனைவி கணவரின் இளைய சகோதரர் தாய்வழி உறவு |
| 10. 10ஆம் பாவம் | தந்தையின் நண்பர் |
| 11. 11ஆம் பாவம் | மருமகன், மருமகள் மூத்த உடன் பிறப்பு |
| 12. 12ஆம் பாவம் | தந்தை, வழிப்பாட்டனர். |

**817. புனர்பூசம் பூசம் ஆயில்யம் நட்சத்திரத்தில் கிரகம் 4 பாதங்களில் கிரகம் நின்றால் நவாம்சத்தில் எந்த ராசியில் நிற்கும்?**

புனர் பூசம் 1ஆம் பாதம் — மேஷம்
2ஆம் பாதம் — ரிஷபம்
3ஆம் பாதம் — மிதுனம்
4ஆம் பாதம் — கடகம்
பூசம் 1ஆம்பாதம் — சிம்மம்
2ஆம்பாதம் — கன்னி
3ஆம் பாதம் — துலாம்
4ஆம் பாதம் — விருச்சிகம்
ஆயில்யம் 1ஆம் பாதம் — தனுசு
2ஆம் பாதம் — மகரம்
3ஆம் பாதம் — கும்பம்
4ஆம் பாதம் — மீனம்

**தொடரும்...**



# குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைபடுதல், மாதவிடாய்க் கோளாறு, மலட்டுத்தன்மை போன்றவற்றுக்கு இயற்கை மருத்துவம்

## பத்தியம் கிடையாது. பக்க விளைவு கிடையாது

குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைபடுதல், மாதவிடாய்க் கோளாறு, மலட்டுத்தன்மை போன்றவற்றுக்கு முக்கிய காரணம் நாம் உண்ணும் உணவுகளில் அதிகமாக ரசாயனப் பொருள்கள் கலந்திருப்பதாலும், பலவித நோய்களுக்காக அவ்வப்போது வீரியமிக்க ரசாயன மாத்திரைகளை உட்கொள்வதாலும், அடிக்கடி மாமிச உணவுகள் உண்பதாலும், அதிகமான கவலை கொள்ளுதல், அதிக உடலுறவு கொள்ளுதல் போன்றவற்றால் கர்ப்பப்பையில் புண் ஏற்படுகிறது. இதனால் கர்ப்பப்பையில் உள்ள சுரப்பிகள் நன்றாக இயங்காது. மேலும் அதன் சுரப்பு நீரும் திறன்மிக்கதாக இருக்காது. தவிர கர்ப்பப்பையும் நன்றாக சுருங்கி விரியும் தன்மையினை இழந்துவிட்டால் முறையான மாதவிடாய் இருக்காது. வெள்ளைபடுதலும் தோன்றும். வெள்ளைப்படுதல், மாதவிடாய்க் கோளாறுகள், மலட்டுத்தன்மை உள்ள தாய்க்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் கடினம்.

### கருத்தரிக்காமைக்கு காரணம்

பெண்களுக்கு உற்பத்தியாகும் கரு முட்டைகள் சரியான முதிர்ச்சியும், வளர்ச்சியும் இல்லாதிருத்தல், கருப்பையின் குழாய்கள் அடைப்பு அல்லது சுருங்கி இருத்தல், முட்டையகத்தில் (ஓவரி) குறைபாடு, கருப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பை புண், ஆண்களின் விந்தணு எண்ணிக்கையில் குறைவாகவும், தகுந்த உயிரூட்டத்துடன் இல்லாமல் இருத்தல். அடிக்கடி உடலுறவு கொள்ளுவதால் முதிர்ச்சி இல்லாத விந்தணு வெளியாகி உயிர்ப்பிக்கும் சக்தி இல்லாதிருத்தல் ஆகியன கருத்தரிக்காமைக்குக் காரணம் ஆகும்.

### தெய்விக மூலிகை வைத்தியம்

விநாயகருக்குரிய அருகம்புல், சக்திக்குரிய வேப்பிலை, சிவனுக்குரிய வில்வம், பிரம்மாவுக்குரிய அத்தி, கங்கைக்குரிய மாவிலை மற்றும் அற்புத மூலிகை மருத்துவ குணம் கொண்ட அரசிலை, ஆலஇலை, இலந்தை இலை, அமுக்கரா, சாதிக்காய், பூனைக்காளி விதை, நெருஞ்சில், பாதாம்பிசின், நாவல் இலை, முருங்கையிலை, ஓரிதழ்த் தாமரை, கீழாநெல்லி ஆகியவைவற்றைப் பறித்து வந்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து சலித்து பின் சம அளவில் ஒன்றாகக் கலந்து ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக்கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு முன் தினமும் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ளவும். இதனை சுமார் ஆறுமாதம் வரை பின்பற்றவும். இளம் தம்பதிகளுக்கு மிக விரைவிலும், மற்றவர்களுக்கு சற்றுத் தாமதமாகவும் கண்டிப்பாக பலன் தெரியும். இத்தகைய மூலிகைகளினால் வெள்ளைபடுதல், மாதவிடாய்க் கோளாறு, மலட்டுத்தன்மை நீங்கி கர்ப்பப்பை நன்கு வளர்ச்சி அடையும். விந்தணு, சினை முட்டைகள் நன்கு முதிர்ச்சி அடைந்ததாகவும், வளர்ந்ததாகவும் இருக்கும். மேலும் எலும்புகள், நரம்புகள் பலம் பெற்று ஆண்மைக் குறைவும் மறையும்.

வேப்பிலை, வில்வம், கீழாநெல்லி போன்றவைன எதிர்ப்பு சக்தியையும், ரத்தம் சுத்தம் அடையவும், அத்தியிலை, நாவல், முருங்கை, ஓரிதழ்த் தாமரை, போன்றவை நரம்பு மண்டலம் நன்கு இயங்கவும், அரசன், ஆலஇலை, மாவிலை போன்றவை கருத்தரிக்க உதவும். உயிர் அணுக்கள், கருமுட்டை ஆகியவற்றின் எண்ணிக்கை அளவு, வீரியம் ஆகியவற்றை அதிகப்படுத்தவும் உதவும். இத்தகைய மகிமையின் காரணமாகவே திருமணச் சடங்குகளின் போது இதன் குச்சிகளை ஓமம் வளர்ப்பார்கள். அப்போது அதன் புகையை தம்பதிகள் இருவரும் சுவாசிப்பதன் மூலம் மேற்கூறிய பலனை அடைவார்கள்

### உணவு முறைகள்

தம்பதிகள் இருவரும் தினம் ஏதேனும் ஒருவேளை வேகவைக்காத பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழஜூஸ்கள், சாலட்கள் போன்றவற்றையே உணவாக உட்கொள்ள வேண்டும். கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பேரிக்காய், வாழை, கொய்யா, ஆப்பிள், பேரீச்சை, திராட்சை, மாதுளை, தர்பூசணி, பாதாம், முந்திரி, இளநீர், கரும்புச்சாறு, தேங்காய், வெங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லி போன்றவற்றிலும் இருந்து ஏதேனும் இரண்டு (அ) மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளலாம். பின்னர் மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உட்கொள்ள வேண்டும். இதில் கேழ்வரகு, கோதுமை, கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்களையும் அடிக்கடி சேர்த்துக்கொள்வது நல்லது. நிலக்கடலை, மூக்குக்கடலை, கொள்ளு போன்றவற்றையும் மாலை வேளைகளில் சுண்டல் செய்து உட்கொள்ளலாம். கிடைத்தால் வெள்ளாட்டுப்பால் சிறிது தண்ணீர் கலந்தும் தம்பதிகள் குடிக்கலாம்.

**தவிர்க்க வேண்டியது:-** புகைத்தல், மதுவகைகள், மாமிச உணவுகள், சர்க்கரை கலந்த இனிப்புகள், ரசாயனம் கலந்த உணவுகள், குளிர்பானங்கள், எள்ளில் செய்த பலகாரம், அகத்திக்கீரை, பாகற்காய், பப்பாளி முதலியவை தவிர்க்கவும். இவர்கள் வாரம் ஒரு நாள் பகல் ஒருவேளை (சமைத்த) உணவை தவிர்க்கவும். இரவு உணவை 7மணிக்குள் முடித்தல் வேண்டும்.

**உடற்பயிற்சிகள்:-** நடத்தல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், நின்ற இடத்தில் ஓடுதல், குதித்தல் கயிறாட்டம், கைகால் விரல்களை நீட்டி மடக்குதல் மூச்சுப்பயிற்சி தியானம் போன்றவற்றை தினம் 20 நிமிடம் காலை மாலை செய்தல் நல்லது.

**ஒவ்வொரு மாதமும்**

| | |
|---|---|
| 2 | வேலூர், காஞ்சிபுரம் |
| 4 | கடலூர், விழுப்புரம் திருவண்ணாமலை |
| 7,8 | மும்பை |
| 12 | சேலம், ஈரோடு, திருப்பூர் |
| 13 | கோவை, உடுமலைபேட்டை |
| 14 | மதுரை, திருநெல்வேலி |
| 15 | விருதுநகர், தஞ்சாவூர் |
| 16 | திருச்சி, கரூர் |
| 20,21 | புதுடெல்லி |

**Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K.மாணிக்கவாசகம்**

## CKM தெய்விக மூலிகை மையம்

# CKM DIVINE HERBAL CENTRE

தலைமை முகவரி : நெ. 1, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்) திருப்பத்தூர், வேலூர்-635601 ☎ :04179-220469, செல் : 9444161670

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-600 010. ☎:044-26424285, 26427638 செல்: 9444001447

மேலே உள்ள முகவரிகளில் ஆலோசனை நேரம் : தினமும் காலை 10.00 - 1.00pm மாலை 5.00 - 7.00pm

Email : msabapathy@rocketmail.com

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | இராசி 01.08.2015 அதிகாலை 12.01க்கு கிரகநிலை அமர்வு | | சூ செவ் பு |
| சந் | | | குரு சுக் (வ) |
| | சனி | | ரா |

# ஆகஸ்டு மாத இராசி பலன்கள்




புலிப்பாணி
மு. இளங்கோ
Cell: 98943 85933


**1-8-2015 ஆடி மாதம் 15ஆம் தேதி முதல்ல 31-08-2015**
**ஆவணி மாதம் 14ஆம் தேதி வரை**

17–8–2015 – சூரியன் சிம்ம இராசி மாற்றம் | 1–8–2015 – புதன் சிம்ம இராசி மாற்றம்
21–8–2015 புதன் கன்னி இராசி மாற்றம் | 24–8–2015 – சுக்கிரன் கடகம் இராசி மாற்றம்.

## மேஷம்

நடசத்திரம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

நெஞ்சில் உறுதியுடன் எந்த நிலையிலும் தைரியத்தை கைவிடாத மேஷம் இராசி நேயர்களே

குருவின் மாற்றத்தால் நன்மைகள் ஏற்படும் என்று சந்தோஷப்பட்டாலும், கூடவே உதவி செய்ய இராகு கிரகத்தைத் தவிர மற்ற கிரகங்களின் ஒத்துழைப்பு இல்லை. எனவே போராட்டங்களை சந்தித்து மீள முயற்சி செய்ய வேண்டும். கோர்ட், கேஸ் விவகாரங்களில் இம்மாதம் செலவுகள் அதிகரிக்கும். இரண்டாம் தரதொழில், கட்டப்பஞ்சாயத்து, தொழில், ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர் கவனம் தேவை. காவல்துறையில் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரிடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் பெரிய பாதிப்புகள் இருக்காது. ஆனால் இம்மாதம் சந்திரன் வக்கிரத்தினால் திருமண காரியங்களில் அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம். திருமண விஷயங்கள் தடைபட்டு நின்று போகக் கூடும். சில்லறை கடன் சுமைகள் கடுமையான நெருக்கடியை கொடுக்கும். வேலைக்குப் போகும் மனைவியைப் பெற்றவர்கள். ஓரளவு சமாளித்து விடுவார்கள். மனதில் ஏதோ ஒருவித அச்சம் இருந்துக் கொண்டே இருக்கும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி படிக்கும் மாணவ மாணவிகள் கல்வியில் கடுமையாக போராட வேண்டியிருக்கும். பெற்றோர்கள் தேவையற்ற பாசத்தை கொடுத்து ஆரம்ப கல்வியை கெடுத்து விடக்கூடாது. உயர்கல்வி மாணவ, மாணவிகளை பொறுத்தவரையில் தடையின்றி கல்வி கற்பார்கள்.

**பெண்கள்:** பெண்களை பொறுத்தவரையில் இம்மாதம் உடல்நிலையில் கவனம் தேவை. தேவையற்ற டென்ஷனை குறைக்க வேண்டும. குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் ஸ்ரீமத் பாகவதம் படிப்பது நலம் தரும். உத்தியோகம் பார்ப்பவர்கள் இடமாற்றங்களை சந்திக்க நேரிடும். கையில் உள்ள பணத்தை யாரிடமும் கொடுத்து ஏமாற வேண்டாம்.

**பண வரவு:** விவசாய தொடர்பான தொழிலில் நஷ்டம் உண்டாகும். போலீஸ், இராணுவம், இறைச்சி கடை, தோல் வியாபாரம், பழைய இரும்பு, மோட்டார் ரீவைண்டிங், லேத் ஒர்க்ஸ், உப்பு வியாபாரம், பந்தல் அமைப்பாளர், வீடு கட்டும் தொழிலாளிகள் போன்றவை ஓரளவு இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

"ஓம் நமோ பாஸ்கராய மம சர்வ கிரஹாணாம் பீடா நாகனம் குரு குரு ஹீம்பட ஸ்வாஹா" என்று தினசரி 108 தடவை ஜெபம் செய்து குளம், தெப்பக்குள மீன்களுககு அவல், பொரி, போட வேண்டும்.

## ரிஷபம்

நடசத்திரம்: கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரிஷம் 1,2 பாதங்கள்

பேச்சில் தெளிவும், கற்பனைத் திறனும் கொண்ட ரிஷப இராசி நேயர்களே! உங்களுக்கு இம்மாதம் தேவையான பொருள் வரவுக்கு குறைவு இருக்காது. குருவின் சிம்மம் இராசி மாற்றம் மருத்துவ செலவுகளை குறைக்கும். இம்மாதம் கேது, சூரி, செவ், புதன் மற்றும் சுக்கிரன் கிரகங்களின் நன்மையான சஞ்சாரம் பழைய கடன்களை ஓரளவு குறையச் செய்யும். இராசி நாதன் சுக்கிரன் சிம்மத்தில் வக்கிரம் பெற்று அமர்வது வீடு கட்டுவது, தொடர்பாக சில பணவிரையங்களை உண்டாக்கும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அடிக்கடி கருத்துவேறுபாடுகள் உண்டாகும். குறிப்பாக புதுமண தம்பதிகள் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். வீட்டில் உடன்பிறப்புகள் வகையில் சுபவிரையச் செலவுகள் உண்டாகும். வீடு கட்டுவது தொடர்பான வங்கி கடன் உதவிகளில் தடை தாமதம ஏற்பட வாய்ப்பு உள்ளது. வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் பக்கத்து குடித்தனக்காரர்களுடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபட வேண்டாம்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி சம்பந்தமான படிப்பில் மாணவ, மாணவிகளின் கல்வித் திறன் அதிகரிக்கும். ஆனால் அரசு தேர்வு எழுதுபவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். தினசரி படிப்பிற்கு முன்பு ஹயக்ரீவர் மந்திரங்களை படித்து சிறிது தியானம் செய்து படிக்க கல்வியில் மேலும் உயர்வு ஏற்படும்.

**பெண்கள்:** பெண்களைப் பொறுத்தவரையில் இம்மாதம் மிகவும் பொறுமையுடன் செயல்பட வேண்டும். புகுந்த வீட்டில் அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்பட்டு கோபித்துக் கொண்டு பிறந்தவீடு செல்ல நேரிடும். வாகனம் ஓட்டிப் பழகுபவர்கள் நிதானமாக செயல்பட வேண்டும். காதல் விவகாரங்களில் ஈடுபட்டு இருப்பவர்கள் வீண் அவமான பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். வட்டி தொழில். ஏல சீட்டு நடத்துபவர் கவனம் தேவை.

**பணவரவு:** விவசாயத்தில் வரவும் செலவும் சரிசமமாக அமையும். பத்திரிக்கைத்துறை, ஜவுளி, பெட்ரோல் பம்ப், எண்ணெய் கடை, சலூன் கடை, சிற்ப வேலை, தீயணைப்புத்துறை, துப்புரவு தொழிலாளர், பழைய இரும்பு வியாபாரம், வாகன ஓட்டுனர் போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

ஓம் நமோ பிரபதே வாசுதேவாய நமஹ என்று காலை மாலை 108 தடவை ஜெபம் செய்து பசுவிற்கு பழம் கொடுக்க கடன் சுமைகள் குறையும்.

# மிதுனம்

நட்சத்திரம் : மிருகசீரீஷம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதங்கள்

நட்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஓடி வந்து உதவிசெய்யும் குணம் உள்ள மிதுனம் இராசி நேயர்களே. இம்மாதம் பிற்பகுதியில் சூரியன், புதன் மற்றும் சுக்கிரன், சனி, கேது, கிரகங்களின் அனுகூல சஞ்சாரம் காரிய வெற்றிகளை பெற்றுத்தரும். கோர்ட், கேஸ் வழக்கில் சாதகமான சூழல் ஏற்படும். ஆனால் கடகத்தில் உள்ள செவ்வாய் தேவையற்ற படப்பிடப்பினை உருவாக்கும் எனவே எதிலும் நிதான பேச்சுகள் தேவை பூர்வீக சொத்துகளில் எதிர்பாராத சில இலாபம் கிடைக்கும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். மனைவி வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர் வருகை அதிகரிக்கும். வீட்டில் பெண் குழந்தைகள் இருப்பின் அவர்கள் மூலம் சந்தோஷமான சுப விரைய செலவுகள் உண்டாகும். சிலர் அடமானம் போன சொத்துக்கள் மீது உள்ள கடன் சுமைகளை குறைப்பார்கள்.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் குழந்தைகளின் உடல்நிலையில் பெற்றோர்கள் கவனம் கொள்ளவேண்டும். உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய நட்புகள் ஏற்படும். கல்விச் சுற்றுலா மூலம் புதிய இடங்களுக்கு சென்று வரக்கூடிய சூழல் ஏற்படும்.

**பெண்கள்:** உத்தியோகம் போகும் பெண்கள் புதிதாக மேற்படிப்பு படிக்க நேரிடும் அரசு பணியில் இருப்பவர்களுக்கு புதிய இடமாற்றம் ஏற்படலாம். சிலருக்கு நீண்டகாலம் கழித்து இரண்டாவது கரு உற்பத்தி ஏற்படக்கூடும். ஆசிரியர், நர்ஸ், வக்கீல், போன்ற பணிகளில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும்

**பணவரவு:** விவசாயத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. மதபோதகர், தட்டச்சு பணியாளர்,வங்கி பணியாளர், குடிநீர் பாசனம், தொடர்பு பணியாளர், அறநிலையத்துறை கல்லூரி பேராசிரியர், புரோகிதர், நீதிபதி, ஜோதிடர், மத்திய, மாநில அமைச்சர்கள் போன்றவர்கள் இலாபம் பெறுவார்கள்.

**வணங்க வேண்டிய தெய்வவழிபாடு**

தினசரி விநாயகர் அகவல் படித்து எறும்பு புற்றுக்கு ரவை, சர்க்கரை உணவாக வழங்க சகல காரிய மேன்மை ஏற்படும்.

# கடகம்

நட்சத்திரம் : புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

பிறருக்கு உதவி செய்யும் தாய்மை குணம் கொண்ட கடகம் இராசி நேயர்களே! இம்மாதம் எவ்வளவு பணம் வந்தாலும் அதற்கு மீறிய செலவுகள் ஏற்படும். இம்மாதம் புதன், சுக், இராகு, குரு ஆகிய கிரகங்களில் அனுகூலமான சஞ்சாரத்தினால் கேட்ட இடங்களில் பண உதவிகள் கிடைக்கும். சில்லறைக் கடன் சுமைகள் குறையும். சூரியன் மற்றும் செவ்வாய், சனி கிரகங்களினால் தேவையற்ற மனக்கவலைகள் இருந்துக் கொண்டே இருக்கும். தேவையற்ற வாக்குறுதிகளை கொடுக்க வேண்டாம்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அடிக்கடி வாக்குவாதம் அதிகரிக்கும். கடகத்தில் நீச செவ்வாய் அடிக்கடி டென்ஷனை உருவாக்கும். பங்காளித் தொடர்பு உடைய சொத்து பிரச்சனைகளை தற்சமயம் பேசி முடிக்க வேண்டாம். வாகனம் ஓட்டிச் செல்லும் பொழுது கவனம் தேவை. வீட்டில் திருமண வயதில் பிள்ளைகள் இருந்தால் திருமண காரியமுயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பாக மாணவ மாணவிகளின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கல்லூரி படிப்பு படிக்கும் மாணவர்கள் ஹாஸ்டலை விட்டு வெளியே சென்று தங்க நேரிடும். நட்பு வகையில் மனகசப்பு ஏற்படக்கூடும். கையில் உள்ள பணத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும்.

**பெண்கள்:** இம்மாதம் பெண்கள் உடல்நிலையில் கவனம் தேவை. தலைப்பிள்ளை கருவுற்ற பெண்கள் தக்க மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற்று நடக்க வேண்டும். புகுந்த வீட்டில் ஓரளவு சுமூகமான சூழல் நிலவும். சிலர் அடமானம், போன சில தங்க நகைகளை மீட்கக் கூடும். உடன்பிறப்புகளுடன் மனவருத்தம் ஏற்படும். கம்யூட்டர் பிரிவு, வங்கி பணி செய்பவர் மேன்மை பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் கடுயையான பணவிரையம் ஏற்படும். போலீஸ், மிலிட்டரி, பணி செய்பவர், உப்பு மற்றும் கெமிக்கல் வியாபாரம், பெயிண்ட் கடை, இறைச்சி, மீன் கருவாடு வியாபாரம், தோல் விற்பனை, ஹோட்டல் தொழில், பாத்திர வியாபாரம் இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

"ஓம் சிவசிவ ஓம்" என்று மனதில் ஜெபித்தபடி சிவன் கோவிலில் பள்ளியறை தரிசனம் வெற்றி கிடைக்கும்.

## சிம்மம்

நட்சத்திரம் : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதங்கள்

உயர்ந்த எண்ணமும், ஈகை குணமும் கொண்ட சிம்ம இராசி நேயர்களே! இம்மாதம் சுக்கிரன், இராகு, பிற்பகுதியில் புதனின் சஞ்சாரங்கள் நன்மைகளை செய்யும். இம்மாதம் யோகபாக்கியங்களுக்கு குறைவு இருக்காது. ஆனால் தேவையற்ற வீண் அலைச்சல்களும், மன சஞ்சலமும் மாறி மாறி உண்டாகும். திருட்டுத்தனமான ஆண், பெண் தொடர்பு உள்ளவர்களின் செய்கை வெளிப்பட்டு அவமானங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு அரசு பணியில் மேல் அதிகாரிகளின் பகை ஏற்பட வாய்ப்பு உள்ளது. கவனமாக செயல்பட்டு நடக்க வேண்டும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் பாசமும், நேசமும் அதிகரிக்கும். புதிதாக திருமணம் செய்த தம்பதிகளுக்கு உடனே கருஉற்பத்தி ஏற்படும். உறவுகளில் உள்ள பகைகள் விலகும். உற்றார் உறவினர் வருகை அதிகரிக்கும். இதனால் செலவுகள் ஏற்படும். ஆனால் எப்பொழுதும் வீடு கலகலப்பாக இருக்கும். சிறிய வயது பால்ய நண்பர்களை மீண்டும் சந்தித்து மனமகிழ்வு கிட்டும். வங்கிகளில் எதிர்பார்த்த கடன் உதவிகள் தள்ளிப் போகும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி மாணவ, மாணவிகளின் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். ஆனால் உயர்கல்வி படிப்பவர்கள், காதல் விவகார விஷயங்களில் தலையீடு செய்யாமல் இருக்க வேண்டும். கல்லூரி படிப்பு படிப்பவர்கள் வேலைவாய்ப்பு நேர்முக தேர்வுகளில் வெற்றிபெறுவார்கள்.

**பெண்கள்:** இம்மாதம் புகுந்த வீட்டில் உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். சிலருக்கு பூர்வீக சொத்துக்கள் மீது சில வருமானம் கிடைக்கும். சிலருக்கு புதிய வாகன யோகம் ஏற்படும். நடுத்தரவயதை நெருங்கிய பெண்களுக்கு சிலருக்கு மருத்துவ மனைகளில் தங்கி மருத்துவம் பார்க்க நேரிடும். சிலருக்கு கண் ஆபரேஷன் நடைபெற வாய்ப்பு உள்ளது. உடன்பிறப்புகளுடன் உள்ள மனஸ்தாபம் விலகும். உதவிகள் கிடைக்கும்.

**பணவரவு:** விவசாயத்தில் கால்நடை வளர்ப்பு இலாபம் தரும். சில்லறை மற்றும் நடைபாதை வியாபாரம் இலாபம் தரும். தங்க நகை வியாபாரம், பூ கடை தொழில், ஜவுளி விற்பனை, வாகன ஓட்டுனர், பழக்கடை, ஸ்வீட்ஸ் ஸ்டால், சிகை அலங்கார கடை, கல்லூரி பேராசிரியர் போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு:

"ஓம் ஹ்ரீம் ஶ்ரீம் இந்திராக்ஷியை நமஹ என்று காலை மாலை 108 தடவை கிழக்கு நோக்கி அமர்ந்து ஜெபம் செய்ய சகல கிரஹதோஷம் நீங்கும்.

## கன்னி

நட்சத்திரம் : உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதம்

சிக்கனமாகவும் அதே சமயம் திட்டமிட்டு சிறப்பாக செயல்படக் கூடிய கன்னி இராசி நேயர்களே! இம்மாதம் எவ்வளவு பணவரவு வந்தாலும் அதற்கு ஏற்ற செலவுகளும் உண்டாகும். இம்மாதம் சனி, சுக்கிரன், செவ், முற்பகுதியில் சூரியன் ஆகிய கிரகங்களின் சஞ்சாரம் செலவுக்கு ஏற்ற பணவரவுகளை ஏற்படுத்தித் தரும். தற்சமயம் புதிதாக கடன்களை வாங்கக் கூடாது. யாருக்கும் ஜாமீன் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது. வியாபாரிகள் அரசு, அதிகாரிகளை பகைத்துக் கொள்ளக்கூடாது.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் சில நேரம் வாக்குவாதம் அதிகரிக்கும். மற்றபடி பெரிய பாதிப்பு இல்லை. நீண்டகாலமாக காதலித்து வருபவர்கள். தற்சமயம் பெற்றோரிடம் எடுத்துக்கூறி சம்மதம் பெற நல்ல சமயம் ஆகும். சிலருக்கு, வீடு கட்டுவது தொடர்பாக எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைக்கும். சிலர் வாடகை வீட்டை மாற்றி வேறு இடம் செல்லக்கூடும். வீட்டில் வயதான பெற்றோர் இருப்பின் அவர்கள் வழியில் மருத்துவச்செலவு உண்டாகக் கூடும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் குழந்தைகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் அதிகரிக்கும். ஆனால் உயர்கல்வி படிப்பவர்கள் படிப்பில் நாட்டம் குறையும். சிலர் பள்ளி செல்வதைத் தவிர்த்து நண்பர்களுடன் சுற்றித் திரியக்கூடும். பெற்றோர்கள் கவனமாக செயல்பட வேண்டும். அரசு தேர்வு எழுதுபவர்கள் சிறப்பு பயிற்சி மேற்கொள்வது நல்லது.

**பெண்கள்:** கருவுற்ற பெண்கள் தேவையற்ற அலைச்சலை குறைக்க வேண்டும். மருத்துவரின் ஆலோசனைபடி நடக்க வேண்டும். சிலருககு உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளுடன் மோதல் ஏற்படக்கூடும். பெரும்பாலும் பகைத்துக் கொள்வதை விட வேறு உத்தியோகத்திற்கு மாறி செல்வது நல்லது. வாகனம் ஓட்டிச்செல்லும் பொழுது நிதானம் தேவை. சிலர் புகுந்த வீட்டில் மனம் வருத்தம் ஏற்பட்ட தனிகுடித்தனம் செல்ல நேரிடும்.

**பணவரவு:** விவசாய தொடர்புடைய தொழிலில் பெரிய இலாபம் கிடைக்காது. ரியல் எஸ்டேட், திருமண அமைப்பாளர், கம்ப்யூட்டர் புரோகிராம் செய்பவர், ஜவுளி விற்பனையாளர், மெடிக்கல் சேல்ஸ்மேன்கள், பிரிண்டிங் பிரஸ், பத்திரிக்கை நிருபர்கள், ஜோதிடர், ஆடிட்டர், ஸ்டேஷனரி கடை, பிளாஸ்டிக் பொருள் விற்பனை போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

தினசரி காலை மாலை "ஓம் ஶ்ரீம் ஹ்ரீம்க்லீம் சாம் கால பைரவ நமஹ" என்று மனதில் ஜெபித்தப்படி வழிபாடு செய்து பசுவிற்கு அகத்திக்கீரை கொடுக்க கிரக பாதிப்புகள் விலகும்.

## துலாம்

நட்சத்திரம் : சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

வியாபார நுணுக்கங்களில் தெரிந்து திட்டமிட்டு செயல்பட்டு வெற்றிகளை குவிக்கக்கூடிய துலாம் இராசி நேயர்களே உங்களுக்கு நினைத்த காரியங்கள் கைகூடும். தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். நீண்டகாலமாக வீடு கட்ட முடியாமல் தடைபட்டு வருவபவர்கள் தற்சமயம் முயற்சி செய்ய காரியம் நடைபெறும். சூரியன், செவ், குரு, சுக், கேது முற்பகுதி புதன் என்று சகல கிரகங்களும் அனுகூலமான பலன்களை வாரி வழங்கும். நீண்டநாட்களாக திருமணம் தடைபட்டு வருபவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் பாசமும், நேசமும் அதிகரிக்கும். குடும்பத்தில் மருத்துவ செலவுகள் படிப்படியாக குறையும். சிம்மகுரு பெயர்ச்சியால் நல்ல பல காரியங்கள் படிபடியாக நடக்கும். வீட்டில் பெண் குழந்தைகள் மூலம் சுபவிரைய செலவுகள் நடைபெறும். வேலை தேடி அலைபவர்களுக்கு நன்மையான தகவல் கிடைக்கும். வீடுகட்டுவது தொடர்பான காரியங்கள் படிபடியாக நடைபெறும். உடன்பிறப்புகளால் உதவிகள் உண்டாகும்.

**கல்வி:** ஆரம்பகல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆனால் கல்வி தொடர்பாக அதிக பணவிரையங்கள் ஏற்படும். வாகனங்களில் ஏறி செல்லும் பொழுது கவனமாக செயல்பட வேண்டும். கையில் உள்ள பொருள்களை தவறவிட வாய்ப்பு உள்ளது.

**பெண்கள்:** சிலர் பணியின் நிமித்தம் வெளியூர், வெளிநாடு சென்று வர நேரிடும். தடைபட்டு நின்றுபோன திருமண காரியங்கள் மீண்டும் கைகூடும். வக்கீல் மற்றும் மருத்துவர் தொழில் செய்பவர்கள் காரிய சாதனை செய்வார்கள். சிலருக்கு நீண்டநாள் கழித்து அடமானம் போட்டு தங்க நகைகளை மீட்டு எடுத்துக் கொள்வீர்கள். அரசு பணியில் உள்ளவர்கள் இடமாற்றம் அடையலாம்.

**பணவரவு:** விவசாயத்தில் ஓரளவு நல்ல இலாபம் கிடைக்கும். அரிசி வியாபாரம், ஹோட்டல் தொழில், உப்பு ஏற்றுமதி, மீன் கருவாடு விற்பனை, குடிதண்ணீர் வியாபாரம், கடல் தொழிலாளர், பூ வியாபாரம், பழக்கடை, ரைஸ்மில், உணவு பண்டங்கள் தயாரிப்பு, ஜோதிடர் போன்ற தொழில் இலாபம் பெற்றுத் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு:

ஓம் ஸ்ரீம் ஸ்ரீயை நமஹ என்று காலை, மாலை 108 தடவை ஜெபம் செய்து பசுவிற்கு வாழைப்பழம் கொடுத்து வர சகல மேன்மையும் ஏற்படும்.

## விருச்சிகம்

நட்சத்திரம் : விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

எந்த ஒரு செயலையும் சர்வ சாதாரணமாக எளிதில் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ள விருச்சிகம் இராசி நேயர்களே! ஜென்ம சனியால் சிரமப்படும் நீங்கள் குருவின் சிம்ம இராசி மாற்றத்தால் மேலும் போராடக்கூடிய சூழல் அதிகரிக்கும். இம்மாதம் சூரி, இராகு, புதன் ஆகிய கிரகங்களின் சஞ்சாரம் ஓரளவு உதவிகளை வெளியில் இருந்து பெற்றுத்தரும். உறவுகளுக்கு இடையே மனவருத்தம். சண்டை சச்சரவு பிரச்சனைகள் ஏற்படக்கூடும். பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக காவல் நிலையம் வரை சென்று வரநேரிடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு சில நேரங்களில் பிரிவுகள் ஏற்படலாம். புதிதாக திருமணம் செய்த தம்பதிகள் தற்சமயம் தனிக்குடித்தனம் போவதை தவிர்க்க வேண்டும். சிலர் வீடு கட்டுவது தொடர்பாக மேலும் கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும். வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக பணம் கொடுக்க நினைப்பவர்கள் யோசித்து செயல்பட வேண்டும்.

**கல்வி:** கல்வி பயிலும் சிறு குழந்தைகளின் கல்வியில் பாதிப்புகள் இல்லை. ஆனால் உடல்நலம் பாதிக்கக்கூடும். உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகள் மிகவும் கவனமாக படிக்க வேண்டும். தேவையற்ற நட்புகள் மூலம் படிப்பில் கவனம் சிதறக்கூடும். பெற்றோர்கள் கவனமாக செயல்பட வேண்டும். சிலர் படிப்பில் தடைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**பெண்கள்:** இம்மாதம் உடல் நலத்தில் மிகவும் கவனம் தேவை. கையில் உள்ள பணத்தை யாரிடமும் கொடுத்து ஏமாற வேண்டாம். தற்சமயம் புதிதாக காதல் விஷயங்களில் தலையீடு செய்ய வேண்டாம். உதவிகள் செய்யப் போக இதனால் வீண் அவமானங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலர் அடமானம் போன தங்கநகைகளை விற்க நேரிடலாம். வட்டித் தொழில், ஏலச்சீட்டு தொழில் செய்பவர் கவனம் தேவை.

**பணவரவு:** விவசாய தொடர்பான தொழிலில் காய்கறி விளைச்சல், சில இலாபங்களைத் தரும். கால்நடை வளர்ப்பு, கால்நடைத் தீவனம் விற்பனை, மருத்துவர்கள், மூலிகை பொருள் விற்பனை, வாகன ஓட்டுனர், சமூக நலப்பணியாளர், எம்.எல்.ஏ., பதவி, எம்.பி. பதவி வகிப்பவர்கள், சாலை பணியாளர், வக்கீல் போன்றவை இலாபம் பெற்றுத் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு:

வீட்டிற்கு அருகில் உள்ள காவல் தெய்வங்கள் கோவில்களுக்கு விளக்கு எரிய எண்ணெய் வாங்கி கொடுக்கலாம். பிரதோஷ வழிபாட்டில் கலந்துக் கொண்டு அன்னதானம் செய்யலாம்.

# தனுசு



நடசத்திரம் : மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

எடுத்தகாரியத்தை வெற்றியுடன் முடிக்க இறுதிவரை போராடும் தனுசு இராசி நேயர்களே! இம்மாதம் புதன் சுக்கிரன், குரு ஆகிய கிரகங்களுடன் குருவின் சிம்மஇராசி மாற்றம் கோச்சார கிரகங்களின் உதவியைப் பெற்று நல்லது நடக்கும். வெளிநாட்டு வேலை தொடர்பாக சில நல்லதகவல்கள் கிடைக்கக் கூடும். வேலைவாய்ப்புகளில் மாற்றம் தேடி அலைபவர்களுக்கு புதிய வாய்ப்புகளை பெற்றுத்தரும். கடன் சுமைகளில் இருந்து படிப்படியாக நிவாரணம் கிடைக்கும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருப்பவர்கள் தற்சமயம், ஒரு முறை நேரில் சந்தித்து பேசினால் மீண்டும் இணையக் கூடும். சொத்துக்களை விற்க முடியாமல் கஷ்டப்படுபவர்களுக்கு நெருக்கடி குறையும். சிலர் வாடகை வீட்டை காலி செய்து வேறு இடம் செல்ல நேரிடும். சகோதரவர்க்கம் இடையே மனஸ்தாபம் ஏற்படும். பெற்றோரர் வகையில் ஆசிர்வாதமும், பணஉதவியும் கிடைக்கக்கூடும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பாக மாணவ, மாணவிகளின் கல்வி தரம் நன்கு உயர்வு அடையும். கல்லூரி மேற்படிப்பில் பொறியியல் துறை மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு நேர்முக தேர்வில் வெற்றிகள் கிடைக்கும். சிலருக்கு புதிதாக வாகன யோகம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பிரிந்த நட்புகள் மீண்டும் இணைய கூடும்.

**பெண்கள்:** இம்மாதம் புகுந்த வீட்டில் மரியாதை அதிகரிக்கும் விவாகரத்து பெற்ற பெண்கள் தற்சமயம் மறுமணம் செய்ய முயற்சி செய்ய காரியம் கைகூடும். அடமானம் போன சில தங்கநகைகளை மீட்டு எடுக்க கூடும். பிறந்த வீட்டில் இருந்து பூர்வ சொத்துக்கள்வழியில் பணவரவுகள் உண்டாகும். கம்ப்யூட்டர் பிரிவு, ஆடிட்டர், வங்கி பணியில் உள்ளவர்கள் லாபம் பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் வரவும் செலவும் சரியாக அமையும். சேல்ஸ்மேன்கள், பிரிண்டிங் பிரஸ், பத்திரிக்கைத் தறை, ஹோட்டல், பழக்கடை, வக்கீல், ஜோதிடர், ஆசிரியர் பணி, ரியல் எஸ்டேட், மரவேலை, கொரியர் சர்வீஸ், பத்திர எழுத்தர், எலக்ட்ரிக்கல் பணி, குடிநீர் வியாபாரம் போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

ஓம் கம் கணபதியே நமக என்று காலை மாலை 108 தடவை ஜெபம் செய்து எறும்பு புற்றுக்கு இனிப்பு வழங்க சகல காரியத்தடைகள் நீங்கும்.

# மகரம்



நடசத்திரம் : உத்திராடம் 2,3,4 பாதம், திருவோணம் அவிட்டம் 1,2 பாதம்

கருமமே கண்ணாயிரம் என்ற சொல்லுக்கு இலக்கணமாக விளங்கக்கூடிய மகரம் இராசி நேயர்களே! உங்களுக்கு இம்மாதம் முற்பகுதியில் புதன், கேது, சனி மற்றும் வக்கிர சுக்கிரன் ஆகிய கிரகங்களினால் அனுகூலமான நன்மைகள் ஏற்படும்,. ஆனால் சிம்ம குருபெயர்ச்சியானது சில பொருளாதார பற்றாக்குறை மற்றும் கோர்ட், கேஸ் வழக்கு மூலம் பண விரையங்களில் உண்டு பண்ணும். வெளியூர் இடமாற்றங்களை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அன்பும் பாசமும் கலந்து காணப்படும். ஆனால் வாழ்க்கைத் துணையின் உடல்நிலையில் மருத்துவசெலவுகள் ஏற்படும். டைவர்ஸ் கேஸ் வழக்கில் தற்சமயம் சாதகமான தீர்ப்புகள் கிடைக்காது. வெளிநாட்டில் தங்கி வேலைசெய்பவர்கள் தங்கள் பணியை நிறைவு செய்து குடும்பத்துடன் வந்து இணைவார்கள். சிலருக்கு வீடு கட்டுவது தொடர்பான கடன் உதவிகள் கிடைக்கும். புதுவாகன யோகம் ஏற்படக்கூடும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பான கல்வியில் மாணவ, மாணவிகளின் கல்வித்தரம் நன்கு உயர்வு அடையும். விளையாட்டுத் துறை சார்ந்த மாணவ, மாணவிகள் மாநிலம் மற்றும் தேசிய அளவில் சாதனை செய்வார்கள். எதிர்பாராத பணஉதவிகள் தேடிவரும். வண்டி வாகனம் ஓட்டி செல்லும் பொழுது கவனம் தேவை.

**பெண்கள்:** உத்தியோகம் போகும் பெண்கள் தற்சமயம் இட மாற்றங்களை செய்ய வேண்டாம். குடும்ப விஷயங்களை சக பணியாளர்களிடம் தெரிவிகக வேண்டாம். சிலருக்கு கண் தொடர்பான சிகிச்சைகள் மேற்கொள்ளக் கூடும். காதல் தொடர்பான விஷயங்களில் கவனமாக செயல்படுவது மிகவும் நல்லது. ஹோட்டல் தொழில், அலங்கார நிபுணர், மெடிக்கல் தொடர்புடைய பணி செய்பவர் மேன்மை பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. வட்டி தொழிலில் கவனமாக செயல்பட வேண்டும். மோட்டார், மெக்கானிக், வாகன ஓட்டுனர், டெய்லர் கடை, உணவு பொருள் தயார் செய்பவர், ரைஸ்மில், ஜவுளிக்கடை, பழக்கடை, பூவியாபாரம், பேராசியர், பாத்திர கடை முதலான தொழில்கள் இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு:**

"ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீஹும் நமஹ" என்று தினசரி 108 தடவை ஜெபம் செய்து பசுவிற்கு பழம் கொடுத்து வர சகல காரிய மேன்மை உண்டாகும்.

# கும்பம்

நட்சத்திரம் : அவிட்டம் 3,4 பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதம்

நினைத்ததை வெற்றிகரமாக முடிக்க இடைவிடாமல் திட்டமிட்டு செயல்படக் கூடிய கும்ப இராசி நேயர்களே! இம்மாதம் புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும். வியாபாரிகளுக்கு பழைய கடன்கள் வசூல் ஆகும். இம்மாதம் செவ்வாய், குரு, சனி, முற்பகுதி சூரியன், பிற்பகுதியில் புதன் ஆகிய கிரகங்களின் அனுகூலமான சஞ்சாரத்தினால் கடன் நெருக்கடிகள் குறையும். வட்டித் தொழில், ஷேர் மார்க்கெட் போன்ற தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்பட வேண்டும். பூர்வீக சொத்துக்கள் தற்சமயம் பாகப்பரிவினை செய்யலாம்.

**குடும்பம்:** கணவன், மனைவி, உறவுகளில் கடுமையான வாக்குவாதம் ஏற்படும். இம்மாதம் சிம்மத்தில் வக்கிரம் பெற்ற சுக்கிரன் இருப்பதால் திருமண காரியங்களை தள்ளிப் போடுவது நல்லது. புதுமணத் தம்பதிகள் தற்சமயம் தனிக்குடித்தனம் போக வேண்டாம். வீட்டில் திருமண வயது உடைய பிள்ளைகள் இருப்பின் அவர்களுக்கு திருமண முயற்சி மேற்கொள்ளலாம். பழைய சொத்துக்களை விற்று புதிய வீடு, மனைகள் வாங்க முடியும். பாரம்பரிய தொழில் செய்யும் குடும்பங்களில் நல்ல இலாபம் கிடைக்கும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் சிறு பிள்ளைகளின் உடல்நிலையில் கவனம் தேவை. அடிக்கடி கண்பார்வை, தொடர்பான சிகிச்சை, மேற்கொள்ள நேரிடும். உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள், கல்வியில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். ஹாஸ்டலில் தங்கி படிக்கும் மாணவ, மாணவிகளிடையே சண்டை சச்சரவு ஏற்பட்டு நட்புகள் பிரிய நேரிடும்.

**பெண்கள்:** பெண்களை பொறுத்தவரையில் இம்மாதம் அடிக்கடி உடல்நலம் பாதிக்கக்கூடும். சற்று வயதானவர்கள் மருத்துவமனைகளில் தங்கி மருத்தும் பார்க்க நேரிடும். பெண்கள் திருமண காரியங்கள் தடைபட்டு நின்று போகக் கூடும். புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் புதிய கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரிடும். விவகாரத்து பெற்ற பெண்கள் மறுமணம் செய்து கொள்வது நன்மை தரும்.

**பணவரவு:** விவசாயத்தில் பொருள் விரையம் ஏற்படும். மேலும் இறைச்சி, மீன் கருவாடு வியாபாரம், தோல் வியாபாரம், விறகு கடை, ஹோட்டல், டீ கடை, ஜோதிடர், சிற்பிகள், வீடு கட்டும் தொழிலாளர், சலூன் கடை, ஜல்லி,செங்கல், மண் வியாபாரம், மெடிக்கல் ஷாப் போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு:**

தினசரி அரசமரத்து விநாயகரை வணங்கி அருகம்புல் மாலை சாற்றி வழிபாடு செய்து குளத்து மீன்களுக்கு உணவு அளிக்க சகல தடைகள் நீங்கும்.

# மீனம்

நட்சத்திரம் : பூரட்டாதி 4 பாதம் வரை, உத்திரட்டாதி, ரேவதி

இனிமையாக பேசி எளிதில் காரியம் சாதிக்கக்கூடிய மீனம் இராசி நேயர்களே! இம்மாதம் கோட்சாரத்தில் சந்திரனின் சஞ் சாரத்தை தவிர மற்ற கிரகங்களின் அனுகூலம் இல்லை. இம்மாதம் பிற்பகுதியில் சூரியனின் சிம்மராசி மாற்றம் மட்டுமே நன்மை தரும் நிலையில் உள்ளது. எனவே இம்மாதம் எந்த செயலை செய்யும் பொழுதும் யோசித்து நிதானமாக செயல்பட வேண்டும். உங்கள் ஜாதகத்தில் யோகமான திசாபுத்திகள் நடைபெறுமானால் ஓரளவு காரிய வெற்றியை பெறமுடியும். இம்மாதம் குலதெய்வ வழிபாடு மிகவும் அவசியம் ஆகும். வீட்டில் யானை முகம் கொண்ட கணபதி வழிபாடு மற்றும் கணபதி ஹோமம் செய்வது நன்மை தரும்.

**குடும்பம்:** கணவன் மனைவி உறவுகளில் விட்டுக் கொடுத்து அனுசரித்து போவீர்கள். ஆனால் மனைவியின் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. மருத்துவ செலவுகள் மாறி மாறி ஏற்படும். மனதில் ஒரு விதமான பயமும் குழப்பமும் இருந்துக் கொண்டே இருக்கும். கருவுற்ற பெண்கள் நிச்சயமாக ஓய்வு எடுத்துக் கொள்வது நன்மை தரும். வேலைக்குப் போகும் மனைவியை பெற்றவர்கள். பொருளாதார கஷ்டங்களை ஓரளவு சமாளித்துக் கொள்வீர்கள். பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக உடன்பிறப்புகளுடன் கருத்து வேறுபாடு அதிகரிக்கும்.

**கல்வி:** ஆரம்ப கல்விபயிலும் சிறு குழந்தைகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும். ஆனால் உயர்கல்வி படிப்பவர்கள் கவனமாகப் படிக்க வேண்டும். தேவையற்ற நட்புகளால் படிப்பில் கவனம் சிதறக் கூடும். சிலர் மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்று அவமானப்பட நேரிடும். படிப்பில் கவனம் அதிகம் தேவைப்படும்.

**பெண்கள்:** பெண்களை பொறுத்தவரையில் அதிக டென்ஷனை தவிர்க்க வேண்டும். சிலர் உத்தியோகம் செய்யும் இடங்களில் அதிக டென்ஷனான சூழல்களை சந்திக்க நேரிடும். மெடிக்கல் லீவு எடுத்து ஓய்வு எடுப்பது நல்லது. நகைகளை விற்க நேரிடும். அரசு துறையில் பணி செய்பவர்கள் இடமாற்றங்களை அடைய நேரிடும்.

**பணவரவு:** விவசாயத்தில் போட்ட பணங்கள் நஷ்டம் ஏற்படுத்தும். சில்லறை வியாபாரம், தள்ளுவண்டி வியாபாரம்,ஓரளவு இலாபம் தரும். காய்கறி வியாபாரம், ஆசிரியர்பணி, வங்கிப் பணி நீதித்துறையில் பணி செய்பவர், ஜோதிடர், கோவில் குருக்கள், ஸ்டேஷனரி கடை, பூ வியாபாரம், ஸ்வீட்ஸ்டால் போன்றவை ஓரளவு இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு:**


ஓம் பம் பத்திரகாளியை நமஹ என்று கனகாம்பர பூக்கள் கொண்டு வழிபாடு செய்து எலுமிச்சைசாதம் நிவேதம் செய்து அன்னதானம் செய்ய சர்வகாரிய அனுகூலம் ஏற்படும்.

# பிறந்தவர் கோடி மறைந்தவர் கோடி!!
# மக்கள் மனதில் நிற்பவர் யார்?

இது வரை பாலாரிஷ்டம், தீர்க்க ஆயுள் விதிமுறைகளைக் கண்டோம். தெளிந்தோம்!

இனி வரும் கட்டுரைகளில் தீர்க்க ஆயுள் ராஜயோக ஜாதகங்களைக் காண்போம்.

பல திருவருள் சக்தி வாசகர்கள் தொடர்பு கொண்டு தங்களுடைய பிள்ளைகள் ஜாதகங்களில் பாலாரிஷ்டம் உள்ளனவா? தீர்க்க ஆயுள் ஜாதகப் பிரிவைச் சேர்ந்தனவா எனக் கேட்டுத் தெளிந்தார்கள். அவர்களில் பலர், தாங்கள் பரிகாரம் என்கிற போர்வையில் ஏமாந்த விஷயத்தையும்



கண்ணீர் மல்க தெரிவித்தார்கள். என்னை வாயார, மனமார வாழ்த்தினார்கள்.

இந்தத் தொடருக்கு களம் அமைத்துக் கொடுத்த அப்ஸரா குழுமத்தின் அதிபர் சித்தர் அடிமை ஸ்ரீ.சி. இராஜூ அவர்களுக்கே வாசர்களின் வாழ்த்துகளும், வயதான வாசகர்களின் நல்லாசியும் போய்ச் சேரும். நாங்களும் நீண்ட ஆயுளுடன் வாழ வாசகர்களின் ஏகோபித்த வாழ்த்துகள் வழிவகை செய்ய இறைவனை இறைஞ்சுகிறேன். கோடி நன்றி!

ஜோதிட முன்னோடி முனிவர்கள் பதினெட்டு மஹரிஷிகளில் ஒருவர். 60 வருடங்களில் ஒன்றாக ஆங்கிரஸ வருடம் இவரது பெயரால் வழங்கி வருகிறது. ஆங்கிரஸ முனிவர் என்றாலும் பிரகஸ்பதி என்றாலும் இருவரும் ஒருவரே என்பது போல கோவிந்த தெய்வஞ்ன எழுதியுள்ளார். “பிரகஸ்பத்ய சம்ஹிதா” இவரால் இயற்றப்பட்டது என்று கோவிந்த தெய்வஞ்ஞர் துணிகிறார். வேறு சிலர் பிரகஸ்பதி என்பது பிரம்மாவின் மானசீகப் புத்திரன். ஆங்கிரஸ முனிவருக்கும் சித்ரா தேவியாருக்கும் பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர் என்கிறார்கள். சுபக்கோள் குருவை முன்னிலைப்படுத்த பிரகஸ்பதி என்பதே சரியானது. ஆங்கிரஸ முனிவர் இந்த ஜாதகப்படி ரோஹினி நட்சத்திரத்தில் பிறந்துள்ளார். ஆக பிரகஸ்பதி ஆங்கிரஸ முனிவரின் மகனார் என்பதும் வியாழன் அல்லது குரு கிரகத்தைக் குறிக்கும் போது பிரகஸ்பதி மற்றும் ஆங்கிரஸ முனிவரை நினைவு கூர்வதாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும். குருவை குறிக்க ஆங்கிரஸ மஹரிஷி, பிரகஸ்பதியின் பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆங்கிரஸ மஹரிஷியின் ஜாதகம் இங்கே உள்ளது. இவர்கள் ஜாதகத்தை வைத்து பராசரர், மந்ரேஸ்வரரின் ஆயுள் சோதனையை மேற்கொள்வோம்.



10


ஜோதிடத் தென்றல்

**எஸ். அன்பழகன்** B.Sc.,D.A. M.A.,

அலை பேசி: 94431 09267


| | | |
|---|---|---|
| ஜென்ம லக்னம் | : | கும்பம் |
| ஜென்ம ராசி | : | ரிஷபம் |
| ஜென்ம நட்சத்திரம் | : | ரோஹினி |

ஆயுள் சோதனை:

1.1 பராசரர் முறைசரை1: லக்னாதிபதி,அஷ்டமாதிபதி ஜோடி:

லக்னாதிபதி சனி ஸ்திர ராசியான விருச்சிகத்தில். அஷ்டமாதிபதி புதன் ஸ்திர ராசியான ரிஷபத்தில். ஸ்திரம்-ஸ்திரம் என்றாவதால் சொற்ப ஆயுள் (1)

1.2 பராசரர் முறைசரை2: சனி-சந்திரன் ஜோடி: சனி ஸ்திர ராசியான விருச்சிகத்தில் நிற்கிறது. சந்திரன் ஸ்திர ராசியான ரிஷபத்தில் ஸ்திர-ஸ்திர ராசிகளில் நிற்பதால் சொற்ப ஆயுள் (2)

2.1. மந்ரேஸ்வர் வழிமுறை1: லக்னாதிபதி, சுபர்கள் அணி:

| | | | |
|---|---|---|---|
| லக்னாதிபதி சனி | : | 10-ல் | கேந்திரம் |
| சந்திரன் | : | 4-ல் | கேந்திரம் |
| குரு | : | 11-ல் | பணபரம் |
| புதன் | : | 4-ல் | கேந்திரம் |

3 கிரகங்கள் கேந்திரத்தில் நிற்பதால் தீர்க்க ஆயுள் (1)

2.2.மந்ரேஸ்வரர் வழிமுறை-2: அசுபர்கள், பாக்கியாதிபதி கூட்டணி:

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | : | 4-ல் | கேந்திரம் |
| செவ்வாய் | : | 4-ல் | கேந்திரம் |
| சனி | : | 10-ல் | கேந்திரம் |
| பாக்யாதிபதி சுக்கிரன் | : | 4-ல் | கேந்திரம் |

அசுபர்கள் பாக்கியாதிபதி யாவரும் கேந்திரத்தில் நிற்பதால் சொற்ப ஆயுள் (3)

2.3.1. மந்ரேஸ்வர் வழிமுறை----3:

சந்திரன் நின்ற ராசிநாதன்,சந்திரனுக்கு அஷ்டமாதிபதி அணி:.

| | | |
|---|---|---|
| சந்திரன் நின்ற ராசிநாதன் | : | சுக்கிரன் |
| சந்திரனுக்கு அஷ்டமாதிபதி | : | குரு |

இருவரும் பகையானதால் சொற்ப ஆயுள் (4)

2.3.2.மந்ரேஸ்வர் வழிமுறை----3: ஜென்ம லக்னாதிபதி, அஷ்டமாதிபதி அணி:

ஜென்ம லக்னாதிபதி சனி
அஷ்டமாதிபதி புதன்
இருவரும் நட்பானதால் தீர்க்க ஆயுள் (3)

2.3.3. மந்ரேஸ்வர் வழிமுறை----3: ஜென்ம லக்னாதிபதி, சூரியன் ஜோடி:
ஜென்ம லக்னாதிபதி சனி
சூரியன்-சனி பகையானதால் சொற்ப ஆயுள் (5)

ஏழு சோதனைகளில் 5-ல் சொற்ப ஆயுள், 2-ல் தீர்க்க ஆயுள் என்றாவதால் மஹரிஷிக்கு மத்தி ஆயுள் என்று தாராளமாகக் கணிக்கலாம். பரிபூரண ஆயுள் தரும் யோகங்களை ஆராயலாமா?

### பரிபூரண ஆயுள் யோகங்கள்:

- (4) ஜென்ம லக்னாதிபதி கேந்திரத்தில் நின்று (1, 4, 7, 10) குரு சுக்கிரனுடன் சேர்ந்தால் அல்லது இந்தக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகருக்கு தீர்க்க ஆயுள் (பிருகத் பராசரா ஹோரா சாஸ்த்ரம், ஜாதக பாரிஜாதம்).
- ஜென்ம லக்னாதிபதி சனி கேந்திரத்தில் நிற்கிறது. சந்திரன், சுக்கிரன், புதன் ஆகிய 3 சுபர்கள் லக்னாதிபதியை பார்வையிடுகின்றன. ஆயுள் காரகன் சனியே லக்னாதிபதி. ஆத்மக்காரகன் சூரியன் சரீரக்காரகன் உச்ச சந்திரனுடன் நிற்கிறது. சந்திரன் நின்ற ராசிநாதன், லக்னாதிபதி நின்ற ராசிநாதன் லக்னாதிபதியை பார்ப்பது வெகு விசேஷம்.
- (5) ஜென்ம லக்னாதிபதி அல்லது அஷ்டமாதிபதி இந்த இரண்டில் எது சக்திசாலியாகி கேந்திரத்தில் நின்றால் அந்த ஜாதகருக்கு தீர்க்க ஆயுள் (பிருகத் பராசரா ஹோரா சாஸ்த்ரம், ஜாதக பாரிஜாதம்).
- ஜென்ம லக்னாதிபதி சனி பலமாக தஸம கேந்திரத்தில் சுபர்கள் பார்வை.
- அஷ்டமாதிபதி புதன் லக்னாதிபதியைவிட சக்திசாலியாகி 4-ம் கேந்திரத்தில் 4-ம் அதிபனுடன் சேர்ந்து நிற்கிறது.
- (41) ரிஷப லக்னத்தில் சந்திரன் மற்ற சுபர்கள் சொந்த ராசியில் நின்றால் தீர்க்க ஆயுள்.(ஜாதக அலங்காரம்).
- ஜென்ம ராசி ரிஷபமாகி அதில் சந்திரன் உச்சம், சுக்கிரன் ஆட்சி, புதன் ரிஷபத்தில் குரு தனுசில் ஆட்சி. மஹரிஷிக்கு தீர்க்க ஆயுள் என்றாகிறது.
- (78) சனி கேந்திரத்தில் நிற்க சந்திரன் சுக்ரனுடன் சேர்ந்து எங்கு நின்றாலும் தீர்க்க ஆயுள்.
- மஹரிஷி ஜாதகத்தில் சனி லக்னாதிபதியாகி 10-ம் கேந்திரத்தில் நிற்கிறது.
- சந்திரன் உச்சமாகி சுக்கிரன் ஆட்சியாகி இருவரும் 4-ம் கேந்திரத்தில் நிற்கின்றன.




**வெள்ளை தழும்புகள்**

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி தோலின் அசல் நிறத்தை அடைந்து விடுகிறது. ஆயிரக்கணக்காணோர் பயனடைந்துள்ளனர். நீங்களும் நோயின் முழு விவரத்தையும் எழுதி ஒரு முறை அவசியம் பரிச்சித்து பார்க்கவும். மருந்து விலை ரூ.510/- பெற விரும்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**ரகசிய நோய் மருந்து**

எமது மருந்து உபயோகித்தால் நித்திரையில் ஸ்கலிதம், சிறு நீர். மலம் கழிப்பதற்கு முன். பின் சக்தி வீணாதல், சிறுநீர் சம்பந்த நோய், சீக்கிர ஸ்கலனம், உயிர் அணு குறை. கனோரிய ஸிபிலிஸ் போன்ற நோய் அடியோடு அழிக்கப்பட்டு நிரந்தரமாக குணமாகிவிடும். உடலில் ஒப்பற்ற சக்தி ஓட்டம் பெற்று பாலுணர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். ஆயிரக்கணக்கானோர் பயனடைந்ததாகும். பெற விரும்புவோர் நோய் விவரம் வயதுடன் எழுதவும்.

**மருந்து ஒரு கோர்ஸ் விலை ரூ. 625/—** **முழு கோர்ஸ் ரூ. 900/—**

**ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் - புத்தம் புதிய கண்டுபிடிப்பு**

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை. மெலிவு. வளைவு. முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடும் நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**VAIDYAR N.RAMESH NAIDU**
**PAKKAM DHARNAMPET-GUDIYATHAM, (VELLORE) 632601.**
**CELL-9865415652, 9994486669**

பகுதி-2

# யோகங்கள் தரும் ஸ்ரீ 64 யோகினிகள் 3D யந்திரம்




ஜனார்தன குப்தா
எனர்ஜி கன்சல்டன்ட், கிரிஸ்டல் மாஸ்டர்
செல்: 98422 40274, 97897 78833


சென்ற இதழில் இக்கட்டுரையின் முதல் பகுதியில் முன்னுரையாக இந்த ஆகர்ஷண விருத்தி மற்றும் வசீகரன விருத்தியை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீ 64 யோகினிகளின் 3D யந்திரத்தின் முக்கியத்துவத்தையும், ஸ்ரீ மகாலக்ஷ்மி சுயம்புவாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபரணி மரத்தின் புனிதத்தையும் பார்த்தோம். இப்பொழுது இந்த முப்பரிமான யந்திரத்தின் முழுமையான பயன்களை விரிவாகப் காண்போம்.

I. குடும்ப நல்லிணக்கம், மகிழ்ச்சி

1. வசீகரத்தன்மையை பெருக்கி மற்றவர்களை கவரும் ஆற்றல்.

2. நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள், மேல்அதிகாரிகள், முதலாளி, நமக்கு கீழே பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோரிடம் சுமுகமான உறவுகள்.

3. தொழிலில் வாடிக்கையாளர்களிடமும், பணிபுரிவோரிடமும் பரஸ்பர உறவு.

4. அரசாங்கம், அரசு சார்ந்த துறைகள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் உயர் பதவிகளில் பணிபுரியும் நிர்வாகிகளின் ஆதரவு, சகாயம்.

5. மற்றவர்களை ஈர்த்து, அவர்கள் மனதை கவர்ந்து, நன்மதிப்பை பெற்று, காரியத்தை சாதிக்கும் தன்மை.

6. செல்வாக்குள்ள தொடர்புகள், அரிய நலம் விரும்பிகள், அனுபவம் மிக்க வழிகாட்டிகள், உயர்தள மேன்மக்கள் ஆகியோரின் ஆதரவு.

7. எதிர் பாலினத்தின் கவனத்தை ஈர்க்கும் வசீகரனத் தன்மை (தேவைப்பட்டால்).


8. உள்ளம் கவர்ந்தவர்களை ஈர்க்கும் வசீகரத்தன்மை.

9. அன்பிற்கு உரியவர்களை நன்மைக்காக, நல்ல வாழ்க்கைக்காக, நல்ல நோக்கத்துடன் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர (தீய நோக்கத்திற்கோ, தீய எண்ணங்களுக்கோ இந்த 64 யோகினிகள் 3னு யந்திரம் என்றும் துணைபுரியாது - அவ்வாறே சம்முககரணம் செய்யப்பட்டுள்ளது).

10. பிரிந்த குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள் - ஆகியோரை மீண்டும் இணைக்க (தேவையிருப்பின்).

11. காணாமல் போன முக்கிய நபரின் விபரங்களை அறிந்து, கண்டுப்பிடிக்க (தேவைப்பட்டால்).

12. சமுதாயத்தில் பெயர், புகழ், கௌரவம், அங்கீகாரம், அந்தஸ்து பெற.



12" ஸ்ரீபரணி ஸ்ரீ மஹா 64 யோகினிகள் 3D யந்திரம்

13. நியாயமற்ற, முறைகேடான காதல் வசியங்களை முறியடிக்க.

14. பிரிந்து சென்ற கணவன் மனைவியை சேர்க்க, இழந்த அன்பை மீண்டும் பெற.

15. எண்ணம், மனம், விருப்பத்திற்கு ஏற்ற வாழ்க்கை துணை, திருமணம் நடக்க.

16. தடங்கல்களை தாண்டி சரியான வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்க.

17. சரியான வயதில், முறையான திருமணம் நடக்க, திருமண தாமதம் விலக.

18. கணவன் மனைவி இடையே கருத்துவேறுபாடுகளும், மன வேற்றுமைகளும் நீங்க.

19. தம்பதிகளிடையே அன்பு, பாசம், அரவணைப்பு, நல்லிணக்கம் பெருக.

20. வேற்றுமையால் பிரிந்த கணவன், மனைவி சமரசத்துடன் பிணைய.

21. அளவில்லா அன்பு, ஆழமான காதல், மற்றும் ஆரோக்கியமான பாலியல் இன்பம்.

22. நீடித்த, நிரந்தரமான நல்லிணக்க தாம்பத்ய வாழ்வு.

23. பிறர் உடைக்க முடியாத பாதுகாப்பான திருமண வாழ்க்கை.

24. இல்லற வாழ்க்கையில் துரோகம் நிகழாமல் தடுக்க.

25. தாம்பத்ய வாழ்க்கையில் மூன்றாவது நபரின் தலையீடு, முக்கோண காதல், தகாத உறவுகள் ஆகியவை நிகழாமல் தடுக்க.

26. குழந்தையில்லா தம்பதிக்கு சந்ததி அதிர்ஷ்டம், கருவுறும் பாக்கியம், வம்ச வளர்ச்சி.

27. கர்ப்பகாலத்தில் கருக்கலைப்பு, கருச்சிதைவு ஆகாமல் இருக்க.

28. குழந்தை பாதுகாப்பான முறையில் பிறக்க.

29. குலதெய்வம், இஷ்ட தெய்வம், காவல் தெய்வம் ப்ரீத்தியடைந்து முழுமையாக அருளும் ஆசீர்வாதமும் புரிய.

30. குடும்பத்தில் பெண்களின் சக்தி அதிகரித்து, பெண்கள் ஆட்சியும் ஆதிக்கமும் செலுத்த (தேவைப்பட்டால்).

31. பெண்(கள்) அடிமைத்தனத்தையும், அடக்குமுறையையும் உடைத்து நியாயமும், விடுதலையும் பெற.

## II. சிக்கல்கள், பிரச்சனைகள், சண்டைகளுக்கு தீர்வு மற்றும் பாதுகாப்பு

32. ஜாதக ரீதியான தோஷங்கள் மற்றும் சாபங்களிலிருந்து பாதுகாப்பு.

33. ஜாதகத்தில் உள்ள துர்கிரகங்களின் தீய விளைவுகளை குறைக்க.

34. ஜாதகத்தில் உள்ள அனைத்து கிரகங்களையும் சாந்தப்படுத்த - நவக்கிரக ப்ரீத்தி.

35. கண் திருஷ்டி, திருஷ்டி தோஷம் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு.

36. ஆபத்து, விபத்து, எதிரி, போட்டியாளர், அலுவலக அரசியல், துரோகி, புறமுதுகு குத்துதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு.

37. நியாயமற்ற வகையில், தீய நோக்கத்துடன் செய்யப்பட்ட வசியக்கட்டை உடைக்க.

38. பில்லி, சூனியம், ஏவல் போன்ற தீய சக்திகளை உடைக்க.

39. வசியக்கட்டு, சூனியக்கட்டு, மந்திரக் கட்டு, மாந்ரீகக் கட்டு, மாயக் கட்டு ஆகியவற்றை உடைக்க.

40. எதிர்காலத்தில் இவற்றால் கட்டுப்படாமல் இருக்க.

41. தீங்கிழைக்கும் உயிரினங்கள், கருப்பு உருவங்கள், துர் ஆன்மாக்கள், பேய்கள், பிசாசுகள், நிலைகலைந்த ஆவிகள், இருள் சக்திகள், காட்டேறிகள், ஒட்டுண்ணிகள், ஜின் - ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு.

42. விபத்துகளை தவிர்த்து, பயணங்களின் போது பாதுகாப்பு.

43. சட்ட வழக்குகளில் வெற்றி, சர்ச்சைகளில் நியாயம் கிடைக்க.

44. போட்டியாளர்கள் உங்கள் தொழிலை கவிழ்க்கவோ, சூழ்ச்சிகள் செய்து நியாயமற்ற வகையில் கைப்பற்றுவதையோ தவிர்க்க.

45. வதந்திகள், கிசுகிசுக்கள், நியாயமற்ற குற்றச்சாட்டுகள், பழிச்சொற்கள், அவதூறுகள் ஆகியவற்றின் வீரியத்தை குறைக்க.

46. தாமதங்கள், தடைகள் ஆகியவற்றை தாண்டி வர.

## III. பொருளாதார வளர்ச்சி, செல்வச் செழுமை

ஸ்ரீ 64 யோகினிகள் முப்பரிமான யந்திரம் பொருளாதார நிலையை மேம்படுத்தும் தன்மையை இயற்கையாகவே கொண்டிருப்பதோடு, அது மகாலக்ஷ்மி சுயம்புவாக எழுந்தருளியிருக்கும் புனித ஸ்ரீபரணி மரத்தால் படைக்கப்பட்டுள்ளதால் செல்வம் தரும் உயிர் சக்திகளின் வீரியத்தை பலமடங்கு அதிகமாக கொண்டுள்ளது.

47. பணப்புழக்கம், அதிக லாபம், செல்வச்செழுமை.

48. வசூல் ஆகாத, நிலுவையில் உள்ள பணத்தை வசூலிக்க மற்றும் கடன்களை கட்டி முடிக்க.

49. லாபங்கள் குறைவதை தடுக்க, பணவிரயத்தை தவிர்க்க.

50. வீண் செலவுகளை குறைக்க, சேமிப்புகளை அதிகரிக்க.

51. வளமையான ஐஸ்வர்யம், ஆபரணங்கள், நகைகள், புதிய சொத்துகள்.

52. கைவிட்டுச் சென்ற சொத்து, இழந்த செல்வம் ஆகியவற்றை மீட்க.

53. இழந்த உடமைகளையும், தவறவிட்ட பொருட்களையும் மீட்க.

54. சர்ச்சைக்குரிய சொத்தை வெல்ல.

55. பரம்பரை சொத்து மற்றும் கூட்டு குடும்பத் தொழிலை சுமூகமாக அடைய.

56. இழந்த பழைய வாடிக்கையாளர்கள், தொடர்புகள் மற்றும் நண்பர்களை மீண்டும் பெற.

## IV. இயல்கடந்த நுண் ஆராய்வு சார்ந்த பண்புகள் (Metaphysical Aspects)

64 நுண் கலைகளையும், 64 தாந்ரீக கலைகளையும் முறையாக பயிலவும், பயிற்சி செய்யவும் ஸ்ரீ 64 யோகினிகளின் (சௌசத் பைரவிகள், தாகினிகள், சாகினிகள்) முழு அருளும், ஆசீர்வாதமும் அவசியம் தேவை. இன்றும் சௌசத் யோகினிகளின் திருக்கோவில்களில் மிக இரகசிய மந்திரங்களும், கிரஹிப்பு முறைகளும், ப்ரயோக நுட்பங்களும் முறையான தீக்ஷைகளுடன் - தேர்ந்தெடுக்கப்பட்ட வெகு சிலருக்கு மட்டும் நுண் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட மிக சக்திவாய்ந்த முறைகளை பயிலாதவர்கள் கூட ஸ்ரீ சௌசத் யோகினிகளின் இந்த (முறைப்படி உயிரோட்டம் தந்து இயக்குவிக்கப்பட்டுள்ள) ஸ்ரீபரணி 3னு யந்திரத்தின் மூலம் நற்பலன்களை பெறலாம். குறிப்பாக, ஜோதிடர்கள், எண்கணித நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள், வாஸ்து பண்டிதர்கள், சீன வாஸ்து வல்லுனர்கள், ரெய்கி - ப்ராணிக் சிகிச்சையாளர்கள், ஏஞ்சல் தெரபி வல்லுனர்கள், விக்கா பயிற்சியாளர்கள், டேரட் ஆரூட கார்டு பயிற்சியாளர்கள், ப்ரசன்ன ஜோதிடர்கள், ரூன் ஸ்டோன் பயிற்சியாளர்கள், சீன ஐ-சிங் பயிற்சியாளர்கள், தியான மற்றும் யோகா ஆசிரியர்கள், அக்குப்ரஷர் மற்றும் அக்குபங்ச்சர் வல்லுனர்கள், ஊசற் குண்டு பயிற்சியாளர்கள், மாந்ரீக - தாந்ரீக வல்லுனர்கள், அமானுஷ்ய சக்தியாளர்கள், ஆவியுலக இடையீட்டாளர்கள், அருள்வாக்கு கூறுபவர்கள், கோயில் பூசாரிகள், ஆன்மீக ஆசான்கள், ஆகியோருக்கு பல விதங்களில் பயன்களும், பலன்களும் தரும் சிறப்பான யந்திரமாகும்.

57. உயர்நிலை தியானம் மற்றும் யோகா அனுபவங்களை பெற.

58. தெய்வீக சிகிச்சை தரவல்ல (Divine Healing Energy) உயிர் சக்திகளை பெற, தர.

59. அஷ்டமாச் சித்திகளை சரியான குருவிடம் கற்று, பயிற்சி செய்ய.

60. ஆயகலைகள் 64-ஐயும் சரியான முறையில் கற்று, நல்ல முறையில் பயன்படுத்த.

61. 64 தாந்ரீக கலைகளை கற்று, தேர்ச்சி பெற்று, பாதுகாப்பான முறையில் ப்ரயோகம் செய்ய.

62. சோம சக்கரம் மூலம் பாதுகாப்பான வகையில் சூக்ஷ்ம திருஷ்டியின் (Clairvoyance) வீரியத்தை அதிகரித்து, அதை நல்ல முறையில் கையாள.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த தெய்வீக கலைகளை முழுமையாக கற்று, திறம்பட மற்றும் பாதுகாப்பான முறைகளில் பயிற்சி செய்து, அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியையும், செல்வச் செழிப்பையும் அடைய உதவும் தெய்வீக சக்திகள் மிகுந்த யந்திரமே இந்த ஸ்ரீ 64 யோகினிகள் முப்பரிமான யந்திரம்.

இந்த 3D யந்திரத்தை முறைப்படி தீக்ஷை பெற்றவரிடம் உங்களுக்காக அல்லது உங்கள் குடும்பத்திற்காக (பெயர், பிறந்த தேதி, பிறந்த நேரம்) சம்முக கரணம் செய்து வாங்கி கொண்டால் நித்ய பூஜையோ, ப்ரத்யோக மந்திர உச்சாடனங்களோ, தனி ஜப வழிபாடுகளோ எதுவும் செய்யாமலேயே முழுமையான பலன்களை பெறலாம். அதுமட்டுமல்லாமல் அவ்வாறு இயக்குவிக்கப்பட்ட 3D யந்திரம் (2 யந்திர தகடு போல ஓரிராண்டு மட்டுமே செயல்படாமல்) நீண்ட ஆயுளுடன் பற்பல ஆண்டுகள் வீரியத்துடன் செயல்பட்டு நன்மைகளை தந்த வண்ணம் இருக்கும்.

கலியுகத்திற்கு மிக உகந்த, அவசியமான தெய்வீக ஆசீர்வாதம், தெய்வீக வழிகாட்டுதல் மற்றும் தெய்வீக பாதுகாப்பு ஆகிய மூன்றையும் ஒருங்கே குடும்பத்திற்கு தரவல்ல இந்த அற்புதமான ஸ்ரீபரணி ஸ்ரீ சௌசத் யோகினிகள் 3D திருயந்திரம் மூன்று வகைகளில் உள்ளது. வழக்கமான யோகினிகள் யந்திரத்தின் பலன்களை இதுவரை விபரமாக பார்த்தோம். இதைவிட பலமடங்கு வீரியத்தை கொண்ட இன்னொரு வடிவம் ஸ்ரீ 64 மஹா யோகினிகளின் 3 யந்திரம். இது அதிகமான பலன்களை இன்னும் துரிதமாக தரவல்லது. மேலும் ஆ.்.ஞ்னா சக்கரத்தை (Ajna Chakra) முழுமையாக பயன்படுத்தி அதன் மூலம் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்து, அதை திறம்பட செயல்படுத்தி, ஜெயம் பெற்றுத் தரும் திறன்களை ஒருவருக்கு அளித்து, வாழ்க்கையில் வெற்றிப் பாதையில் நடத்திச் செல்லும் தன்மையை கொண்டதாகும். இவ்விரண்டு வடிவங்களை விட அறுபத்தி நான்கு தெய்வீக யோகினிகளின் உச்சக்கட்ட வீரியத்தால் வடிவமைக்கப்பட்டதே ஸ்ரீ சௌசத் இரஹசிய மஹா யோகினிகள் 3 யந்திரமாகும். இந்த 3 வகை யந்திரங்களில் மிக சிறப்பு மற்றும் சக்திவாய்ந்தது இந்த இரஹசிய மஹா யோகினிகள் யந்திரமே. இது ஒருவருக்கு சாணக்ய தந்திரங்களை அளித்து, அபரிதமான ஐஸ்வர்யத்தை அடையும் வழிகளை வெளிப்படுத்தி, நல்ல ஆரோக்கியத்துடன் சமுதாயத்தின் மேல்தட்டிற்கு அழைத்துச் செல்லும் பெரும் சக்தியை பெற்றது.

கலியுகத்தின் இன்னல்களையும், தடைகளையும், தீய சக்திகளையும் தகர்க்கும் வரப்பிரசாதமே ஸ்ரீபரணி ஸ்ரீ 64 யோகினிகள் முப்பரிமான யந்திரம்.

## முக்கிய குறிப்புகள்

எல்லா பரிகாரப் பொருட்களைப் போன்றே, ஸ்ரீபரணி ஸ்ரீ 64 யோகினிகள் முப்பரிமான யந்திரம் வாங்கும் பொழுதும் அவசியம் (முறைப்படி தீக்ஷை வாங்கியவர்களிடம்) முறைப்படி சுத்திகரணம்; (CLEANSING) செய்து, சக்தியூட்டி (ENERGIZING - ப்ராணப் பிரதிஷ்டை), ப்ரொக்ராமிங் (PROGRAMMING - சம்முக கரணம்) செய்த பின்பே வாங்க வேண்டும். இல்லையென்றால் நற்பலன்கள் கிடைக்காது. அதுமட்டுமல்லாமல், நன்மைக்கு பதில் தீமைகள் விளையவே வாய்ப்புகள் அதிகம். பழம்பெரும் வேதங்கள் நமக்கு அளித்துள்ள பரிகார பொருட்களை பொருத்த வரையில், விலையை விட தரத்திற்கும், தகுதிக்கும், சக்திக்கும் முக்கியத்துவம் தருவதே நலம். ஆதலால், தரமான பரிகார பொருட்களை தேர்ந்தெடுத்து, வளமான வாழ்வு பெற்று, நன்மைகள் பல அடைந்து நலமாக வாழ்வதே நன்று.




# அப்ஸரா நாவல்

## மழை மேக மயில்கள்

நாவலாசிரியர்- **மேகலா சித்ரவேல்**

### பதிப்பாசிரியரின் பரிந்துரை

**திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம் குழுமத்தின்** "அப்ஸரா நாவல்" இதழின் படைப்பான "**மழை மேக மயில்கள்**" நாவலைப் படைத்தவர் திருமதி மேகலா சித்ரவேல் சிறந்த எழுத்தாளர். பல பட்டங்களையும், பரிசுகளையும் பெற்றவர், மேடை பேச்சாளர், கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என வகை வகையான வளமைகள் பல பெற்றவர். வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பங்குப் பெற்று தொய்வில்லா பாராட்டை தொடர் நிலையில் பெற்றவர்.

"**மழை மேக மயில்கள்**" நாவல், காதலர்கள் இரு வீட்டாரின் எதிர்ப்பில் மணம் புரிந்து, பெண் ஒன்று, ஆண் ஒன்று பெற்றெடுத்தும், இருவருக்குள் ஒற்றுமையின்றி பந்தபாசமின்றி, பகட்டான வாழ்வுக்கு இருவரும் மோதிக் கொள்வதற்கு இடையில் மாட்டிக் கொண்ட குழந்தைகளின் போராட்ட வாழ்க்கையை புலப்ப டுத்துவது தான் கதையின் மூலக்கரு. அன்புக்கும் பாசத்திற்கும் ஆட்பட முடியாமல் குழந்தைகள் அல்லல்பட்டு, ஆற்றொனா துயரத்தோடு கைதிகள் போல் வாழ்க்கையைக் கடத்தி, இளம் வயதிலேயே பெற்றோர்களின் அன்பெனும் அரவணைப்பும் இன்றி சூழ்நிலை, சூழ்ச்சி வலையை அறுத்தெறிந்து விடுதலைப் பெற்ற குழந்தைகள் "**மழை மேக மயில்கள்**" தோகை விரித்து பூத்துக் குலுங்கும் பூக்கள் போல் புதுப்பொலிவு பெற்று புது உலகில் புகுகின்றன. இது கதையின் சிறு வெள்ளோட்டம், வாழ்க்கையைப் புரிய வைத்திடும் தேரோட்டம். மற்றவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாதே இது போன்ற போராட்டம்.

இந்த நாவலைப் படித்த வாசகர்கள் எண்ணக் கருத்துக்களை வண்ணமயமாக்கி செல் **93828 66720** என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு திருமதி.மேகலா சித்ரவேல் அவர்களுடன், போராட்ட வாழ்க்கையை சீராட்டாமல், தேரோட்டமான வாழ்க்கைக்கு பாராட்டாக உங்கள் கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளலாம். வாழ்க்கையை வளப்படுத்த மழை மேக மயில்கள் போல் மணம் வீச உங்கள் உள்ளுணர்வின் வெளிப்பாடே அவரை ஊக்கப்படுத்தும், உற்சாகப்படுத்தும். உங்கள் எண்ணங்களே அவருக்கு வண்ண மயில்களாகும். நலன்கள் யாவும் நல்கிடும் நட்பு வட்டம். அதை உருவாக்கி வைத்திட வேண்டும் "அப்ஸரா நாவல்" வாசகர்கள் வட்டம். வாழ்த்துக்கள். மீண்டும் சந்திப்போம்.



உங்கள் அன்புச் சகோதரி

**இராதா இராஜு** ஆசிரியர்




அடுத்த நாவல்

**உங்கள் அருகில் உள்ள கடைக்காரர்களிடம் கேட்டு வாங்குங்கள்**

**மேலும் விவரங்களுக்கு: அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் 18/67, பி.வி. கோயில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை 600 014. Ph: 044-2811 6770 / Cell: 72999 21880**

# இலக்கினப்பலன் வரிசை 9

# இலக்கினத்தில் கிரகங்கள் நின்ற பலன் - 'தனுசு'

தெய்வத்திரு
ஜோதிட ரத்னா, அருள் ஞான ஜோதிடர்
**பி. இராமசாமி**



**ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும் – குறள்**

*முன் ஜென்ம கரும வினை என்று சொல்லும். ஊழ்வினையை விட அதிக வலிமையுள்ளவை வேறு ஏதாவது உண்டா? என்றால் எதுவும் இல்லையாம் ஊழ்வினையை போக்கும் பொருட்டு அதைவெல்வதற்கு மாற்று வழியை மேற்கொண்டாலும், அங்கும் அந்த ஊழ்வினையே முன் வந்து நிற்குமாம்*

**ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும்**
**அன்றி அது வரினும் வந்தெய்தும் – ஒன்றை**
**நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்**
**என்னையாளும் ஈசன் செயல்** — *நீதி நூல், ஔவையார்.*

*ஒரு பொருளை அடைய நினைத்தால், அதற்குப் பதிலாக வேறு ஒரு பொருள். கிடைத்தாலும் கிடைக்கக் கூடும். அல்லது நினைத்த பொருளே வந்து சேரும். அல்லது ஒன்றை நினையாமல் இருக்கும் போதே அது தானே வந்து நம்முன் நின்றாலும் நிற்கும். இது எல்லாம் வல்ல கடவுளாகிய ஈசனின் செயலாகும் என்பதாம். அதாவது உலகில் எல்லா நிகழ்ச்சிகளும் கடவுளின் கட்டளைப்படியே நடைபெறுகின்றன.*

**கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்**
**அல்லாத மாந்தர்க் கறங் கூற்றம் – மெல்லிய**
**வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம், கூற்றமே**
**இல்லிற்கிசைந் தொழுகாப்பெண்.**
— *நீதி நூல் ஔவையார்.*

*படிக்காத மூடர்களாகிய மக்களுக்கு, படித்து அறிந்தவர்களது நல்ல அறிவுரையானது "எமன்" போன்றதாகும் என்பதாம். படித்து இருந்தும், நீதி, நேர்மை, தரும சிந்தனை இல்லாத மக்களுக்கு நீதி, நேர்மை, தருமங்களின் அதிபதியான, தரும தேவதை எமனாகும் என்பதாம். திடமான உறுதி இல்லாத, மென்மையான வாழை மரத்திற்கு அது பெற்றகாயே, அதனுடைய காயே எமனாகும் என்பதாம்.*

*ஒரு குடும்பத்தில் பெண்ணுக்கான அடக்கம் ஏதும் இல்லாமல் தான் தோன்றியாக அடங்காத பெண்ணே குடும்பத்தின் எமனாவாளாம்.*

**மூடர்களுக்கு அறிஞர்கள் சொல் துன்பத்தைச் செய்யும்.**
**பாவிகளுக்கு தரும தேவதையே துன்பத்தைச் செய்யும்**
**வாழைக்கு அதன் காய்களே அதற்கு துன்பத்தைச் செய்யும்**
**அடங்கி நடக்காத பெண் குடும்பத்திற்கு துன்பம் செய்வாள்**

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறி நின்றார் நீடு வாழ்வார் — குறள்*

*ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர் நிலை பெற்ற நல்ல வாழ்க்கை வாழ்வார் என்பது திருக்குறள் கூறும் நெறியாகும். என்றாலும் இந்த மனக்குதிரையை கட்டுப்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல. இதனால், தான், சித்தர்கள் மனம் என்ற மனதை குரங்கு பாம்பு பேய் என்றெல்லாம் கூறி அதை அடக்குவதற்கு எத்தனையோ வழிமுறைகளை கூறியுள்ளனர். அதில் ஒரு வழி பக்தி கடவுள் பக்தியாகும்.*

*கால புருஷனுடைய ஒன்பதாவது அங்கம் தனுசு இராசி இந்த இராசியில் சூரியன் சஞ் சரிக்கும் காலமே மார்கழி மாதம் என்று கூறுகிறோம். மாதங்களில் நான் மார்கழி என்று பகவான் கூறியுள்ளதால் இந்த மாதத்தை நாம் பக்தி மாதமாக கொண்டாடுகிறோம். தனுசு என்றால் வில் தேவர்களின் குரு, பிரகஸ்பதியான வியாழன் என்கின்ற குருவின் சொந்த ஆட்சி வீடு தனுசு, இது மேஷத்திலிருந்து ஒன்பதாவது இராசியாகும். இந்த இராசியில் கேது சாரம் பெற்றுள்ள பூராடம் நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும், சூரியனின் உத்திராட நட்சத்திரத்தின் முதல் பாதமும் அடங்கியுள்ளன. இந்த இராசியில் எந்த கிரகமும் உச்சம் பெறுவதில்லை. இது ஓர் ஆண் இராசியாகும் உபயஇராசியும் கூட, இந்த*

இராசியின் அதிபதி குருவாகும். இந்த இராசிக்கு பாக்யாதிபதி சூரியனாகவும், ஜீவனாதிபதி புதனாகவும், செவ்வாய் பூர்வ புண்ணிய ஸ்தானதி, விரையாதி பதியாகவும், சுக்கிரன் சத்ரு ஸ்தானாதிபதியாகவும், இலாபாதிபதியாகவும், அமைகின்றனர். புதன் சப்தமாதிபத்தியம் பெற்று கேந்திர தோஷம் அடைவதால், மாரகாதிபத்திய தோஷமும் ஏற்படுகிறது இதேபோல் தனுசுக்கு அதிபதியான குருவுக்கும் கேந்திராதிபத்திய தோஷம் உடையவனாகிறான், இதனால் மீனம், மிதுனம், கன்னி, தனுசு ஆகிய இராசிகளில் குரு இருப்பது சரியல்ல. இவன் தெசையில் பலவித இன்னல்களுக்கு ஆளாக நேரிடுகிறது. தனுசு இராசியில் பால் மண்டலம் என்று சொல்லக்கூடிய (மில்கிவே) நட்சத்திர மண்டலம் இடம் பெற்றுள்ளது. இதில் நெபுலாஸ் என்று சொல்லக்கூடிய ஆவிப் படலங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவைகள் தனுசு இராசியில் உள்ள நட்சத்திர இயக்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன.



ஒரு காலத்தில் தனுசு இராசியிலுள்ள நட்சத்திர கூட்டங்களில் சில சிதறுண்டு அவைகளின் துகள்கள் நீராவியுடன் கூடி வானவெளியிலேயே வட்ட மடித்துக் கொண்டள்ளன. இப்படி ஆவிப்படலங்களின் கூட்டங்கள் தனுசு இராசி மண்டலம் முழுவதும் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட ஆவிப்படலங்களின் ஊடே நட்சத்திர ஒளி புகுந்து பிரதிபலிப்பதால், அந்த தோற்றம் பால் வீதி மண்டலம் என்ற பெயர் பெறலாயிற்று தனுசு இராசியில் சூரியன் சஞ் சரிக்கும் காலம் மார்கழி மாதமாகும். இதை ஒரு பீடை மாதமாகக் கொள்ளப்பட்டு, பூலோக மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி இறைவனைத் துதிக்கின்றனர். தனுசு இராசியை விட்டு சூரியன் மகர இராசிக்கு வந்த அன்றே தைப்பொங்கல் ஏற்படுவதால், அன்றைய தினமே சர்க்கரை பொங்கல் செய்து சூரியனுக்கு அர்ப்பணம் செய்கின்றனர். முன்னுரையை இத்துடன் முடித்துக் கொண்டு முன்னுரை சுவையா அல்லது அறுவையா? இனி தனுசு இராசியில் சூரியன் முதல் இதர கிரகங்கள் என்னென்ன பலன்கள் என்பதைக் கவனிப்போம்.

### தனுசு இராசியில் கிரகங்கள் நின்ற பலன்கள்

**சூரியன்:** இருந்தால் தீவிரமான போக்கு உடையவர், எதிலும் தலைமை ஸ்தானம் பெறுவார்கள். சதா எதிர்ப்புகள் இருந்துக் கொண்டே இருக்கும். ஆனால் இவர்களை அது பாதித்து விடாது. இரமண மகரிஷி, நீரோ மன்னன், நிக்ஸன் இவர்களுக்கு எல்லாம் தனுசில் சூரியன் சஞ்சாரம்.

**சந்திரன்:** இருந்தால் பிரதிபலனைக் கருதாமல் உதவி செய்வார்கள். இவர்களின் மரணத்திற்குப் பின் இவரின் தியாகத்தைப் போற்ற சிலை அமைப்பார்கள். இதற்கு உதாரணமாக செட்டி நாட்டு ராஜாசர்.அண்ணாமலை செட்டியார் அவர்களையும், கவிமணி கதிரேசன் செட்டியார் அவர்களையும் குறிப்பிடலாம்.

**செவ்வாய்:** இருந்தால் கலா இரசனை நிரம்பப் பெற்றவர்கள். சினேகிதர்களுக்கு எல்லாம் தம்மால் இயன்ற உதவியை செய்யக் கூடியவர்கள். இவரை போற்றுவோரும் உண்டு. தூற்றுவோரும் உண்டு, அமெரிக்கா ஜனாதிபதியாக இருந்த நிக்ஸன், டைரக்டர் ஷாந்தாராம் ஆகியவர்களுக்கு தனுசில் சூரியன் சஞ்சாரம்.

**புதன்:** இருந்தால் தத்துவ ஆராய்ச்சி உண்டு, தனக்கென்று ஒரு வாழ்க்கையை வகுத்துக் கொண்டு அதே பாதையில் சென்று பெரிய முன்னேற்றமடைவர். உலக சரித்திரத்தில் இடம் பெறுவார்கள். கல்வியில் பெற்ற பட்டத்திற்கும், அனுபவ நடைமுறைக்கும், நிறைய வேற்றுமைகள் இருக்கும். நீரே மன்னன். அக்பர், இராஜாஜி, போன்றோர் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாகும், வெகு தந்திரமாக காரியங்களைச் சாதிக்கக்கூடியவர்கள்.

**குரு இருந்தால்:** ஆரம்பகால வாழ்க்கையில் பல்வேறு இன்னல்கள் பிற்கால, வாழ்க்கை முடிசூடா மன்னர்கள் என்ற பெயர் பெறுவார்கள். உலகம் பாராட்டும் வகையில் இவர்களுடைய சாதனைகள் இருக்கும். பண்டித நேரு, நிக்ஸன், இட்லர்ட, ராபர்ட் கென்னடி முதலானோருக்கு தனுசில் குரு ஆட்சியாக சஞ்சாரம்,

**சுக்கிரன் இருந்தால்:** எதிலும் அடக்குமுறை, சர்வாதிகாரப்போக்கு இருக்கும். இரும்பை இரும்பால் தான் வெட்ட முடியும். என்ற திடமான கருத்தை கொண்டவர்கள். இவர்களிடம் ஏதாவது ஒரு சிறப்பு அம்சம் இருக்கும். அர்ச்சுனன், ஔரங்கசீப் இப்பிரிவை சேர்ந்தவர்கள்.

**சனி இருந்தால்:** இல்லற வாழ்க்கையை விட துறவரத்தில் அதிக பற்றுதல் இருக்கும், இவர்கள் அமைக்கும் வழிகள், அல்லது நெறிமுறைகள். பிற்கால வளரும் சமுதாயத்திற்கு ஒரு வழி காட்டியாக இருக்கும். காலத்தாலும் அழிக்க முடியாத பேரும் புகழும் இவர்களுக்கு உண்டு. சப்தரிஷிகளில் தலைமை ஸ்தானம் வகிக்கும் வசிஷ்டர். இந்து மத வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்ட ஆதிசங்கரர், கருமாரி தாசர் போன்றோர் இப்பிரிவை சேர்ந்தவர்கள்.

**இராகு இருந்தால்:** கோதண்ட இராகு என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு இராகு தெசையோ அல்லது வேறு எந்த தெசைகளிலும் இராகு புத்தியோ நடைபெறும் காலங்களில் பேரும் புகழும் ஏற்படுகின்றன. சகல விஷயங்களிலும் வலிமை பெற்றவர்களாக திகழ்கின்றனர், இராமபிரான், அருணகிரிநாதர், இந்திராகாந்தி, குருநானக், இரவீந்ததிரநாத் தாகூர், எம்.ஜி.ஆர். இப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.


**கேது இருந்தால்:** உலகம் உள்ள அளவும் இவர்கள் பெயர் நிலைத்து இருக்கும். மதப்பற்றும் நாட்டுப் பற்றும், மிகுந்து இருக்கும், இவர்கள் சேவையும், செயலும், தியாகமும் வரலாற்று சிறப்பு கொண்டவை பண்டிதநேரு, கௌதம புத்தர், சத்ரபதி சிவாஜி, கண்ணதாசன், இட்லர் போன்றோர் இப்பிரிவைச் சேர்ந்தவர்களாகும்.

| | | | |
|---|---|---|---|
| குரு சந் | | சனி | கேது |
| | அருணகிரிநாதர் | | |
| | | | புத |
| ல ராகு | | | சூரி சுக் செவ் |

| | | | |
|---|---|---|---|
| | செவ் | கேது | |
| | விவேகானந்தர் | | |
| சூரி புத சுக் | | | |
| ல | ராகு | குரு | சந் சனி |

தனுசு இலக்கினமாயிருந்தால், நல்ல உழைப்பாளிகள் தத்தம் கொள்கையில் பிடிவாதமுள்ளவர்கள். எதிர்ப்புகள் நிறைய இருக்கும் எனினும் காரியத்தை சாதித்தே தீருவார்கள். விஸ்வாமித்திரர், அருணகிரிநாதர் சுவாமி விவேகானந்தர் முதலியோர் இப்பிரிவை சேர்ந்தவர்கள். தான தருமம் செய்வதில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. ராஜா சர் அண்ணாமலை





செட்டியார் போன்றவர்களுக்கெல்லாம் தனுசு இலக்கினம்

| | | | |
|---|---|---|---|
| | சனி | குரு கேது | செவ் |
| | செட்டிநாட்டு ராஜா | | |
| | | | புத |
| ல சந் | ராகு | சுக் | சூரி |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | விஸ்வாமித்திரன் | | குரு செவ் கேது |
| சனி ராகு | | | புத |
| ல | | சுக் சந் | சூரி |

இராஜாவுக்கு தனுசு லக்கினம், தனுசு இராசி, உலகம், உள்ளவும் பேர் நிலைக்கும்படி தருமஸ்தானபனங்களையும், காலேஜ்களையும் நிறுவிபேரும் புகழும் பெற்றுள்ளார். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இராஜா பிறந்த அதே தேதி அதே வருடம் அதே நேரத்தில் பிறந்தவர் கதிரேசன் செட்டியார். இருவருக்கும் 22 விநாடிகள் தான் வித்தியாசம், இராஜா புவிக்கு அரசன் ஆனார். கதிரேசன் கவிக்கு அரசன் ஆனார். என்னே ஒற்றுமை பாருங்கள். ■

# நோய் தீர்க்க உகந்த நாட்கள்

நோய் காரணமாக அவதிப்படுபவர்கள் அனைவரும் நோய் தீர்ந்து குணமடைய வேண்டும் என்று தான் ஒவ்வொருவரும் கடவுளை வேண்டுவார்கள் அல்லது வைத்தியரிடம் சென்று முறையிடுவார்கள். "விதியால் வந்தது திதியால் தீரும்" என்பது சாஸ்த்திர நியதி. ஒருவருக்கு ஏற்பட்டுள்ள நோய் என்ன என்பதை தெரிந்து, அந்த நோய்க்கு என்று உள்ள, சிறப்பு பெற்ற மருத்துவரிடம் கீழ்க்கண்ட நாட்களில் சந்தித்து மருத்துவம் செய்துக் கொண்டால் நோய் குணமாகும். நோயின் தீவிர பாதிப்பில் இருந்து விடுபட முடியும். இது நீண்ட கால அனுபவ ஆராய்ச்சி மூலமாக கண்டு உணர்ந்த உண்மையாகும்.

நம்பிக்கையோடு முயற்சி செய்துப் பாருங்கள் கைமேல் பலன் காத்திருக்கிறது.

## ஆகஸ்டு 2015 நோய் தீர்க்க உகந்த நாட்கள்

7.8.2015 வெள்ளி மாலை 6.50 வரையில்

22.8.2015 சனி பகல் 12.30 முதல் மறுநாள்

23.8.2015 ஞாயிறு பகல் 1.00 வரையில்

B. இராமசாமி

## அருள்மிகு திருமுருகனின்

# விராட் வடிவ விஸ்வரூப மகா மந்திர விஞ்ஞை



டாக்டர் **ஏ.கே.சந்தன ராஜா,**
ஆர்.ஐ.எம்.பி
மணி மந்திர மருந்து ஆராய்ச்சி மையம்
செல்: 94426 70917

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

அடுத்து வரும் பாடலில், அப்படி பர சொரூப ஞான வடிவமாக உயர்ந்து வளர்ந்து பரவி நின்று முடி நிலையைக் காணப் பிரமன் என்னும் அயன் தேடித் தேடி முடியாது போகவே திரும்பினான். அதுபோல் மால் என்ற விண்டு தனக்கேற்ற நலம் தரும் என்றால் பன்றி, பூமியின் பாதாளம் வரை மண்ணை எடுத்து விலக்கிப் பார்த்து அடியைக் காண முடியால் திரும்பினார். இவ்விருவரும் தலையாக விளங்கும் ஞானம் என்னும் பரசொரூவடிவ நிலை (அருட்பெருஞ் சோதி வடிவம்) காண முடியாமல் திரும்பினார்கள் என்று நாதாந்த குரு நிலைப் பெற்ற அகத்திய பெருமான் தன் காட்சியில் கண்டதையும் அறிந்ததையும தனது மாணவனான புலத்தியனுக்கு கல்வி ஞானம் வழங்கினார்.

மேற்கண்ட அகத்தியரின் செய்தியை மற்றுமொரு சித்தரான மௌனசித்தர் சுத்த ஞானம் என்னும் நூலில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படுகிறது. படித்தறிக.

**சொல்ல வொண்ணா விராட் பிரமவஸ்தாகி**
**சுத்த சின்மயமாகிச் சோதியாக**
**அல்லலிலா அடியாகி நடுவுமாகி**
**அந்தமுமாய் அனாதியுமாய் அகிலமாகி**
**வெல்லுதற்கு மரிதாக விண்ணுமாகி**
**விண்டு வன்னி யப்புவுமாய் விளங்குகின்ற**
**நல்லதொரு மவுன சித்தாய் நாடி நின்ற**
**நாதாந்த மனோன்மணியார் பாதந்தானே – 1**

*மௌன சித்தர் சுத்த ஞானம் — 8*

பரசொரூப வடிவம் வாயால் சொல்லயியலாது. அதன் வடிவம் ஞான சோதி வடிவமாகும். அந்த வடிவம் அடியாகிய காலாகவும், முடியாகிய தலையான ஞானமாகவும், அதன் நடுவாகிய மகார வடிவமாகவும், அந்தமாகி, அனாதியும் ஆகி உலகெலாம் பரவி வளர்ந்து வெல்லயியலாத அரிதாகி, வானாகி, வளியாகி, தீயாகி, நீராகி, பெரும் வடிவாகி நன்மை உண்டாகும் மவுன சித்தாய் நாடிநின்ற நாதாந்த பெரு நிலையான மனோன்மணி தாயின் திருவடியே யாம் என்று ஓதப்படுகிறது.

முப்பத்து முக்கோடி தேவர்களால் காண முடியாத அடிமுடியை நமது சித்தர்கள் மிக எளிதாகக் கண்டு மகிழந்துள்ளார்கள். பரசொரூப வடிவத்தின் அடியைக் கண்டவர்கள் முடியையும் காண்பார்கள்.

கடந்த 180ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து அருட்பெருஞ்சோதி வடிவம் பெற்ற நமது வடலூர் இராமலிங்கப் பெருமான் தலையும், காலையும் இறைவன் தனக்கு காட்டியருளியதாக கூறும் அருட்பா அடிகள் காண்க.

**"சாகாத கல்வியிலே தலைகாட்டி கொடுத்தீர்**
**தடையறிய கால்காட்டி தாம்பெறவும் அளித்தீர்"**


*வடலூர் அடிகளார் அருட்பா*

மனிதன் இறப்பொழிக்கும் கல்வி ஒன்று உண்டு. அந்த சாகாத கல்வியிலே முடியாகிய தலைவான ஞானம் காட்டவும் கொடுத்தாராம். தடையில்லாமல் வழியாகயிருக்கும் கால் காட்டி வள்ளல் பெருமான் பெறவும் அளித்ததாக கூறுகிறார்.

மேலும் வள்ளல் பெருமான் கண்ட அடியான பாதத்தின் பெருமையையும் மேன்மையையும் பற்றி ஓதும் அருட்பா படித்தறிக.

**"ஆடிய பாதம ன்றாடிய பாதம்**
**ஆடிய பாதம் நின்றாடிய பாதம்**
**சாகா வரந் தந்த தாரக பாதம்**
**சச்சி தானந்த சதோதய பாதம்**
**தேகாதி யெல்லாஞ் சிருட்டிக்கும் பாதம்**
**திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம்**
**ஓங்கார பீடத் தொளிர் கின்ற பாதம்**
**ஒன்றா யிரண்டாகி ஓங்கிய பாதம்**
**தூங்காத தூக்கத்தில் தூக்கிய பாதம்**
**துரியத்தில் ஊன்றித் துலங்கிய பாதம்**
**நாரண னாதியர் நாட ரும் பாதம்**
**நான்தவத் தாற்பெற்ற நற்றுணைப் பாதம்**

அருள்மிகு மேதகு முருகன் விராட் வடிவ மகா மந்திர விந்தை




**ஆரண மாகமம் போற்றிய பாதம்**
**ஆசை விட்டார்க்கே அணிமையாம் பாதம்"**

*வடலூர் வள்ளல் அருட்பா*

*பரிபூரணமாம் பேரண்டத்தில் திருவடிகள் நாட்டியம் ஆடியது. சிற்சபையிலும் பொற்சபையான மன்றத்தில் திருவடிகள் கூத்தாடியது.*

*சாகாதவரம் தந்த திருவடிகள் நாட்டியமாடிய மகார பாதம், தாரகம் என்றால் பிரணவம். பிரணவம் என்றால் ஓங்காரமாகும். அதற்கு மகாரம் என்றும் சித்தர்கள் கூறுவார்கள். சத்து + சித்து + ஆனந்தம் அருளிய சதோதய திருவடிகளாம். தேகங்கள் தோன்றச் செய்யும் திருவடியாகவும், ஓங்காரத்தின் மாதங்கள் அகாரம் + உகாரம் + மகாரமாகும். இவைகளும் தோன்றும். மேலும் விந்து நாதம் பாதங்கள் உண்டாகும். ஓங்கார பஞ்சாகரத்தின் பாதத்திலிருந்து சிவாயநம என்ற பஞ்ச அக்கரங்கள் உண்டாகும். அந்த விரிவினால் மனுதேகங்கள் படைக்கும். ஐந்து தொழிலான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆக ஐந்து தொழில்கள் செய்யும். அத்திருவடிகள் ஓங்கார பீடமான மேடையில் சோதிவடிவமாய் சுடர் விட்டு பெருகி வளர்ந்து நின்றாடும் திருவடியாக விளங்கும். அந்த ஓங்காரத்தில் அகார பாதமும், உகார பாதமும் ஆக இரண்டு பாதங்கள் ஆகும். விழிப்புணர்வான நிலையில் மேல் நோக்கி ஆடி நிற்கும் பாதமாகும். துரிய நிலையில் ஓர் கால் ஊன்றி நிற்கும் பாதமாகும். விண்டு முதல் பிறர் விரும்பு பாதமாகும். வள்ளலார் தவப் பேற்றால் பெற்று நல்ல துணையாக வரும் பாதம். வேத ஆகமங்கள் பெருமை மேன்மை போற்றி மகிழும் பாதமாகும். இந்த பாதம் காண விரும்புவோர் ஆசைவிட்டோர்க்கு அருகில் நிகழும் பாதமாகும். வள்ளலார் கண்ட திருவடியை மிக அழகான தமிழில் அருளியது உணரத்தக்கது.*

*திருமூலர் சுத்த நுட்ப ஞானம் என்னும் நூலின் அடிமுடியை பரசொரூப வடிவம் எவ்வாறு கூறுகிறார் என்பதை இனி பார்க்கலாம். பாடல் அறிக.*

**"அடியாகி யண்ரண்டத் தப்பாலாகி**
**அகார மெனு மெழுத்துவே பாதமாகி**
**முடிவுமாகி நடுவாகி மூலந்தன்னில்**
**முப்பொருளுந் தானாகி முதலுமாகிப்**
**படியா மூப்பாற்று படிக்கு மப்பாற்**
**படி கடந்த பரஞ்சோதி பதியுமாகி**
**அடியாகு மூலமதே அகார மாகி**
**அவன வளாய் நின்ற நிலை யதுவதாமே – 1**

**"தெளிவரிய பாதமது அகார மாகி**
**சிற்பரமுந் தற்பரமுந் தானே யாகி**
**அளிவரிய சோதியது தானேயாகி**
**அடி நடுவு முடியாகி யமர்ந்து நின்ற**
**மொழி யரிய முதலாகி மூலமாகி**
**முச்சுடருந் தானாகி முடிந்த சோதி**
**சுழியினிலே முனையாகிக் கோபமாகிச்**
**சொல்லரிய வெழுத்தென்றே தொகுத்துப் பாரீர் – 9"**

*பரசொரூப சோதியான பரம்பொருள் அடியாகி அண்டம் பேரண்டம் ஆக இவைகளுக்கும் அப்பாலாகி அகாரம் என்ற அக்கரமே பாதமாகி முடியாகவும் நடுவாகவும் மூலந்தன்னில் முப்பொருளும் தானாகி முதலுமாகவும் ஏற்றமிகு படியாகவும் முப்பாற்று படிக்கு அப்பாலுமாகி அதனைக் கடந்து நிற்கும் பரஞ்சோதியாகவும், இறையருளாகவும், அடியாகவும், மூலமாகவும், அகாரமாகி அவன் அவளாய் நின்ற நிலையே யதுவே யாகும் என்று ஓதுகிறார்.*

*அடுத்து வரும் பாடலில், பரசொரூப சோதி நிலை அறிந்து தெளிந்ததற்கரிய பாதமாகிய அகாரமானது சிற்பரமாகவும் தற்பரமாகவும் தானே யாகவும் அளந்து பார்க்க இயலாத சோதியானது தானேயாகி அடி நடு முடியாகவும் அமர்ந்து நிற்கும், கூறயியலாத முதன்மையாகவும் மூலமாகவும், முச்சுடரும் தானாகி முடிந்த சோதியின் வளர்ந்து பெருகி நின்ற வடிவம் நாம் காண வேண்டுமென்றால் சுழினையாக நிற்கும் முனை மூக்குக்குள் தீயாகி சொல்லரிய எழுத்து என்று தொகுத்து பாரீர் என்று கூறுகிறார்.*

*தற்பரம் அகாரமாகும். சிற்பரம் உகாரமாகும். மகாரம் மாயையாகும். மூலம் என்று கூறுவது சிகாரமாகும். அந்த சிகாரத்தைப் பற்றி அகத்தியர் அந்தரங்க தீட்சா விதி என்ற நூலில்,*

**தொடரும்...**

**"பேணலே சிகார மென்றால் ஆர்தான் காண்பார்**
**பேரண்ட பூரணமே ஆகும் ஆகும்**
**தோணவே பூரணத்தைக் கண்டுக் கொள்**
**சுகமான சிவசக்தி வாலையோடு**
**பூணவே தான் நிறுத்தி செபித்தால் மைந்த**
**பூரணமாய் காயசித்தி புனிதமாமே" – 227**

*அகத்தியர் அந்தரங்க தீட்சா விதி — 400*

*மூலமென்ற சிகாரம் பேரண்டப்பரி பூரணமாகும். பூரணம் என்பது சிவசக்தி வாலையாகும். இவைகள் இரண்டும் நிறுத்தி செபித்தால் பரி பூரணமாய் காய சித்தி புனிதமடையும் என்பதாம். சிவசக்தியென்ற பூரணம் அடியாகவும், பேரண்டப்பரி பூரணம் என்று கூறப்படும் சிவத்தை முடியாகவும் சித்தர்கள் கூறுவார்கள். இந்த இருவரும் ஏகமாகி பரசொரூப வடிவமாகி நின்று அருள்வதே அடிமுயாகும். பரஞானசோதி சொரூப நிலையும் இதுவே யாகும்.*

*கயிலாய சட்டை முனிநாதர் என்னும் சித்தர் இந்த அடியும் முடியும் ஏன் பெறுவதற்கு பெரும் முயற்சி எடுக்கிறார்கள் என்று கேட்டு, அதற்கு அவரே விடையும் அளிக்கிறார். காண்க.*

**"போத மதி நிறைந்த பூரணமே போதம்**
**புகழுடைய பூரணமே யேகமாகிச்**
**சோதியென நின்ற சிவ சக்தி யாகிச்**
**சொல் நிறைந்த பூவறி நூல் வேதமாகி**
**பேதமில்லா அஞ்சு பஞ்சு பூதமாகிப்**
**பின்னாகி முன்னாகி யெங்குந்தானாய்ப்**
**பாத மடியென்று சொல்லி முடியைதடி தேடிப்**
**பத்துவது பூரணத்தின் பதவி தானே" – 69**

*கயிலாய சட்டை முனிநாதர் தண்டகம் — 50*

*போதம் என்று கூறப்படும் அறிவு நிறைந்த இடம் பூரணமாகும். புகழ்ப்பெற்ற போதம் என்ற ஞானமே பூரணமாகும். அந்த பூரணமே ஏகமாகிச் சொல் நிறைந்த பூவறி நூல் மறையாகி முன் பின்னாகி மாறுபாடுயில்ல பஞ்ச பருப்பொருளாய் நின்று, எங்கும் தானாய்ப் பாதம் என்று கூறப்படும் அடியை கண்டு முடியை தேடி பற்றுவது பூரணம் என்னும் போதமான பரஞான சொரூப சோதி நிலை என்னும் பதவி பெறும் நோக்கமாகும் என்று சித்தர் அவர்கள் ஓதுகிறார்.*

*பாம்பாட்டி சித்தர் அடி முடியும் கண்டதை கூறும் அவரின் பாடலைக் காண்க.*

**"தூக்கி பாதங் கண்டேன் சோதி கண்டேன்**
**சுத்த வெளிக்குள்ளயொரு கூத்தன் கண்டேன்**
**தாக்கிய சிரசின் மேல் வைத்த பாதம்**
**சற்குருவின் பாதமென்றாடாய் பாம்பே" – 82**

*பாம்பாட்டி சித்தரின் பாடல்கள் — 132*

*பரம்பொருளான சற்குருவின் பரசொரூப வடிவான சோதியின் அடிமுடியை முப்பத்து முக்கோடி தேவர்களால் காணாமல் மலைத்து போய்த் திரும்பினார்கள். மால் அயனும் காணாது திரும்பினர். ஆனால் நமது தமிழகச்சித்தர்கள் மிக எளிதாக இறைவனின் விராட் வடிவமான (விஸ்வரூபம்) பரஞான சொரூபச் சோதியின் பெரும் வடிவம் கண்டு பெருமிதமடைந்து பேறு பெற்று மகிழ்ந்ததாக அவர்களின் நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது.*

*இந்த அடிமுடியானது சாகாத கல்வி கற்கும் முறை அறியப்படுகிறது. ஞான தேகம் பெற்று சோதி வடிவம் பெற முடியும் என்பதையும் கற்பிக்கப்படுகிறது. சாகாத வரம் வழங்கக்கூடியது இந்த அடியும் முடியுமாகும்.*

*திருமுருகனின் விராட் வடிவம் அறுகோணம் ஆறுமுகமாகவும், பன்னிரு விழியுமாயும், பன்னிரு கைகளாகவும், சிவசக்தியாகவும் மூன்று சுடராகவும், ஓங்கார வடிவமாகவும், பொருந்தும் பஞ்சாக்கரமும், சடாக்கரமும், உயிர் அக்கரங்களும் வித்துக்களாக பதிக்கப் பெற்றுள்ளது.*

*இந்த விஞ்ஞை வழிபடுவோருக்கு ஆயுள் பலம் உண்டாகும். எண் கருமங்கள் பலன் தரும். எண் சித்திகள் கைக் கூடும். முச்சுடர்கள் யோகமாக நிற்கும். பரசொரூப நிலை உண்டாகும். போதம் பெருகி நிற்கும். மரணம் தவிர்க்கலாம் சாகாக்கல்வி கற்கும் ஆற்றலும் அறிவும் கூடும்.*

**ஓம் ஓம் விராட் வடிவசிவமே போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் முருகா போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் குமார போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் குகா போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் கந்தா போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் சுந்தரா போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் அறுமுக சிவா போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் கருவூர் காங்கேய போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் பரம்பொருளே போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் நாதாந்த கடவுளே போற்றி ஓம் ஓம்**
**ஓம் ஓம் சாந்தி ஓம் சாந்தி போற்றி ஓம் ஓம்**

*மேற்கண்ட திருமுருகனின் விராட் வடிவம் காணும் போது காட்சிக்கு வந்தால் அதனை மௌன தீட்சையே மூலமந்திரமாக சிந்தை செய்தல் வேண்டும். சொல்லற்று சும்மாயிருப்பதே அதன் மூலமாகும். வாய் பேசா மந்திரமே மூல மந்திரமாகும். இறப்பொழுக்கும் பரஞானசொரூபமே ஏகப் பொருளாய் பெருஞ் சோதியாய் ஞானம் என்னும் போதமாய் விளங்குவதே விராட் வடிவமாகும் என்று அறியலாம். இந்த திருமுருகனின் ஞான விராட் வடிவ மந்திர விஞ்ஞை வணங்கி தாமும் சாகாத வரப் பெற்று உய்க.*

# சித்தர்கள் ஜீவ நாடி இரகசியங்கள்
# தீர்க்க தரிசனம் தந்திடும் அதிசயங்கள்

21



● ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
**P.D. ஜெகதீஸ்வரன்**
**செல்: 96596 90395**

கோயம்புத்தூரில் இருந்து அடியவர் ஒருவர் என்னிடம் முருக தீட்சை பெற்று உபாசனை செய்து வருகிறார். அவரது மூத்த மகள் +2 தேர்வு எழுதும் முன்பு வந்து நமது ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவ நாடியைக் கேட்டார். முருகப் பெருமான் பின்வருமாறு உரைத்தார்.


**தேளேறி வந்தவள்**
**திவ்யமாய் வித்தை வரும்**
**மந்தனது சஞ்சாரம்**
**மந்த நிலை தந்தாலும்**
**மயிலேறி வந்து காப்போம்**
**அழுக்கனிடம் சென்று வா**
**அவன் படம் ஒன்றை வீட்டில் வை**
**ஆனித் திங்கள் வரை**
**அவன் உன் வீட்டில் இருந்து**
**அற்புதம் பல புரிந்து**
**அதிசயம் நடக்கக் காண்பாய்**
**ஆசி! ஆசி! ஆசி!**



அழுக்கு சாமியார் என்பவர் பொள்ளாச்சி பகுதிக்கு அருகே இருக்கும் வேட்டைக்காரன்புதூரில் வாழ்ந்த ஒரு சித்தராவார். இவருடைய ஜீவ சமாதியை இப்போது கோவிலாக்கி வழிபடுகின்றனர். இவர் கார்த்திகை மாதம் மிருகசீரிசம் நட்சத்திரத்தில் பிறந்ததாக கூறப்படுகிறது. இவருடைய பிறப்பு, இயற்பெயர், ஊர் ஆகியவைப் பற்றி பக்தர்களுக்குத் தெரியவில்லை. இவர் எப்போது குளிக்கிறார் என்பதை அறியாத மக்கள், இவரை அழுக்குச் சாமியார் என்று அழைக்க அதுவே இவருடைய பெயராக நிலைத்துவிட்டது. இவர் 1918ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மிருகசீரிசம் நட்சத்திரத்தில் வேட்டைக்காரன் புதூரிலேயே ஓரிடத்தினைத் தேர்ந்தெடுத்து ஜீவ சமாதியானார். அவருடைய ஜீவ சமாதி தற்போது அழுக்கு சாமியார் கோவில் அமைந்துள்ளது. அழுக்கு சாமியார் ஜீவ சாமியான கார்த்திகை மாதம் மிருகசீரிசம் நட்சத்திர தினத்தன்று அவருக்கு குரு பூஜை கொண்டாடப்படுகிறது. இந்நாளில் அழுக்கு சாமியாருக்குப் பிடித்த கம்பஞ் கஞ்சியை பக்தர்களுக்குத் தருகிறார்கள். இந்த சித்தரைச் சென்று வழிபட்டு அவரது படத்தை வீட்டில் வைத்துப் பூஜிக்குமாறு முருகப்பெருமான் நாடியில் உரைத்தார்.

இப்படி வந்ததால் மகிழ்ச்சியடைந்த அவர் சுவாமி எனது மகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று அவள் விரும்பும் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் அதுதான் என் பிரார்த்தனை என்று சொல்ல 7½ சனி நடப்பதால் சற்று மதிப்பெண்கள் குறைந்தாலும் முருகன் மயிலேறி வந்து காப்பேன் என்று சொல்வதால் இறுதியில் வெற்றி உனக்கே உண்டு அஞ்சாதே என்று சொல்லி சில வழிபாடுகளும் சொல்லி அனுப்பி வைத்தேன். +2 தேர்வு முடிவுகள் வந்தது. நாடியில் முருகப்பெருமான் உரைத்தது போன்று சற்று மதிப்பெண்கள் குறைந்தே வந்தது 1132 மதிப்பெண்கள் பெற்று இவரது பெண் தேர்ச்சி பெற்றாலும் கட்ஆப் மதிப்பெண்கள் குறைந்து கல்லூரி சேர்க்கைக்கு அலையும்படி நேர்ந்தது. தேர்வு எண், விண்ணப்ப எண், தேதி என அனைத்து எண்களின் கூட்டுத்தொகையும் 8 ஆகவே வந்து 7½ சனி தனது வேலையைக் காட்டிக்கொண்டு இருந்தது. மீண்டும் நாடி கேட்க வந்தவர் வருத்தமாக சுவாமி அவள் விரும்பும் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் அதுதான் என் பிரார்த்தனை என்று சொன்னார். மீண்டும் ஜீவ நாடி படிக்கப்பட்டது. முருகப் பெருமான் பின்வருமாறு உரைத்தார்.

**ஆசிரெனவாதம் உண்டு**
**அவள் விரும்பும் இடமே கிட்டும்**
**அச்சமது கொள்ள வேண்டாம்**
**ஆறுமுகம் காப்பேன்**



உலகம் முழுவதும் உலா வர இருக்கின்றன
விரைவில் எதிர்பாருங்கள்
eBOOK
http:www.apsaraepublications.com

இப்படி வந்த்தும் சுவாமி பல இலட்சங்கள் கட்டி அந்த கல்லூரியில் சேர பலர் காத்துள்ள நிலையில் இது எப்படி சாத்தியம் எனப் புரியவில்லை என்றார். முருகனின் ஆசி இருப்பதால் நீயும் ஒரு விண்ணப்பம் போட்டு வை நிச்சயம் கிடைக்கும் என்றேன். சரி என்று அவர் அரை மனதுடன் விடை பெற்றார். திடீரென ஒரு நாள் போனில் தொடர்புக் கொண்டு சுவாமி முருகன் உரைத்தது போலவே எனது மகளுக்கு அவள் விரும்பிய கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது உங்களுக்கு கோடான கோடி நன்றி என்றார். பல இலட்சங்கள் கட்டி அந்த கல்லூரியில் சேர பலர் காத்துள்ள நிலையிலும் எனது மகளுக்கு எப்படி இடம் கிடைத்தது என்றே பெரிய ஆச்சரியமாக உள்ளது இது நிச்சயம் முருகனின் திருவிளையாடல்தான் என்பது எனக்குப் புரிகிறது. கடைசி காலம் வரை கந்தனுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எனது அவா என்று தெரிவித்தார். அழுக்கு சித்தர் செய்த திருவிளையாடல்களை வேறொரு முறை எழுதுகிறேன்.

இவரைப் போல் இன்னும் ஒருவர் நமது ஞானஸ்கந்தர் ஜீவ நாடி கேட்க வந்தார். அவர் வயிற்றில் வலி ஏற்பட்டுக் கொண்டே இருந்த்தாகக் கூறினார். பூஜை செய்து நாடி படிக்கப்பட்டது. முருகப் பெருமான் அவரது வயிற்றில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை என்றும் அந்த வலிக்கு இவர் முன் ஜென்மத்தில் ஒருவரை கத்தியால் குத்தி வயிற்றில் வேதனையை உண்டாக்கி இருந்ததாகவும் நல்ல வேளையாக அவர் பிழைத்துக் கொண்டதாகவும் ஆனாலும் நீண்ட நாட்கள் மரண வயிற்று வலியை அவர் அனுபவித்து வந்ததாகவும் கூறி அந்த கர்ம வினையைக் கரைக்காமல் நீ வேறு எந்த வைத்தியம் செய்தாலும் பலிதம் ஆகாது என்றும் கூறினார். வந்து நாடி கேட்டவருக்கு ஒரே அதிர்ச்சி. ஐயா இந்த ஜென்மத்தில் நான் யாருக்கும் எந்த விதக் கெடுதலும் செய்ய வில்லை என்றார். அதற்கு முருகப் பெருமான் இந்த ஜென்மத்தில் நீ நல்லவன் என்பது எனக்கும் தெரியும் அதனால்தான் உனக்கு இந்த நாடி மூலம் நான் வாக்குரைக்கிறேன் என்றார். தெய்வமே பேசுகிறது என்று கண்ணீர் மல்கக் கதறி அழுதார். சிறிது நேரம் அழுத பின்பு சுவாமி இதற்குத் தக்கதான ஒரு பரிகாரம் சொல்ல வேண்டும் என்றார். அந்த கர்ம வினையை நீக்கும் பரிகாரம் உரைத்தார் முருகப் பெருமான்.

*யாம் திருத்தணி செல்லும் போது எனது பாதம் பட்ட இடம். யாம் ஜீவ நாடியில் தோன்றி அருள் வாக்கு சொல்லும் அற்புத ஸ்தலம். எனது பாதம் பட்ட இடம் என்று மீனாட்சி நாடியிலும் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஸ்தலத்தில் இரண்டு மூலவர்கள் உண்டு. ஒன்று சுயம்பு வடிவில் உள்ள ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியாகிய யாம் இரண்டாவது ஸ்ரீ பால சுப்ரமண்யர். யாம் அருளாசி செய்யும் இந்த ஆலயத்தில் மூலவர் முன்பு இரண்டு வாகனங்கள் உண்டு. ஒன்று கஜ வாகனம், இரண்டாவது மயில் வாகனம்.இரண்டு பலி பீடங்கள் உண்டு.இரண்டு விநாயகர்கள் உண்டு. ஒன்று வலம்புரி விநாயகர், இரண்டாவது இடம்புரி விநாயகர். எனக்கு முன்பு 18 சித்தர்களைக் குறிக்கும் விதமாக 18 அடி வேல் உள்ளது. இந்த வேலை பிரதிஷ்டை செய்யச் சொன்னது மீனாட்சி தேவி தனது நாடி மூலம் என்பதால் எனது கந்த லோகத்தில் இருந்து ஒரு நேரடியான கதிர்வீச்சு இந்த 18 அடி வேலின் மீது விழுகிறது.போகர் தவம் செய்த இடம். எனது தேவிகளான வள்ளி மற்றும் தெய்வானை பாதம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பெருமைகளை உடைய இந்த ஸ்தலத்தில் நீ வந்து எனது வாக்கை இந்த ஜீவ நாடியில் கேட்பதால் மூன்று மாதம் அமாவாஸை அன்று நடக்கும் பூஜையில் வந்து கலந்துக் கொண்டு ஆலயத்தை 27 முறை சுற்றி வா நிச்சயம் மருந்து மாத்திரை ஏதுமில்லாமல் உனக்கு பூரண குணம் உண்டாகும் என்று முருகப் பெருமான் தனது ஆலயச் சிறப்பை தானே உரைத்து ஆனந்தம் அடையச் செய்தார். அதன் பின்பு மற்றொன்று உரைக்கிறேன் என்று முருகப் பெருமான் உரைத்தார். இந்த ஆலயம் ஞானஸ்கந்தர் ஜீவ நாடி படிக்கும் ஆலயமாகும். அமாவாஸை இரவில் நடக்கும் பூஜையில் மட்டுமே ஆசி பெற முடியும். பணிச்சுமை காரணமாக அதிக அளவில் ஜீவ நாடி தற்சமயம் படிக்கப்படுவதில்லை. முழுமையாக அனைவருக்கும் படிக்கும் காலம் வரும்போது அறிவிப்பு வரும்.*

*ஈரோடு உபவானி அந்தியூர் புதுக்காடு (மந்தை பஸ் ஸ்டாப்)மலைக்காரன் தோட்டம் முருகன் கோவில் (விலாங்குட்டை)*

இந்த முகவரியில் மேற்குத்தொடர்ச்சி மலைச்சாரலில் தோட்டத்தின் நடுவே ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில்தான் ஜீவ நாடி படிக்கப்படுகிறது. முன் அனுமதி தேவை. எங்கு முருகன் நாடியில் தோன்றி வாக்கு உரைக்கிறாரோ அந்த ஆலயத்தையே பரிகாரஸ்தலமாக உரைத்ததால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்த அவர் அதேபோல் செய்து தனது வயிற்று வலியை நீக்கிக் கொண்டார்.இது முருகப் பெருமான் தனது ஜீவ நாடியில் நடத்திய அதிசயம் எனப் பலரால் பேசப்பட்டது எனலாம். இப்படி முருகப் பெருமான் தனது ஜீவ நாடி மூலம் பல திருவிளையாடல்களை நடத்தி வருகிறார்.

மலேசியாவில் இருந்து ஒரு முருக பக்தர் ஜீவ நாடி கேட்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக முயற்சி செய்து வந்தார். ஒரு நாள் பௌர்ணமி அன்று சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஜீவ நாடி படித்த சில நொடிகளிலேயே முருகப் பெருமான் ஒரு மந்திரத்தை அவருக்கு உபதேசம் செய்வதாகவும் அதனால் வந்திருப்பவரிடமே சுவடியைக் காட்டினால் அவரது கண்களுக்கு

எழுத்துக்கள் தெரியும் என்றும் அதையே மந்திரமாக உச்சரித்து வரும்படியும் சொன்னார். அதை அவரிடம் சொன்னவுடம் கண்ணீர் மல்க சுவாமி என்னே நான் செய்த பாக்கியம் என்று சொல்லி சுவடியைப் பார்க்க பொன்னிறமாக 13 எழுத்துக்கள் தோன்றியது. அனைத்தையும் சேர்த்துப் பார்த்தபோது ஒரு மிகப் பெரும் மந்திரம் இருந்தது. அதை அப்படியே எழுதிக் கொண்டார். பின்னர் மீண்டும் ஒருமுறை அவரிடம் சுவடியைக் காட்ட சொன்னார் முருகப் பெருமான். அதே போல் காட்டப்பட்டது. எழுத்துக்கள் ஏதும் அதில் வரவில்லை. இதுதான் ஜீவ நாடி என்றும் தோன்றும் எழுத்துக்கள் மீண்டும் மறைந்து விடும் என்று ஜீவ நாடியின் பெருமைகளை இவருக்குச் சொன்னேன். வந்தவர் ஆச்சரியம் தாங்க முடியாமல் அழுதே விட்டார். மீண்டும் உரைத்தார் முருகப் பெருமான் இந்த மந்திரத்தை திருப்போரூர் சென்று 108 முறை ஜபம் செய்து சிதம்பரம் சுவாமிகளை குருவாகக் கொண்டு ஜபித்து வருமாறு சொன்னார். அதேபோல் இந்த மந்திர ஜபம் தொடங்கிய சில நாட்களிலேயே பல அதிசயங்களை நிகழ்த்துவதாகவும் அதைத் தனியாக எழுதி வைத்து மீண்டும் வரும்போது கொண்டு வரும்படியும் கூறினார். வந்தவர் மிகுந்த மகிழ்ச்சியோடு விடைபெற்றார். மலேசியா சென்ற பின் ஒரு வாரம் கழித்து அவர் மீண்டும் அலைபேசியில் தொடர்பு கொண்டார். முருகப் பெருமான் நாடியில் உரைத்தது போலவே ஜபம் செய்து வருவதாகவும் ஜபம் செய்த அடுத்த நாளே வரவே வராது என்று 8 வருடம் இழுத்தடித்து வந்த 15 இலட்சம் ரூபாய் தொகையை கொடுக்க வேண்டியவரே வீடு தேடி வந்து கொடுத்து விட்டுச் சென்றதாகத் தெரிவித்தார். முருகனிடம் அந்த தொகை வருமா வராதா? எனத் தெரிந்து கொள்ளவே ஜீவ நாடி பார்க்க வந்ததாகவும், அப்படி அந்த தொகை வராவிட்டால் தமது குடும்பமே மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகி விடும் என்றே வந்ததாகவும் தெரிவித்தார். முருகப் பெருமான் மலேசியாவில் இருந்து வந்த எனக்கு வேறு எந்த வாக்கும் உரைக்காமல் வெறும் மந்திரம் மட்டுமே உரைத்தாரே என்று அப்போது நினைத்தேன் அவர் பலன் சொல்ல வில்லை 100% விடை(சொல்யூசன்) கொடுத்துவிட்டார் என்பது இப்போதுதான் புரிகிறது என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். அதே போல் எந்த முருகன் கோவிலிலும் இல்லாத ஒருவித தனி அதிர்வலைகள் இந்த ஞானஸ்கந்த மூர்த்தி இருக்கும் ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமத்தில் இருந்ததாகவும் தெரிவித்தார். அருகில் இருந்தால் அடிக்கடி இங்கு வருவேன் ஆனாலும் வருடம் ஒருமுறையாவது இங்கு வர வேண்டும் என்றும் இனி என் வாழ்வு முழுதும் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியை மறக்காமல் அவருக்கு சேவை செய்யும் பாக்கியம் வேண்டும் அதற்கு ஆசியிடுங்கள் என்று வேண்டிக்கொண்டார். முருகப் பெருமான். இப்படி தினம் தினம் திவ்யமான திருவிளையாடல்கள் பலவற்றை பலருக்கும் ஜீவ நாடி மூலம் நிகழ்த்தி வருகிறார் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி. ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!

(தொடரும்...)




அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

**அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்**

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில். 50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால் குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.



Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

**குடியை நிறுத்த!**

**குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்**

கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.


ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று
**ரூ.5/**

**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**



# ஜாதகப் பலனறிய ஜோதிட விதிகள்

17



சின்னாளப்பட்டி
**ஆர்.தங்கவேலு** D.A., ICAS
**செல்: 99441 28281**

### ஒன்பதாம் பாவகம்

படிக்காத ஒரு கிராம விவசாயிக்கு வெற்றிலைத் தோப்பில் கிடைத்த இலாபமோ, கரும்பு, வாழை, திராட்சை போன்ற விவசாயமோ நல்லபடி கைகொடுத்து சம்பாதிப்பதற்கு அவருக்கு அதிர்ஷ்டம் தர 9ஆம் இடம் சிறப்புப் பெற வேண்டும்.

கல்லூரி விரிவுரையாளராகவோ, நீதிபதியாகவோ அமர்ந்து பலருடைய நன்மதிப்பைப் பெற்றிட 10ஆம் இடம் சிறப்புப்பெற வேண்டும்.

9ஆம் இடத்தை நிர்ணயிக்க 9ஆம் பாவகத்தையும் அதனதிபதியையும் காரகர்களாகிய சூரியனையும் குருவையும் கொண்டு நிர்ணயித்திட வேண்டும்.

9ஆம் அதிபதி 6,8,12இல் அமைவதோ (அ) 6,8,12க்குடையவர்கள் 9இல் அமைவதோ கூடாது.

செவ்வாய் சனி இராகு 9இல் அமைவது நாத்திகத் தன்மை தரும்.

சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், குரு, கேது 9இல் இருப்பது பக்தி தரும்.

9லுள்ள சனி இராகுவை குரு பார்த்தால் தத்துவஞானம் வேதாந்தியாக்கி விடும். நுண்ணறிவு ஏற்படும்.

9ஆம் அதிபதியுடன் இலக்கினாதிபதி சம்பந்தப்பட்டாலும், 9ஆம் அதிபதியும் குருவும் சம்பந்தப்பட்டு இலக்கினத்தில் அமைந்தாலும் மக்கள் செல்வாக்குக் கிடைக்கும். அரசாங்க ஆதரவு கிட்டும்.

9ஆம் அதிபதி இலக்கினத்தில் இருந்து குரு பார்வையைப் பெற்றிட்டாலும் கீர்த்திவானாவான்.

1,4,9க்குடையவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கலந்து தம் தம் வீட்டை நோக்குவாராயின் அதிர்ஷ்டம் ஆயுள் பெருகும்.

ஒரு கேந்திராதிபதியும் ஒரு கோணாதிபதியும் சம்பந்தப்பட்டால் நல்ல அதிர்ஷ்டம்

ஒரு கிரகம் ஜாதகத்தில் நல்ல ஆதிபத்யம் பெற்று நல்ல ஸ்தானத்தில் பலம் பெற்று அமைந்திருப்பின் அக்கிரகம் குறிப்பிடும் வயதிலிருந்து முன்னேற்றம் ஏற்படும்.

சூரியன் 22, சந்திரன் 24, செவ்வாய் 28, புதன் 32, குரு 16, சுக்கிரன் 25, சனி 36, இராகு 42, கேது 48

(2.ம்) சூரியன் நல்ல பலம் பெற்று 9இல் இருந்தாலோ, 9ஆம் அதிபத்தியம் பலம் பெற்றிருந்தாலோ அவருக்கு 21 வயது முடிந்தபின் 22 வயதிலிருந்தே அதிர்ஷ்டம் துவங்கும் எனலாம். அதேபோல மிதுனஇலக்கினத்திற்கு 5ஆம் அதிபத்தியம் பெறும் சுக்கிரன் 10இல் உச்சம் பெற 25வயது முதல் அதிர்ஷ்டம் துவங்கும் எனலாம்.

### பத்தாம் பாவகம்

10ஆம் வீட்டிற்கு சூரியன், புதன், குரு, சனி காரக கிரகங்களாவர் 10ஆம் அதிபதி 3,6,8,12ஆம் அதிபதிகளை விட வலுவிழுக்கக் கூடாது. வலு விழுந்தால் நல்ல நிலையை அடைதல் இயலாது. 10ஆம் அதிபதி 3,6,8,12இல் இருப்பது பலவீனமே

செவ்வாய் 10ஆம் ஆதிபத்தியம் பெற்று 3இல் இருந்தாலும், சனி 10ஆம் ஆதிபத்தியம் பெற்று 8இல் இருந்தாலும் தீமை இல்லை. காரணம் 3லிருக்கும் செவ்வாய் 8ஆம் பார்வையாகவும், 8இல் இருக்கும் சனி 3ஆம் பார்வையாகவும் 10ஆம் இடத்தைப் பார்ப்பதே

ஒரு கிரகம் பாபக் கிரகமானாலும் தன் வீட்டைத் தான் பார்ப்பதால் தீமை இல்லை. நன்மையேயாகும்.

இலக்கினாதிபதி 10இல் இருந்தால் கௌரவம் அந்தஸ்து உயரும், 10ஆம் அதிபதி இலக்கினத்திலிருந்தாலும் நன்மையே தரும்.

10ஆம் அதிபதி 9லும், 9ஆம் அதிபதி 10லும் பரிவர்த்தனை பெற அதிர்ஷ்ட வாழ்வு. 9,10க்குடையவர் சேர்ந்து 9லும் (அ) 10லும் அமைவது நல்லது அல்லது இந்த 9,10க்குடையவர் சேர்ந்து கேந்திர கோணங்களிலமைய யோகமாகும்.

5ஆம் அதிபதி 10லும், 10ஆம் அதிபதி 5லும் இவர்கள் கேந்திர கோணங்களில் இணைவது நல்லது யோகம் தரும்.

எந்த வகையிலும் கேந்திர கோணாதிபதிகளின் சம்பந்தம் யோகமாகும். 10இல் சுபரிருந்தாலும், 10ஆம் அதிபதி ஆட்சி உச்சம் பெற்று கேந்திர கோணங்களில் சுபர் சம்பந்தமானால் நல் அந்தஸ்து பெறுவார்கள்.

சூரியன் செவ்வாய் 10இல் இருக்க, 10ஆம் அதிபதி பலம் பெற்றிருக்க சிறந்த நிர்வாகி எனப் புகழ் பெறுவான்.

10இல் சூரியனோ (அ) செவ்வாயோ அமையப் பெற்றவர்கள் படிப்படியாக முன்னேறுவார்கள். ஆனால் தந்தையின் ஆயுளுக்கு நல்லதல்ல. பாபர் சம்பந்தமிருப்பின் தீமை பயக்கும்.

10இல் சனி இருப்பது நல்லது.

6,8,12க்குடையவர்கள் 10இல் இருப்பது தரத்தைக் குறைத்துவிடும். தந்தையின் ஆயுளை நிர்ணயிக்க சூரியனின் பலத்தையும் கவனித்தே முடிவுக்கு வர வேண்டும்.

7இல் பாபர்கள் இருப்பது, 7ஆம் அதிபதி 6,8,12இல் அமைவது கூட்டுத் தொழிலுக்காகாது. 10ஆம் இடத்தை எடைபோடும்போது சூரியன், புதன், சனி, குரு கிரக பலன் நிர்ணயத்தோடு முடிவு செய்ய வேண்டும்.

இலக்கினம் போலவே சந்திரனுக்கும் முக்கியத்துவம் கொடுத்தே 10ஆம் இட பலன் நிர்ணயம் செய்ய வேண்டும்.

**பதினோராம் பாவகம்**

பாபக் கிரகங்களோ (அ) சுபக் கிரகங்களோ 11லிருக்கலாம். பாபக் கிரகங்கள் 11இல் தனலாபமளித்தாலும் தந்தைக்கும் மூத்த சகோதாரருக்கும் குழந்தைகளுக்கும் நலமல்ல.

11இல் அமரும் கிரகங்கள் எந்த ஆதிபத்தியம் பெற்றவர்கள் என்பதையும், 11ஆம் அதிபதி எந்த வீட்டில் இருக்கிறார் என்பதையும் கவனித்தே தனலாப வழியை நிர்ணயிக்க வேண்டும்.

உதாரணமாக இலாபாதிபதி 5இல் இருந்தால் கல்வித்துறை, அதிகாரம் குழந்தைகள் மூலமாக அதாவது 5ஆம் இடத் தன்மையில் இலாபம் கிட்டும்

7ஆம் இதிபதி 11இல் இருந்தால் மனைவி மாமனார், கூட்டுத் தொழில் வழி இலாபம் கிடைக்கும்.

ஜாதகத்தில் பொருளாதார நிலவரம் முக்கியமானது

2வது வீடு சேமிப்பு நிதியையும்

4வது வீடு ஸ்திர சொத்து வழி வரவும்

8வது வீடு உயில் சட்ட ரீதியான வரவும்

9வது வீடு பொதுவான அதிர்ஷ்டமும்

10வது வீடு சுய முயற்சியாலும்

11வது வீடு வருமானத்தையும்

சுட்டிக் காட்டுகிற இடங்களாகும் இந்த இடங்களைச் சீர்தூக்கிப் பார்த்து பலன் நிர்ணயம் செய்ய வேண்டும்.

கீழ்க்கண்ட வீட்டதிபர்களின் தொடர்பு ஒருவருக்கொருவர் இருப்பின் பணம் சேரும் யோகம் உண்டு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1+2 | | | | | |
| +4 | 2+4 | | | | |
| +5 | +5 | 4+5 | | | |
| +9 | +9 | +9 | 5+9 | | |
| +10 | +10 | +10 | +10 | 9+10 | |
| +11 | +11 | +11 | +11 | 9+11 | 10+11 |

2ஆம் அதிபதி 10இல் பலம் பெற்றாலும் 4,9 ஆம் அதிபதிகள் 2இல் அமைந்தாலும் 11ஆம் அதிபதி 2ல் இருந்தாலும் 2ஆமதிபதி 11இல் இருந்தாலும் 2, 1ஆம் அதிபதிகள் கேந்திரங்களில் பலம் பெற்றாலும் நல்ல யோகம் உண்டு.

அடுத்து கீழ்க்கண்ட யோகங்கள் மேற்கூறியதற்கு மாறாகத் தரித்திர (வறுமை) யோகம் தரும்.

| | | |
|---|---|---|
| 1+6 | 10+6 | 5+12 |
| 2+6 | 11+6 | 6+12 |
| 3+6 | 12+6 | 7+12 |
| 4+6 | — | — |
| 5+6 | 1+12 | 8+12 |
| 7+6 | 2+12 | 9+12 |
| 8+6 | 3+12 | 10+12 |
| 9+1 | 4+12 | 11+12 |

அடுத்து கீழ்க்கண்ட யோகங்கள் மேற்கூறியதற்கு மாறாகத் தரித்திர (வறுமை) யோகம் தரும்.

இலக்கினாதிபதியோ, அஷ்டமாதிபதியோ குருவாக இருந்து, பாக்கியாதிபதி குருபகவானை விடப் பலவீனமடைந்து (அ) அஸ்தமனமடைந்து இலாபாதிபதியும் பலவீனமடைந்திருக்க இலக்கினத்திற்குக் கேந்திரத்தில் அமையாது இருக்கத் தரித்திரம்.

2) 5,6,8,11,12ஆம் இடங்களில் செவ்வாய், புதன் குரு (அ) சனி நீசமடைந்தோ அஸ்தமன மடைந்தோ இருப்பின் யோகமில்லை வறுமை ஏற்படும்.

3) இலக்கினாதிபதியை விட 12ஆம் அதிபதி பலம் பெற்றிருப்பது அல்லது 12ஆம் அதிபதி அஸ்தமனம் நீசம் போன்ற பலவீனமடைந்திருப்பதும் 6,8,12,5,10 ஆம் இடங்களில் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி எப்படி வரிசையில் அமைந்திருந்தாலும் வறுமை ஏற்படும்.

4. 1,5,7,9,11,10ஆம் இடங்களில் ஸ்தான பலம் இல்லாமல் பகை நீசம் அஸ்தமனம் போன்ற நிலையில் சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் அமைந்திட கன்னி, மகர லக்கினத்தில் பிறந்தவன் ஏழையாக இருப்பான்.

5. ஸ்திர இராசி இலக்கினமாயமைய கேந்திர கோணங்களில் சுபர் அமராது பாபர்கள் மட்டு அமர்ந்திருந்தால் தரித்திரயோகம். **தொடரும்...**

# ஜோதிடவியலில் பாலாரிஷ்டம்



**என்.கே.சேகர்** D.A., DHA., DVS., DNS., DBS.,
செல்: 99429 84163

ஜோதிடவியல் ரீதியாக பலன் அறிய வேண்டி ஒரு குழந்தையின் ஜனன கால ஜாதகத்தை பார்க்கின்ற போது முதலில் அக்குழந்தைக்கு ஆயுள்பலம் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஏனென்றால், எத்தனை யோகம் பெற்ற ஜாதக அமைப்பு உள்ள குழந்தை ஆனாலும், அத்தனை யோகப் பலன்களையும் அனுபவிக்க ஆயுள்பலம் நன்றாக இருக்க வேண்டும் அல்லவா. மாறாக ஆயுள்பலம் இல்லாத குழந்தையாக இருந்தால், அத்தனை யோகப் பலன்களும் பயன் அற்று போய்விடும் அல்லவா. அதனால்தான் முதலில் அக்குழந்தைக்கு ஆயுள்பலம் நன்றாக உள்ளதா என்பதை கண்டறிய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆயுள்பலம் இல்லாத ஜாதக அமைப்பினை பாலாரிஷ்டம் ஜாதம் என்கின்றனர்.



பொதுவாக, பிறந்த எல்லா குழந்தைகளுக்கும் 12 வயதுவரை பாலாரிஷ்டம் காலம் என்று சொல்வது உண்டு. அதாவது, 12 வயதுவரை அக்குழந்தையின் ஆயுளுக்கு ஆபத்து வர வாய்ப்பு அதிகம் உண்டு என்பது இதன் பொருள். ஆயுள்பலம் வலுவாக உள்ள ஜாதக அமைப்பு கொண்ட குழந்தைக்கு வரும் ஆபத்துக்கள் விலகிவிடும் என்றும் கூறியுள்ளனர்.

ஜாதக அமைப்பில் குறிப்பிட்ட சில அமைப்புக்களை உடைய ஜாதகத்தை பாலாரிஷ்டம் ஜாதகம் என்றும் அத்தகைய பாலாரிஷ்டம் அமைப்பு உள்ள ஜாதகத்திற்குரிய குழந்தை நீண்ட நாட்கள் உயிர் வாழ்வது என்பது அரிது என்றும் கூறியுள்ளனர்.

**பாலாரிஷ்டம் ஏற்படுத்தும் கிரக அமைப்பு முறைகளில் சில...**

1. குழந்தையின் ஜென்ம இலக்கினம் விருச்சிகமாக இருந்து, அதற்கு 3ஆம் இடத்திலும், 6ஆம் இடத்திலும் பாப கிரகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கும் அமைப்பினை பெற்ற ஜாதகத்திற்குரிய குழந்தை உயிர் பிழைக்காது என்று கூறியுள்ளனர்.

2. குழந்தையின் ஜென்ம இலக்கினத்திற்கு 6,8 ஆகிய இடங்களில் சந்திரன் இருந்து சுப கிரகங்களின் பார்வ சந்திரன் மீது பட்டால் அக்குழந்தை நான்கு மாதகாலம் உயிருடன் இருக்கும் வாய்ப்பு உண்டு என்றும் கூறியுள்ளனர்.

3. செவ்வாய் 7லும் சூரியன் 8லும் ஆக இருந்தால் அக்குழந்தைக்கு அற்ப ஆயுள் என்றும் கூறியுள்ளனர்...

4. செவ்வாய் பலம் குறைந்து இலக்கினத்தில் இருந்தாலும், 6,8ஆகிய இடத்தில் சனியுடன் கூடி இருந்தாலும் அக்குழந்தை உயிருடன் இருப்பது அரிது என்றும் கூறியுள்ளனர்.

5. தேய்பிறை சந்திரன் பாப கிரகங்களுடன் சேர்ந்து இலக்கினத்திலோ, 8ஆம் இடத்திலோ இருக்கும் அமைப்பினை உடைய குழந்தை பிறந்தவுடன் இறந்துவிடும். ஆனால், சுப கிரகங்களின் பார்வை இருந்தால் ஆபத்து விலக வாய்ப்பு உண்டு என்கின்றனர்.

6. சந்திரன் சுப கிரகங்களுடன் சேர்ந்திருந்த போதிலும், சூரியன் சுப கிரகங்களின் பார்வையின்றி 9ஆம் இடத்தில் இருந்தால் அது பாலாரிஷ்டம் ஜாதகம் ஆகும் என்றும் கூறியுள்ளனர்.

பாலாரிஷ்டம் ஜாதகம் என்பதற்கு மேற்கண்ட வகைகள் மட்டும் அல்லாது, மேலும் பல்வேறு வகையான கிரக அமைப்பு முறைகளையும் குறிப்பிட்டு வைத்துள்ளனர். நம் முன்னோர். அத்தகைய அமைப்பு முறைகளையும் நன்கு ஆராய்ந்து தெளிவாக புரிந்துக்கொண்டு பலன் அறிவதோடு, ஆயுள் ஸ்தானமாகிய 8ஆம் இடம், 8ஆம் இடத்தின் அதிபதி, ஆயுள் காரகனாகிய சனி, உடல் காரகனாகிய சந்திரன், இலக்கினாதிபதி இப்படி பல கிரகங்களின் பலன்களையும், மற்ற இடங்களின் (பாவம்) பலன்களையும் நன்கு ஆராய்ந்து சீர்தூக்கி பார்த்து குழந்தையின் ஆயுள் பலத்தை நிர்ணயிக்க வேண்டும்.

எனவேதான், குழந்தையின் ஜாதகம் பாலாரிஷ்டம் ஜாதகமா, இல்லையா என்பதை முதலில் தெரிந்துக் கொண்டு, ஆயுள் பலத்தை அறிந்துக் கொண்டு, அதன் பிறகே மற்ற யோக போகங்களை பார்த்து பலன் கூற வேண்டும் என்கிறார்கள். நம் முன்னோர் கூறிய கருத்தை நாம் சிரமேற்கொண்டு செயல்படுத்தி சிறப்படைவோம்.

ஏப்ரல் மாததொடர்ச்சி...

# மனித வாழ்வில் சனி செவ்வாயின் விளையாட்டு

| 8 சனி—உபய மண்டலம் செவ்வாய்—ஸ்திர மண்டலம் | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | சனி | செவ்வாய் | பாதிக்கும் இராசிகள் |
| 1. | சரம் | சரம் | 4—10 பார்வை |
| 2. | சரம் | ஸ்திரம் | உபயம் |
| 3. | சரம் | உபயம் | உபயம் |
| 4. | ஸ்திரம் | சரம் | சரம் |
| 5. | ஸ்திரம் | ஸ்திரம் | சமசப்தம், 4—10 பார்வை |
| 6. | ஸ்திரம் | உபயம் | சரம் |
| 7. | உபயம் | சரம் | ஸ்திரம் |
| 8. | உபயம் | ஸ்திரம் | ஸ்திரம், உபயம் |
| 9. | உபயம் | உபயம் | உபயம், சமசப்தமப் பார்வை, 4—10 பார்வை |

| 9 சனி—உபய மண்டலம் செவ்வாய்—உபய மண்டலம் | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | சனி | செவ்வாய் | பாதிக்கும் இராசிகள் |
| 1. | சரம் | சரம் | சரம் |
| 2. | சரம் | ஸ்திரம் | — |
| 3. | சரம் | உபயம் | சரம்,உபயம் |
| 4. | ஸ்திரம் | சரம் | சரம், ஸ்திரம் |
| 5. | ஸ்திரம் | ஸ்திரம் | ஸ்திரம் |
| 6. | ஸ்திரம் | உபயம் | — |
| 7. | உபயம் | சரம் | — |
| 8. | உபயம் | ஸ்திரம் | ஸ்திரம், உபயம் |
| 9. | உபயம் | உபயம் | உபயம் |




**ஆர். கோகுலகிருஷ்ணன்**

**செல்: 97895 27257**


| குரு – செவ்வாய் | | குரு – சனி | |
|---|---|---|---|
| புனர்பூசம் — சித்திரை — 8 = (8+0) — 8 | | புனர்பூசம் — பூசம் — 2 = (2+0) — 2 | |
| புனர்பூசம் — அவிட்டம் — 17 = (1+7) — 8 | 8 | புனர்பூசம் — அனுஷம் — 11 = (1+1) — 2 | 2 |
| புனர்பூசம் — மிருகசிரிஷம் — 26 = (2+6) — 8 | | புனர்பூசம் — உத்திரட்டாதி — 20 = (2+1) — 2 | |

### குரு பார்வை

இவ்வாறாக சனியும், செவ்வாயும் ஒரு பாவகத்தை சர, ஸ்திர மற்றும் உபய மண்டலங்களில் உள்ள சர, ஸ்திர மற்றும் உபய இராசிகளிலிருந்து தங்களது பார்வையின் மூலம் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அவ்வாறு அமையப் பெற்ற ஜாதகத்தில் பாதிப்படைந்த பாவகத்தை குரு பார்வையிடும்போது குருவின் பார்வைக்கு பலமில்லை எனக் கூறலாம். ஏனெனில் இவ்வாறு பாதிப்படைந்த ஜாதகங்களில் பொதுவாக குரு வலுவிழந்தே காணப்படுவார். குரு பார்வை பலமிழந்து இருப்பதை நாம் எண் கணிதம் மற்றும் நட்சத்திரக் கணக்கீட்டின் மூலம் அறியலாம். மேலும் குரு — செவ்வாய் மற்றும் குரு — சனி இவற்றில் நட்சத்திரக் தொடர்பினைக் கீழே காணலாம்.

இதே போன்று குருவின் அடுத்தடுத்த நட்சத்திரங்களை செவ்வாய் மற்றும் சனியின் நட்சத்திரங்களுடன் கணக்கிடும் பொழுது 8 மற்றும் 2—ஐப் பிரதிபலிக்கின்றன.

நட்சத்திரக் கணிதம் மற்றும் எண்கணிதம் — ஓர் கணக்கீடு

**நட்சத்திரக் கணக்கீடு:** சனி—செவ்வாய் மற்றும் செவ்வாய் — சனி, இவைகளின் நட்சத்திரத் தொடர்பின் மூலம் 7 மற்றும் 4 என்ற இ—ரு எண்கள் வருகிறது. இந்த எண்களை அசுவினி முதல் எண்ணும் பொழுது, குருவின் நட்சத்திரமான புனர்பூசமும், சந்திரனின் நட்சத்திரமான ரோகிணியும் வருகிறது. மேலும் குரு — செவ்வாய் மற்றும் குரு — சனி நட்சத்திரத் தொடர்பில், 8 மற்றும் 2 என்ற இரு எண்கள் வருகிறது. இந்த எண்களை அசுவினி முதல் எண்ணும் பொழுது, சனியின் நட்சத்திரமான பூசமும், சுக்கிரனின் நட்சத்திரமான பரணியும் வருகிறது.

இந்த நட்சத்திர கணக்கீட்டின் படி, நட்சத்திர அதிபர்கள் பகைவர்களாகின்றனர். அதாவது சனி — செவ்வாய் மற்றும் செவ்வாய் — சனி கணக்கீட்டில் வந்த குருவும் சந்திரனும், குரு — செவ்வாய் மற்றும் குரு — சனி கணக்கீட்டில் வந்த சுக்கிரனுக்கும் சனிக்கும் பகைவர்களாகின்றனர்.

### எண் கணித கணக்கீடு

செவ்வாய் — சனி மற்றும் சனி — செவ்வாய் எண் கணக்கீட்டின் படி, இராமுவின் எண்ணான 42—ம் கேதுவின் எண்ணான 7—ம் வருகிறது.

இதே போல் குரு — செவ்வாய் மற்றும் குரு—சனி எண் கணக்கீட்டின் படி, கனியின் எண்ணான 2—ம், சந்திரனின் எண்ணான 2—ம் வருகிறது. குரு — செவ்வாய் மற்றும் குரு—சனி எண் கணக்கீட்டின் படி வந்த சனியும் சந்திரனும், செவ்வாய்—சனி மற்றும் சனி—செவ்வாய் எண் கணக்கீட்டின் படி வந்த இராகு மற்றும் கேதுவை விட சேர்த்து பலத்தில் குறைந்தே காணப்படுவர். எனவே குருவின் பார்வைக்கு பலம் மிக்க குறைவு என்று கூறலாம். ■

# இப்போது விற்பனையில்



குருவருள்
ஜோதிடம்
No.1 ஜோதிடத் திறனாய்வு மாத இதழ்
ஆகஸ்ட் 2015
ஸ்ரீ குரு: 7 அருள்: 3 மன்மத ஸ்ரீ ஆடி - ஆவணி
ரூ.30/-
ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் யோக கிரக நிலைகள்
தவறான பாதைக்கு தடம் மாறிடும் பெண்கள் தரம் கெட்ட நிலைகளை குறி காட்டிடும் கிரகங்கள்
கிரகங்களின் ஷட் பலம் நிர்ணயம்
வாஸ்து குறைபாடுகளை போக்கும் வழி முறைகள்
புராணங்கள் புலப்படுத்தும் ஜோதிட சூட்சும ஆதித்யமங்கள இரகசியம்